Annual Subscription Rs. 6 Vol. 7. No. 48 3rd January 1937. Price 2 As

சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

THE SWADESAMITRAN ILLUSTRATED WEEKLY

திருக்கழுக்குன்றம்.



மூன்று தலைமுறைகளாக
தாய் தன் மகளுக்கு

வுட்வர்ட்ஸ்
கிரைப் வாடர்

எப்படி குழந்தைக்கு
சுகம் தருகிறதென்று சொல்லுகிறாள்.

WOODWARD'S
GRIPE WATER

W. WOODWARD LTD.. LONDON. ENGLAND

லண்டனில்

ஜெர்மன் ஆடைகள் காட்சி

ஜப்பானில் நடைபெறும் “சிக்கோஸன்” உத்ஸவத்தில் சிறுவர் சிறுமியர் புதிய உடை தரித்துச்சென்ற காட்சி. இதிலிருந்து இவர்கள் கடற்படை உடை ஸோல்ஜர்கள் உடை முதலியவற்றை விரும்புவது தெரியவருகிறதென்றும், பெரிய மகா யுத்தம் சீக்கிரத்தில் வந்துவிடுமென்றும் ஜப்பானிலிருந்து இப் படத்தையனுப்பியுள்ள நிருபர் தெரிவிக்கிறார்.

செப்பிடு வித்தை

—:[o]:—

(கெ ராமனாதன்)

சண்பகப்பட்டி எங்கள் கிராமம். அது காவிரிக்கரை மருங்கேயுள்ளது. அதைச் சுற்றிலும் ரமணீயமான தோப்புகள். வடகோடியில் சிறு நந்தவனம். அதைச் சூழ்ந்து கொழுத்த பசுமை மிகுந்த பொழில்கள். நீரோட்டங்கள் பல அதன் எழிலை அதிகப்படுத்தின. எங்கு பார்த்தாலும் நறுமணங் கமழும் மலர்கள் செறிந்த பூஞ்செடிகள். ஆங்காங்கே தழைத்து இனிய நிழல் கொடுக்கும் சிறு அசோக விருக்ஷங்கள். இது தான் கனகச் சோலை. கோடைக்காலம். வெய்யில் கடுமையாக விருந்தது. மணி சுமார் நான்கிருக்கும். தனியாக ஒரு மரத்தடியில் உட்கார்ந்திருந்தேன். குளிர்ந்த பூந்தென்றல் என்னைப் பரவசபபடுத்தியது.

என் மனம் நெடுநாளைய நிகழ்ச்சிகளைப் படம் பிடித்துக் காட்டிக் கொண்டிருந்தது. எனதாருயிர் நண்பன் சுந்தரத்தின் வாழ்க்கைச் சரிதம் என் கவனத்தை ஈர்த்தது. அது என் மனத்தே சென்றதும் தாங்கமுடியாத வருத்தம் உளைகின்றது. என் உடல் வேர்த்தது. குளிர்ந்த காற்று என் நெஞ்சத்தைச் சில்லிடச் செய்தது. என்னையறியாமலே என் தேகம் வெட வெடவென்று நடுங்கியது. அவனது வாழ்க்கையில் நடந்த செப்பிடு வித்தை அத்தகைய பயங்கரமானது. இப்பொழிலே அவன் இன்பக் கனவுகள் கண்டவிடம். மனம் குழப்பமடைந்தது. உடனே எழுந்தேன். சிறிது உலவியபிறகு வீடு சென்று நித்திரை செய்தேன். எனினும் மனச்சாந்தி ஏற்படவில்லை. அவன் வாழ்க்கை மர்மத்தைக் கூறுவிடில் மனநிம்மதி யேற்படாது. அவன் வாழ்க்கையில் நடந்த செப்பிடு வித்தை, புயல்கள் ஒரு பெருந்த உதாரணமாக இன்றும் இலங்குகிறது.

சுந்தரம் எங்களூர் சாமினாதய்யரின் புதல்வன். சாமினாதய்யர் ஓர் மிராசுதார். அவருக்கு ஒரே தங்கை. அவள் கணவன் காலஞ் சென்று விட்டார். அவளுக்கு ஒரே பெண். அவள் பெயர் ஜானகி. சுந்தரம் ஜானகியைவிட சுமார் ஐந்து வயது பெரியவன். இருவரும் தோழர்கள். ஒருவரையொருவர் பிரிந்திருக்க மாட்டார்கள். இருவரும் சோலையில் விளையாடுவார்கள்.

“நான்தானே ஒன்னைக் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்” என்பான் சுந்தரம்.

“போயும் போயும் இந்த அசட்டு அம்மாஞ்சியைத் தானாக்கும்”

“என்ன? என் மூஞ்சியைப் பாத்துச்சொல்லு”

“ஒம் மூஞ்சியைப் பாத்துத்தான் கல்யாணம் பண்ணிக்கணும்” என்று மூஞ்சியைத் தூக்கிப் பார்ப்பாள் ஜானகி.

இருவர் கண்களும் குறும்பாக ஒருவரை ஒருவர் பார்க்கும். இருவர் கன்னங்கள் சிவப்பச் சிரிப்பார்கள். இந்த ஆனந்தக் காக்ஷியை இரண்டு கண்கள் பார்த்துக்கொண்டிருக்கும். அவைதான் இந்த துர்ப்பாக்யனின் கண்கள். கனகச் சோலைக்கே அவர்கள் இன்ப மணமளித்து வந்தார்கள். அவர்களின் ஆம்படையான், பெண்டாட்டி விளையாட்டும், கல்யாணக் கோலமும், என்னை அவர்கள் புரோகிதர் முதல், கௌரி கல்யாணமே பாடும் பாட்டி வரைக்கும் வேஷம் போட்டு வேடிக்கை பார்ப்பதும் இன்றும் என் மனக் கண்ணே நிலவுகிறது.

குழந்தைப் பருவம் கடந்து சிலவாண்டுகளாயின். இப்பொழுது ஜானகிக்கு வயது பதின்மூன்று. சந்திர முகம். கயல் வெட்கும் கண்கள். கருத்து நெய்த்துச் சுருண்ட கருநாகம் போன்ற குழல். கன்றுக்குட்டி போன்ற சுறு சுறுப்பு. சுந்தரம் பதினெட்டு வயது யுவன். பளபளப்புடன் கருத்து விளங்கிய முடி கிராப்பு செய்யப்பட்டிருந்தது. கம்பீரமான முகம். பரந்த நெற்றி. சிறந்த தேகக்கட்டு புயங்கள் சிலம்பவித்தையில் பழக்கப்பட்டதுபோன்று திரண்டு விளங்கின. கந்தர்வனைப் போல் விளங்கினான். இண்டர்மீடியட் பாஸாகி பி. ஏ. முதல் வகுப்பில் படித்து வந்தான். பெற்றோர் அவர்களது குழந்தைப் பருவ நட்பை வாழ்க்கை முழுதும் சாச்வதப் படுத்த நினைத்தனர். மறுபடியும் ஒரு இன்பக் காக்ஷி கனகச் சோலையில் ஒரு கொடி ஒரு மரத்தைத் தழுவுவது போல் ஜானகி சுந்தரத்தினருகே நிற்கிறாள்.

“ஜானா! ஒன்னைக் கல்யாணம் பண்ணிண்டு என்னபாடு படுத்தறேன் பாரு” என்கிறான் சுந்தரம் அவள் நெற்றிமேல் ஓடிவரும் குறும்புச் சுருள்களை நீக்கிக்கொண்டே.

“அசட்டு அம்மாஞ்சிக்கு வீராப்புப் பேச்சு வேறே. எத்தனை கெட்டிக்காரத்தனமா ஒங்களை ஆட்டிவக்கறேன் பாருங்கோ.”

இன்றும் அத்தேன் சொட்டும் மொழிகள் என் காதில் ஒலித்துக்கொண்டிருக்கின்றன. “எல்லா வேடிக்கையும் நான் பார்க்கப் போறேனே” எனக்கூவிக் கொண்டே சமீபத்தில் சென்றேன். காதலர் திடுக்கிட்டனர்.

“அடேப்பா நீதானா இத்தனை கலாட்டா பண்ணியூட்டே” எனக் கூறிச் சிரித்தாள் ஜானகி. அவள் கரிய விழிகள் குறும்பாக நோக்கின.

* * * *

மூன்று வருஷங்கள் கடிது சென்றன. சுந்தரம் சென்னையில் வசிக்கிறான். ஜானகியும் கூட வசிக்கிறாள். அவன் பி. ஏ. பாஸாகிவிட்டான். பி. ஏ. என்றால் பிழைப்பது எப்படியென்று வேலையின்றி யுழலும் கூட்டத்தைச் சேர்ந்தவனல்ல. ஒரு பிரபல பத்திரிகையின் உதவி எழுத்தாளன். பெரிய சீர்திருத்த வாதி. பட்டிக்காட்டில் வாழ்ந்துவந்த ஜானகியைப் பக்கா மெட்ரொபாலிடன் பெண்மணியாக்கிவிட்டான். ஜானகியும் சிறந்த அறிவுள்ளவள். சிரிப்புச் சுவை, இலக்கிய மணம் சொட்டும் கட்டுரைகள் தெள்ளிய தமிழில் எழுதும் ஆற்றலுடையவள். விலகி வீட்டிலோர் பொந்தில் வளர்வதை விரவிலொழிக்கும் வீரப் பெண்கள் குழாத்தைச் சார்ந்தவள். வெள்ளையர் நாகரீகத்தைக் கைப்பற்றுபவளா? அன்று. மனைமாட்சி மிகுந்து இல்வாழ்க்கைக்கு ஊன்றுகோலாய்த் திகழ்ந்தாள். சுந்தரம் புதுமைப் பெண்மையின் தன்மை யறிந்தோன். அதனை மறந்து அவர்களைச் செக்கு மாடுகள் போலவும் பஞ்சுத் தலையணையாகவும் கருதி பாவிப்பவர்க்கு ஒரு வழி காட்டியாகத் திகழ்ந்தான்.

அவனது வாழ்க்கை இன்பம் சிகரத்தை அடைந்திருந்தது. நான் சிறிது வியாபார விஷயங்களில் ஈடுபட்டு, திருச்சியிலும் கிராமத்திலுமாகவிருந்து வந்தேன். ஒருதரம் பட்டணத்துக்குப் போயிருந்தேன். நான் போன சமயம் சுந்தரம் கடைக்குப் போயிருந்தான் ஜானகி சமையலில் முசுவாய் ஈடுபட்டிருந்தாள். புடவைக் கொசுவம் இடைஞ்சலாயிருந்ததால் அதை இடுப்பில் சொருகிண்டு ரொம்ப சுறு சுறுப்பா சமையல் செய்துண்டிருந்தா. புகை கண்ணைக் கரிக்க கண்ணில் மை கரைந்திருந்தது. நெற்றியில் வியர்வை. குமுட்டிலேந்து கரி பறந்து முகத்திலே வேஷம். கண்ணாஞ்சனங்கரைந்து கஞ்சனக் கதுப்புக் கருத்திருந்தது. என்னைக் கண்டவுடன் மனக்களிப்பு சிரித்த முகத்துடன்

“வா, அண்ணா வழி தெ[illegible]ததா” என்றாள். அவ[illegible] சிவந்தது. [illegible] தலைவியின் மடு[illegible] கணவனுக்குச்[illegible] வில் முனை[illegible]

டு இரும்பூது கொண்ட பிலித்தாயை ஒத்திருந் ன் நான்.

எப்படா வந்தே ராமு'' று கேட்டுக்கொண்டே நான் சுந்தாம்.

''இப்பொழுதுதான் வந ன்'' எனக்கூறி யோக ஷமங்கள் விசாரித்தேன்.

ஜானு, என்ன பேசலே ன்னு, அண்ணவை, வேடி கை பாக்கர அண்ணவை றந்தூட்டாளா என்ன?''

''இல்லே வந்தவுடன் பேசி ள்''

'ராமு, ஜானு எப்படி?''

''எப்பா, பக்கா சிட்டிமே ம்'' ''அதோடே அவ கிருக க தர்மம் மறந்துபோன றுந்தொக்கையைக்கூட குடும் பப் புடுச்சு இழுத்தூண்டு ந்து மூலேலே தள்ளிப்பிட் டு''

என்ன, ஒங்களேத்தானே, றுனே பேசீண்டிருக்கேளே; பசாமை ரெண்டு நாள் லீவு முதிப் போட்டுடுங்கோ, அண்ணுவோடே குதுகலமா இருக்கலாம்.''

''மறு பேச்சேது, மாட்டம் ஆர்டர்தான்'' எனக் கூறி அவள் கண்ணுடி போன்ற கன் ங்களைக் கிள்ளினுன் சுந்தரம்.

''வெக்கமில்லே விளையாட துக்கு''

''என்னடி வெக்கம், அண்ணு முன்னுலே அவன் ன் வேடிக்கைபாக்கரவ ச்சே.''

பேசி... பயனென்ன! என் வாழ்க்கையில் இந்திர போகத் தை. அந்த இரண்டு நாட்களி லும் கண்டேன். ஜானகி மான் போன்று விறு டு வென்று சமையல் முத யவைகளைக் கவனிப்பதை யும், ''அண்ணுக்கு அதுபிடிக் கும் இது பிடிக்கும்'' என்று பலவிதமான பக்ஷணங்களைச் செய்வதிலும் கண்டோர் திரு ஷ்டிப்படுவர். உள்ளம் கொள்ளை கொள்ளும வண்ணம் ஆனந்த மான வார்த்தைகளை அள்ளிச் சொரிந்த வண்ணமிருந்தாள். ண்பன் சுந்திரமும் சேர்ந்து கொண்டு இருவரும் என்னை இன்பவெள்ளத்தில் திளைத்து வந்தார்கள். இரண்டு நாட்கள் றந்தன.

''இன்னும் ஒருவாரம் தங் ச் செல்லுங்களேன். வாரா வர்...'' எனக்குழறினள் னு.

''இல்லே ஜானு! அவசர ாலி பல இருக்கு. இனிப்பட் வது ...கு வந்தப்பெல்லாம் வில்போ... ...'' புருஷனும் ...கொடு ...யும் பிரியாவிடை... னர்.

* * *

...ந்தரத்தின் திறமை... ...ம் புக ...யது. பம்பாயிலும் பரவ... ...ணர் ...ரிய எழுத்தாளன். உழுங்கு ...தும்ப எழுதுபவன். ...500 ...ிரபல பத்திரிகையில் ...சி ...சம்பளத்தில் கூட்டு ஆ ...ளைகச் சென்றான். ...

கள் இன்ப வாழ்வின் பயன் ஓர் ஆண் குழவியின் உருவில் அமைந்தது. அவனுக்கு பாலு என்று பெயராம். ஜானுதான் அடிக்கடி எனக்குக் கடிதம் எழுதுவாள். அவ்வளவும் இனிய அன்பு ததும்பும் வார்த் தைகள் ஒவ்வொரு வார்த்தை யிலும் இதயத்தினின்றும் பீறி ட்ட உணர்ச்சி தாண்டவ மாடும்.

''அண்ணு! பாலு ரொம்ப புலே துடுக்குக் காரனுயிருக் கான். பெரிய பேச்சு பேச ருன். 'காந்தின்னு ஒத்தராம். அவர் மகாப் பெரியவராம்; பொக்கைவாயாம்; தினந் தினம் முக க்ஷவரமாம். மகாத் மாவாம்' 'என்றெல்லாம் சொல் லுருன். 'ராமு மாமா வரட்டும. குதிரை சவாரி விடறேன். பட்டிக்காட்டு மாமா' என்று பேச்சுச் சொரியருன்.''

இதெல்லாம் பார்த்துப் புளகாங்கிதமடைந்தேன். கூடு மானுல் ஒரு முறை பம்பாய் செல்லவும் தீர்மானித்திருந் தேன். நண்பன் சுந்தரமும் பல கடிதங்கள் எழுதுவான். இத்தகைய இன்ப தம்பதிக ளால் இழுக்கப்படும் இல்லறச் சகடம் ஏன் இனிது ஓடாது ஆனுல் இப்படிக்கொத்த வாழ்க்கையிலும் பூகம்பம். விதி செய்யும் விளைவு.

ஒரு ஆண்டு கடந்தது வெகு நாட்களாகக் கடிதம்வரவில்லை. கரைதாங்காக் காதலுடைய யான் கவலையுறமாட்டேனு திடீரென்று ஒரு நாள் கடிதம் வந்தது. உள்ளம் நெகிழ்ச்சி யுடன் நோக்கினேன். அது ஜானு வரைந்த கடிதம். கண் ணீர் கறைபட்டிருந்தது. கண்டு மனங் கலங்கினேன். அது பின் வருமாறு.

''அண்ணு என் வாழ்க்கை இன்பத்தின் கட்டை விட்டுத் துன்பக்கடலில் விழும் சமயம் சமீபித்து விட்டதுபோலும். அதற்குப் பம்பாய்க்கு வந்தது தான் ஆரம்பம். இவா இப்ப வீட்டிலே தங்கறதேயில்லே. என்னைக் கண்டபோதெல்

(38-ம் பக்கம் பார்க்க)

உலக முழுதலும் பெயர் பெற்ற குடிகூரா

இது கீழ் சொல்லிய தோல் வியாதிகளை

தடையில்லாமல் கட்டாயமாய் ஆற்றும் :—

கரப்பான், சொறி, பருவுகள், கட்டிகள், ரணங்கள், இன்னும் மற்ற எல்லா வேதனை செய்யும், உருவழிக்கும் தோல் வெடிப்புகள்.

குடிகூரா சோப்புக்கும் (Cuticura Soap) குடிகூரா தைலத்துக்கும் (Cuticura Ointment) அதிசயமான நோய் தீர்க்கும் வல்லமை உண்டு, ஏனென்ருல் அவைகளில் புண்ணுற்றி நோய் தீர்க்கும்படியான மருந்துகள் கலந்திருக்கின்றன. இந்த மருந்துகளுக்கு நோய்தடுக்கும் சக்தி அதிகமாயிருக்கிறது.

இந்த மருந்துகள் தோல் வெடிப்புகளின் உள்ளே புகுந்து சொறியை உடனே தணிக்கும். இவை புண்ணிவிருக்கும் கருமிப் புழுகளைக் கொன்று, நோயை வைத்திருக்கும் சிலந்தி பாஷாணங்களை நீக்கிவிடும். உருதியாகவும் நிச்சயமாகவும் சதையைச் சுகமாக்கி, அதினுல் தோல் வெடிப்பைத் தேற்றி, புதிய தோல் வளரும்படியாகச் செய்யும்.

நோயிருக்கும் பாகத்தை குடிகூரா சோப்புக்கட்டியாலும் (Cuticura Soap) வென்னீராலும் கழுவி, சுத்திசெய்து, மெதுவாய்த் துடைத்து குடிகூரா தைலத்தைத் (Cuticura Ointment) தடவ வேண்டும். இந்த உபசாரணையால் உடனே வரும் சுகமும் தேற்றமும் உனக்கு அதிக ஆனந்தத்தைத் தரும்.

Cuticura
OINTMENT AND SOAP

குடிகூரா

தைலமும், சோப்புக்கட்டியும் எல்லா மருந்து கடைகளிலும், பஜார்களிலும் வாங்க அகப்படும்.

ஸ்ரீ ராகஸ்தூரி சோரோஜனை மாத்திரை

பாலகர்ஸ் பேதி மாத்திரை ''யூனிகான்'' டானிக்

14. ஸசா அவுஸ், மாடுங்கா, பம்பாய்

தாது புஷ்டியைக் கொடுப்பதில் சிறந்தது

சி.எம். சாமி

மன்மதக் குளிகை

இது உடலுக்கு வலுவைக்கொடுத்து ஆண்மையை அதிகப் படுத்தி இரத்த விருத்தியையும் வீரிய விருத்தியையும் திடகாத்திரத்தையும் தரும். 20 குளிகை ரூ 2/-

பிராஞ்சு:—1/54. அருணசலநாயகன் தெரு, சிந்தாத்திரிப்பேட்டை, மதராஸ்.

மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி.

நமது தொடர் கதை.

ராதா

(குருமலை ஸ்ரீமான் சுந்தரம் பிள்ளை.)

முன் கதைச் சுருக்கம்.

மகேந்திரத்தில் பாரெஸ்ட் ரேஞ்சராயிருந்த நந்தகோபமுதலியாரின் குமாரி ராதாவிற்கு அமரேசன் செட்டியார் தமிழ்ப்படிப்புச் சொல்லிக்கொடுத்து வருகிறார். நந்தகோபரும் அவரது மனைவி அநந்தகல்யாணி அம்மாளும் தாய் தகப்பனற்ற அமரேசனை மிகவும் பக்ஷமாக நடத்திவருகின்றனர். சிலகாலத்தில் அமரேசன் அவர்களது குடும்பத்திற்கே உற்ற தோழனாகிறான்.

நந்தகோபரின் பிறப்பிடம் பாற்கடல். அங்கு அவரது மைத்துனன் நச்சுமுதலியார் தனது ஏராளமான சொத்துக்களை அழித்து சிறைக்கும் போய்வந்தார். அவரது அந்தரங்க நண்பன் பிச்சு அய்யர். நச்சுமுதலியாரின் பிள்ளை தண்டபாணியும் தகப்பனைப்போல் குடி, விலைமாதர்கள் முதலிய விஷயங்களில் ஈடுபட்டான். நந்தகோபர் தாம் ஸ்வயமாகச் சம்பாதித்த பணத்தைக் கொண்டு பாற்கடலில் சொத்துக்கள் வாங்கியிருந்தார். அதை நச்சு முதலியே மேற்பார்வை பார்த்து வந்தார்.

மகேந்திரம் இளவரசனுக்கும் அமரேசனுக்கும் பகை ஏற்பட்டதன் காரணமாகவும் நச்சு முதலியின் துர்ப்போதனையால் நந்தகோபர் அமரேசனை நிறுத்திவிட்டபடியாலும் அமரேசன் மகேந்திரத்திலிருந்து வெளியேறினான்.

ராதாவை தண்டபாணிக்கு விவாகம் செய்துகொடுப்பது சம்பந்தமாக அநந்தகல்யாணிக்கும் நந்தகோபருக்கும் மனஸ்தாபமேற்படுகிறது. ஆயினும் நச்சுமுதலி ஒரு ஜோதிஷன் மூலம் கபடநாடகம் நடித்து விவாகத்தை நடத்திவிட்டான். ராதா தன்னால் தன் பெற்றோர்களுக்குள் மனஸ்தாபம் ஏற்படக்கூடாதென்று வாய்திறவாதிருந்துவிட்டாள்.

9. ஜனன மரணம்

தொடக்கத்தில் தனது புத்திரியைத் தண்டபாணிக்கு மணஞ் செய்விக்க மனமில்லாதவளாயிருந்தும்,—பாதி தன் பர்த்தாவின் கோபத்துக்கஞ்சியும், பாதி ஜோதிஷக் கிழவன் புரட்டில் நம்பியும்—முடிவில் தான் சம்மதித்தது போலவே, மணப்பெண்ணாகிய தன் குழந்தை ராதாவும்—தண்டபாணியை மணக்க இசையாதவள் போல முதலில் தோன்றினாலும்—முடிவிற் சம்மதித்துக்கொண்டாளென்று தான் அநந்தகல்யாணி நினைத்திருந்தாளேயன்றி, தாயாகிய தனக்கும் வெளியிடாமல், ராதா தன் மனத்தில் வைத்திருந்த அதிருப்தியைச் சிறிதும் உணரவில்லை; உணரும்படி ராதா நடந்து கொள்ளவுமில்லை. ஆனால் நிச்சயதாம்பூலம் முதல் முகூர்த்த முடிவு வரை ராதா அடைந்த சோகத்தையும், முகவாட்டத்தையும் அவளைமீறி வெளிப்பட்ட மற்றத்துக்கக்குறிகளையும் கண்ணுற்ற அநந்த கல்யாணி தனக்குள் "ஆஹா! ராதா சம்மதித்துக் கொண்டாளென்றல்லவா எண்ணியிருந்தேன்! மணப்பெண்ணே சும்மாயிருக்கும்பொழுது நாமேன் வீண் சண்டை போட வேணுமென்று லேசாய் நினைத்தல்லவா முடிவில் என் கணவர் விருப்பத்திற் கிசைந்தேன்! இப்பொழுது ராதா இருக்கும் இரையை உற்றுநோக்க, அவள் எனக்கும் என் கணவருக்குமிடையில் மனவருத்தம் வருமென்றஞ்சி வெளிக்கு சம்மதித்தவள்போல் பாவனை செய்திருப்பதாய்த் தோன்றுகிறதேயன்றி, மனப் பூர்வமாய் வாழ்க்கைப் பட்டவள் போல் தோன்றவில்லையே!

ஐயோ! நான் இனி என்ன செய்வேன்! இப்படிக் குழந்தைகளும் உலகில் உண்டா! தான் சாக மருந்து குடிப்பது போல், பெற்றோர் வாழ்விற்கும் சமாதானத்திற்கும் பின்னம் வருமென்றஞ்சித் தன் வாழ்வைக் கெடுத்துக் கொள்ளும் பேதையுமுண்டோ? என் அருமைக் குழந்தை ராதாவின் பெருந்தன்மையும் பொறுமையும் அடக்கமும், ஒழுக்கமும் அவளுக்குச் சிறப்பையும் சுகத்தையும் கொடுப்பதற்குப் பதிலாய் அவளுடைய வாழ்விற்கே வினையாய் வந்து முடிந்ததே! ஐயோ! அவள் புத்தகங்களை வாசித்து எனக்குப் பொருள் சொல்லும்பொழுதும், அவள் சாதுரியமாய் என்னிடம் பேசும்பொழுதும் என்ன நினைத்தேன்! "அவள் பெரியவளாய்த் தனக்கிசைந்த மணவாளனோடு வாழ்ந்து மகிழ்வதைக் கண் குளிரப் பார்க்க வேண்டும். அந்தக் காலம் எப்போது வரும்!" என்றல்லவா நான் பாபி ஆசைகொண்டிருந்தேன்! என் கண்கள் அதற்குத் தவஞ் செய்யவில்லையே! என் பெண்ணுக்குப் பிரியமில்லையென்ற ரகஸ்யம் எனக்கு அணுவளவு கடுகளவு தெரிந்திருந்தாலும் நான் இலகுவில் சம்மதியேனே! என் கணவர் என்னை வற்புறுத்தினாலும், என்ன! கணவனுக்கஞ்சி பத்து மாதம் சுமந்து பெற்று வளர்த்த பெண்ணைப் பாழுங் கிணற்றிற் போட்டுவிடுவேனா? மிஞ்சிவிட்டால், என் குழந்தையைக்கூட்டிக்கொண்டு பூந்துறைக்குப் போய்விடுவேனே! என் கண்மணி ராதாவின் க்ஷேமத்தைவிட என் கணவர் அன்பு எனக்குப் பெரிதல்லவே? பதினைந்து வருஷம் நல்ல கணவனோடு வாழ்ந்து களித்த எனக்கு என் கணவர் அன்பும் அபிமானமும் அவ்வளவு பெரிதல்லவே! இல்லற வாழ்க்கையின் இன்பம் இவ்விதமிருக்குமென்று மோந்துபார்க்கும் பருவமுமடையாத என் பச்சைக் குழந்தையை வீணாய் பலி கொடுத்து விட்டேனே! அவள் இனி எந்தக்காலத்தில், எவ்விதம், என்ன சுகத்தையடையப்போகின்றாள்!

எளியவன் வயிற்றிற் பிறந்த நான் செய்த தவம் கூடச்செல்வன் வயிற்றிற் பிறந்த என் பெண் செய்யவில்லையே! நான் அடைந்த சுகத்தில நான்கிலொரு பங்கு சுகமும் கூட நான் பெற்றபெண்ணுக்கில்லை, யென்றாய் விட்டதே! இனி என்ன செய்வேன். இந்தப்பேதைக் குழந்தை — பயித்தியக்காரக் குழந்தை—படித்தும் புத்தியில்லாத குழந்தை—இந்த ராதா என்னிடம் ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் — இஷ்டமில்லையென்று சற்றே நாவையசைத்திருந்தாலும் — நான் இவ்வளவிற் கிடம் கொடுப்பேனா? நான் ஒரு பெண்ணை வைத்துக்கொண்டிருப்பது போல், என் தாய்க்கும் நான் ஒரு பெண்தானே? பூந்துறையில் அவளிடமுள்ள அரைக்கோட்டை விரைப்பாடும் என் வயிற்றிற்கும் என் குழந்தை வயிற்றிற்கும் போதாதா? கணவனைப் பிரிந்த கவலையும் பெயரும் ஒரு பக்கமிருந்தாலும் என் குழந்தை ராதாவாவது க்ஷேமமாயிருப்பாளே? அவள் தனக்கிசைந்த நாயகனோடு வாழ்வதையாவது என் கண்ணாற் பார்ப்பேனே! ஏழை புத்தியுள்ள என் பர்த்தாவைத்தான் இந்த நச்சு முதலி ஏமாற்ற முடியுமன்றி என்னையும் ஏமாற்ற முடியுமா? இந்த மாபாவி நச்சு முதலி—இந்த மோசக்காரன்—இந்த அயோக்கியன்—என் குழந்தையின் வாழ்வைக் கெடுத்த குடிகேடன்—இவனா என்பர்த்தாவுக்கு—என் அருமை மணாளர்க்கு சம்பந்தக்காரன்! அவன் வைப்பாட்டி—அந்த வியபிசாரி பஞ்சனை எனக்கு சம்பந்தியாம்! அந்தத் தடியன் நிர்மூடன் தண்டபாணி என் பொக்கிஷம் ராதாவுக்கு மாப்பிள்ளையாம்! ஆகா! என்ன சம்பந்தம்! என்ன கல்யாணம்! நினைக்க நினைக்க என் வயிறு குப்பென்று எரிகிறதே!

இனி என்ன பேச்சு? தெய்வம் என் வாய் நிறைய மண்ணை வாறிப்போட்டு விட்டதே! ஊராரை யேன் நொந்துகொள்ளவேண்டும்? எல்லாம் என் பெண்ணால் வந்த கேடு! அதிகப் படிப்பினால் வந்த கேடு! அவளுடைய அதிகப் பிரசங்கித்தனத்தினால் வந்த கேடு! அவளுக்கு இவ்வளவும் வேண்டியதுதான்! கழுதை பட்டும் நமக்கென்ன பட்டும். என்பேரில் குற்றமில்லை, நானென்ன செய்வேன்! அந்தக் கழுதை ராதா இப்பொழுதாவது என்னிடம் ஏதாவது பேசுகிறாளா? அந்தரங்கம் சொல்லுகிறாளா? உள்ளதைப் பளிச்சென்று சொன்னாலல்லவா அழகு. பேச்சையே சுருக்கி விட்டாள், நான் கேட்பதற்கெல்லாம் பதிற் சொல்லாமல் மண் போலிருக்கிறாள். மண்ணாய்ப் போய்விட்[illegible] கல்யாணமுடிந்த பெண்ணுக்குள்ள முகக்களையா லக்ஷணம ஒன்றையும் காணவில்லை. முகத்

மனோரஞ்சனி

இது ஒரு மா[illegible]தாந்த நாவல் சஞ்சிகை. இராஜலக்ஷ்மி என்னும் நாவல் தொடர்ச்சி[illegible]யாய் வெளிவந்துகொண்டிருக்கிறது. இதன் வருட சந்தா ரூ. 1-8. மாதிரிக்காபி இனும்!

எம். எஸ். ராமுலு கம்பெனி, 28[illegible] எஸ்பிளனேட், மதராஸ்.

நந்தகோபர் ராதாவையும் அவள் பக்கத்திற்கிடந்த சிசுவையும் கண்டு தன் கண்களிலிருந்து வரும் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு தன் கையைப் பிடித்து வெளியே இழுக்கும் நச்சு முதலிக்கு......

திலிருந்த சிதேவி போயே போய்விட்டாள்! மூதேவி தான் நின்று விளையாடுகின்றாள்! அவள் அதிர்ஷ்டம் அவ்வளவு தான்! கழுதை எக்கேடு கெட்டாலென்ன? எப்படித் தொலைந்தாலென்ன? இவள் பிறந்த வீட்டிலே இறந்துவிட்டாளில்லை! பிள்ளையே பெறுதிருந்தேனில்லையே! மலடி என்ற ஒரு சொல்லோடு போய் விடுமே! சரி. இனி நடக்க வேண்டியதென்ன? இனி ஒரு நாழிகையாவது இவ்வூரில் இரேன். ஒரு நிமிஷங்கூட இங்கே தரியேன். பூந்துறைக்கு இப்போதே புறப்பட்டுத் தீரவேண்டும்.'' என்றிவ்வாறு தனக்குட் புலம்பிக்கொண்டு விவாக தினங்களாகிய மூன்று நாளும் படுத்த படுக்கையை விட்டெழாமல் கண்ணீரும் கையுமாய் அழுதுகொண்டிருந்தாள். மாங்கல்யதாரணம் என்னும் ஒரு கிரியை தவிர மற்ற நலுங்கு, சதிர், பட்டணப் பிரவேசம் முதலிய ஒன்றையாவது அவள் கண்ணுற் பார்க்கவில்லை. நான்காவது நாள் விடியவும் அநந்த கல்யாணி நந்தகோபரை யழைத்துத் தான் பூந்துறைக்கு விரைவிற் புறப்பட வேண்டுமென்று தெரிவித்தாள். நச்சுமுதலி பஞ்சணை முதலானோர் உபசாரமாய்த் தடுத்தும் அநந்த கல்யாணி கேட்கவில்லை. ஒன்பது மாதக்கர்ப்பஸ்திரீயாகையால் அவளை மாதம் பிறக்குமுன் பூந்துறையிற் கொண்டுவிட வேண்டுமென்று நந்தகோபர் எடுத்துக் கூறி சம்பந்தக் காரரை சமாதானம் செய்துவிட்டு, பஞ்சணையின் அனுமதியுடன் ராதாவையுமழைத்துக்கொண்டு 30உ மாலை 5 மணிக்கு அநந்த கல்யாணி, ராதா, ராஜு இவர்கள் சகிதம் பூந்துறைக்குப் புறப்பட்டுவிட்டார். தன்னை வழியனுப்ப வந்த நச்சுமுதலியாரைப்பார்த்து,

நந்த:— அத்தான், எல்லாம் சிறப்பாய் முடிந்தது. தங்கள் தங்கையின் பேறுகாலம் கழிந்தவுடன் மறுவீட்டை நடத்திவிடலாமென்றெண்ணி யிருக்கிறேன்.

நச்சு:— அப்படியே செய்கிறது ஆக்ஷேபனை யென்ன?

அநந்:— (கடுத்த முகத்துடன்) மறுவீட்டுக்கு என்ன அவசரம்? எடுத்த காரியமெல்லாம் அவசரமா? ராதா பெரியவளான்பின்பு இரண்டு வருஷங்கழித்து மெல்ல நடத்திக் கொள்ளலாம்.

நச்சு:— அம்மா, உன் அதிகாரம் இதற்கு முன்னேயே நடக்கவில்லையே? இனிமேல் உன்பிடி என்னிடம் அகப்பட்டபிறகு உன் அதிகாரம் நடக்குமா?

என்று சொல்லவும், ரெயில் வண்டிக்குள் பக்கத்திலுட்கார்ந்திருந்த ராதா கையினால் தாயைச் சுறண்டி "பேசாதே" யென்று ஜாடை செய்தாள். இதற்குள் ரெயில் மெல்ல நகரவும், நச்சுமுதலி விடைபெற்று நின்றுவிட்டார். ரெயிலேறியவர்கள் மறுநாட்காலையில் சாலிவாடி யென்னும் ஸ்டேஷனிலிறங்கி அதன் கிழக்கில் ஒரு மயில் தூரத்திலுள்ள பூந்துறை யென்னும் மனோகரமான கிராமத்தையடைந்து அநந்த கல்யாணியின் தாயாகிய அன்னபூரணி அம்மாள் வீடுபோய்ச் சேர்ந்தாள். சுமார் மூன்று நான்கு வருஷமாய்க் காணாதிருந்த தன் ஏக புத்திரி அநந்தாவையும், மணக்கோலத்துடன் வந்திருக்கும் பேர்த்திப் பெண் ராதாவையும், அருமை மருமகனையும் கண்ட பாட்டி அன்னபூரணி அவர்களை ஆநந்தமாய் வரவேற்று மகளுடனும் பேர்த்தியுடனும் சம்பாஷித்துக் கொண்டிருந்தாள்.

மூவரும் பேசிக்கொண்டிருக்கும பொழுதே, பூரணகர்ப்பிணியாகிய அநந்தகல்யாணி தன் உடம்புக்கு ஏதோ ஒரு விதமாய் வருகிறதாய்க் கீழ படுத்தாள். பிரயாண சிரமத்தாலோ அல்லது பிரஸவத்தை முன்னிட்டோ வென்ற சந்தேகத்துடன், ராதா தன் தாயின் பக்கத்திலுட்கார்ந்தாள். சிறிது நேரத்துக்குள் பிரஸவத்துக்குரிய குறிகள் தோன்றவே மருத்துவச்சியும் வந்து சேர்ந்தாள். மத்தியானத்திற்குமேல் அநந்த கல்யாணி மிகவும் கஷ்டப்பட்டாள். முதலியாரும் ராதாவும் தீபம் வைத்த பின்தான் போஜனம் செய்தார்கள். இரவிலாவது குழந்தை பிறக்குமென்று எதிர்பார்த்தும், அநந்தகல்யாணியின்வேதனைதான் அதிகப்பட்டதேயன்றிக் குழந்தையைக் காணமுடியவில்லை. விடிவதற்

செவிடு

இதற்கும் இதர காதுக் கோளாறுகளுக்கும் கராமத் ஆயில் இணையற்ற நிவாரணி புட்டி 1-க்கு ரூ 1-4

ஏக காலத்தில் 3 புட்டிகள் வாங்கினால் தபால் சார்ஜில்லை.

குறிப்பு:--ஆங்கிலத்திலேயே கடிதமெழுத வேண்டும்.

BALLABH & SONS
(Medalists)
Pilibhit U P.

கொசு வலைகள்.

பிரத்யேக வலுவான வெள்ளை வலைகளாலானவை. நல்ல தையல். நீடித்துழைப்பவை. வெளுத்த பச்சை, நீலம், சிகப்பு, மஞ்சள் முதலிய பல கலர்களிலும் கிடைக்கும். வெள்ளையா கலரா என்பதைக் குறித்தெழுக.

நீளம்	அகலம்	உயரம்	சாதா	உயர்ந்தது	மோனது
அடி	அடி	அடி	ரூ.	ரூ.	ரூ.
6	3½	3½	1-4	1-8	2-4
6	4	4	1-8	1-12	2-6
6½	4½	4½	1-12	2-4	2-12
7	5	5	2-4	2-12	3-4
7½	6	6	2-12	3-4	4-4

தபால் செலவு தனி. பாக்கிங் இலவசம். இலவசம் ஏககாலத்தில் மூன்று வலைகள் வாங்குவோருக்கு 6X4X4 வலை ஒன்று இலவசம்.

Bally Mosquito Net Factory,
P. O. Bally Dist. HOWRAH.

மியூச்சுவல் அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.

தலைமை ஆபீஸ் :

187, மவுண்ட் ரோட், மதராஸ்.

நவீன, சாஸ்திர பூர்வமான தாராளத் தன்மை கொண்ட பாலிஸி ஒப்பந்தங்கள் எம்மிடம் கிடைக்கும். எல்லோரையும் திருப்தி செய்விப்பவை. குறைந்த பிரீமிய விகிதங்கள்.

டி. வி. ராமமூர்த்தி,
செக்ரிடரி.

வலுவூட்டும் சிறந்த டானிக்

வெப்ஸ்டர்ஸ் பாஸ்பாடம்

கிருஷ்ராஜ் & கம்பெனி, மெத்தையில் ஆபீஸ்,
மருந்து வியாபாரிகள், சைனாபஜார் ரோட், மதராஸ்

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

குள் பிறக்கவில்லையானால், பிரஸவ டாக்டரைத் தருவிக்க வேண்டுமென்று நந்தகோபர் தீர்மானித்தார். குழந்தை உதிக்குமுன் சூரியனுதித்து விட்டான். அவன் உதித்த இரண்டுநாழிகைக்குள் அதாவது காலை 6 அடித்து 40 நிமிஷத்திற் கெல்லாம் "பிறந்து விட்டது! பிள்ளை பிறந்துவிட்டது! ஆண் குழந்தை" என்ற சப்தம் வீட்டிற்குள் உண்டாயிற்று. உடனே ராதா அன்னபூரணி முதலியவர்கள் அடைந்த சந்தோஷத்தை அளவிட முடியாது.

இதையறிந்த நந்தகோபரும் "ஆண் குழந்தையென்ற சொல்லைக் காதால் கேட்டேனே! ஜோதிஷர் சொன்னது மிகவும் சரியாயிருக்கிறதே!" என்று ஆனந்த சாகரத்தில் மூழ்கினார். ஆனால் அனந்த கல்யாணிமட்டும் சிறிது மயக்கமாய்க் கிடப்பதாயும், அதற்கு வேண்டிய சிகிச்சைகள் நடப்பதாயும் தெரிந்தது. ராதா இதுவரையும் ஆவலோடெதிர்பார்த்திருந்த தன்தம்பியை ஒரு கண்ணால் ஆநந்தப் பார்வையும், மயக்கமாய்ப் பேச்சுமூச்சின்றிக் கிடக்கும் தன் தாயை மற்றொரு கண்ணால் கிலேசப் பார்வையும் பார்த்துக்கொண்டு, மலர்ச்சியும் வாட்டமும் கலந்த முகத்தோடு அங்குமிங்கும் ஓடிக்கொண்டு திரிந்தாள். குழந்தை பிறந்து சுமார் அரைமணி நேரத்துக்கெல்லாம், அநந்த கல்யாணி—ராதாவின் அருமைத் தாய்—நந்தகோபரை மகிழ்வித்த மாதர்சிரோமணி—யாருமற்ற கிழவி—அன்னபூரணியின் ஏக புத்திரி—அநந்த கல்யாணி கால்களை விரைக்க நீட்டினாற்போலிருந்தது. கண்ணின் கருவிழிகள் இரண்டும் மேனோக்கி மறைந்தன; கண்ணிமைகள் மூடின! தொண்டைக்கும் வாய்க்குமாய் இழுத்துக்கொண்டிருந்த சுவாஸமும் மெல்ல நின்றது! தேகமும் குளிர்ந்தது! அநந்த கல்யாணி உயிர்துறந்தாள்! ராதாவை மறந்தாள்! "மகன் பிறந்தான்" என்பதைக் கேட்கு முன் இறந்தாள்! அந்தோ! வீடெங்கும் கூ. கூ. வென்ற கூச்சலாய் விட்டது! ராதா கால் நடுங்க கை பதற, சரீரம் வெயர்க்க வாய்குளற "அம்மா! அம்மா! என்னம்மா! என்னம்மா!" வென்று அலறிக்கொண்டு, தன் பக்கத்தில் நின்று கூவும் ஸ்திரீகளை நோக்கி, "அம்மா புண்ணியவதிகளே! பிள்ளையை இங்கே கொண்டு வாருங்கள்; மிதித்துவிடாதேயுங்கள்! என் தம்பீ! என் தம்பீ" என்று கெஞ்சிக் கெஞ்சிக் கும்பிட்டாள். இதற்குள் கூட்டம் அதிகப்படுவதைக்கண்ட மருத்துவச்சி, குழந்தையை மெதுவாய்த்தூக்கி, கூட்டத்தை விலக்கிக்கொண்டு, இரண்டாம் கட்டிற்குக்கொணர்ந்து கீழே கிடத்தினாள். குழந்தையும் "கீயா கீயா" வென்று கூவுகின்றது தம்பியைக் கண்டாள் ராதா! "ஏ தம்பீ! ஏ தம்பீ!" என்று எலிக்குஞ்சுபோல் வாடிவதங்கிக் கிடக்கும் சிசுவின் இரண்டு பக்கங்களிலும் தன் இரண்டு கரங்களையும் ஊன்றிக் கொண்டு, அதன் முகத்தை உற்றுப் பார்த்து, "என் தம்பீ? இதுவா உன் கதி! என் கதி போலா உன்கதியுமாயிற்று! பிறந்து தரையில் விழுமுன் இவ்வளவு பாக்கியத் தோடா பிறந்தாய்! அடே என் தம்பீ, அவள் உன்னைப் பத்துமாதம் சுமந்ததும் காணாமல், நேற்றுப் பகலும் இரவும் உன் பொருட்டாய்ப் பட்ட வேதனைக்கு, நீ அவளுக்கு இப்படியா செய்தாய்! ஜெனிக்கும்பொழுதே அவளுக்கு யமனாகவா ஜெனித்தாயடா என் தம்பீ! உன்னை அவள் கண்ணாலும் பார்க்கவில்லையேடா! என்னைப் போலும் உன்னைப்போலும் புண்ணியசாலிகள் உலகத்திலுண்டா? என்னை ஒரு பெண் குழந்தையாய்ப் பெற்று என்னால் அவள் இதுவரை அடைந்த சுகம் ஏழேழு ஜென்மத்திற்கும் போதுமே! முடிவில் உன்னை ஆண் குழந்தையாய்ப் பெற்ற லாபத்தை, என் தம்பீ, நீ உடனே கைம்மேற்கொடுத்துவிட்டாய்! என் துக்கத்தையும் அவள் துக்கத்தையும் நீ வந்து ஆற்றிவிடுவாயென்றல்லவா எண்ணியிருந்தோம்! என் தம்பீ, அவள் துக்கத்தை ஒரே முடிவாய் ஆற்றிவிட்டாயே! என் தம்பீ!" என்று கதறுகிறாள்; கண்ணீர் வெள்ளமாய்ப் பாய்கின்றது.

இதைக் கேட்டு, முன் பின் கண்டு கேட்டறியாத மருத்துவச்சியும்கூட விம்மிவிம்மி யழுகின்றாள். ராதா கண்ணீரைத் துடைத்துக்கொண்டு பட்டகசாலைக்குட் சென்றாள். இளவரசி சயனம் செய்தாற்போல், கம்பீரமாய்க் கீழே கிடக்கும் தன் தாயைக் கண்டாள். "அம்மா! என் அம்மா! தம்பியைக் கண்டாயோ? என் அம்மா! என்னை மறந்தாயோ! என் தம்பியையுமா மறந்தாய்? பிள்ளை பிள்ளை யென்று புலம்பினாயே! மகன் மகன் என்று மாய்ந்தாயே! முடிவில் மகனும் பிறந்தானே! நானும் மகிழ்ந்தேனே! அந்த மகனை ஒரு நாள் ஒரு நாழிகை ஒரு நிமிஷமாவது வாரியெடுத்து மடிமேல் வைத்துப் பார்த்தாயா! பார்த்து மகிழ்ந்தாயா! என் அம்மா அதற்குள் அவசரப் பட்டுவிட்டாயே! என்னையும் என் தம்பியையும் தவிக்கவிட்டா போகின்றாய்! எங்களுக்கு யார் துணை! எங்களை யாரிடம் ஒப்புவித்தாய்! நீ இப்படி மோசம் செய்வாயென்று கனவிலும் எண்ணவில்லையே! உன்னுடைய சுகத்தைக் கருதி

(35-ம் பக்கம் பார்க்க)

அதி அற்புத அழகு

சுகாதாரம் மிகுந்த

டில்பஹார் ஸோப்பு

(ரிஜிஸ்டர்ட்)

மூன்று கட்டிகளின் விலை

ஒரு ரூபாய் தான்

(தபால் செலவு தனி)

டில்பஹார்ஸோப்பு சிறந்த சுத்தி கரிப்பைத் தரும் கிருமி நாசினி.

சரும எரிச்சல் அல்லது அரிப்பை அகற்றிச் சருமத்தைப் பாதுகாக்கும் அழகை விருத்திசெய்யும்.

உங்கள் சருமத்தைப் பாதுகாருங்கள் !

ஆட்டங்களில் ஈடுபட்டுள்ளவர்களும், இதர பெண்களும் காமினியா ஸ்னோ வின் சருமப் பாதுகாப்பையும், போஷாக்கையும் பெரிதும் பாராட்டுகிறார்கள். சருமத்திற்குப் புத்துயிரும், உல்லாசமுமளிப்பது. சருமச் சுருக்கங்கள் முதலியவற்றை நீக்குவதில் சிறந்ததென சிபார்சு பெற்றது. விலை புட்டி 1-க்கு 10 அணா. தபால் செலவு தனி. தபால் செலவுக்காக 1 அணா ஸ்டாம்பனுப்புவோருக்கு சாம்பிள் இலவசம்.

சோல் ஏஜண்ட் :—

The Anglo Indian Drug & Chemical Co

285, Jumma Musjid, BOMBAY 2.

ஸ்டாக்கிஸ்டுகள் : ஜே. எஸ். சேட் & கம்பெனி,
68, பைக்ராப்ட்ஸ் ரோட், — திருவல்லிக்கேணி

ஸ்தாபிதம் 1913

சவரன் மாத்து தங்கத்துக்கும், அசல் வெள்ளி சாமான்களுக்கும், மேன்மையான வேலைப்பாட்டுக்கும் உத்திரவாதமுள்ள இடம்

கரம்சந்த் சபில்தாஸ் & ஸன்

நகை வியாபாரிகள்

175, சைனாபஜார் ரோட் — மதராஸ்.

காட்லாக்குக்கு எழுதவும்.

நீரிழிவு, மதுமேகம்

முதலிய சகல நீர் ரோகங்களுக்கு

பண்டிட் ஸ்வாமி ஸ்ரீநிவாஸய்யங்காரின்

மயூரகாய கற்பம்

ஒரு தெய்வீக சஞ்சீவி !!

இதுவரை இதன் நன்மையைப் பிரபுக்கள் மட்டுமே பெற்று வந்தனர். இப்போது சகல ஜனங்களும் பயன்பெறவேண்டி 20 டோஸ் கொண்ட பொட்டணம் ரூ. 15-8-0 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. 10 நாளைக்கு வரும். அதற்குள் கண்கூடாகக் குணங்காணும். பிரபல இங்கிலீஷ் டாக்டர்களுடையவும், குணமடைந்த பலருடையவும் உயர்ந்த உண்மை அபிப்பிராயங்கள் கொண்ட இலவசப் புத்தகத்திற்கு

இன்றே எழுதுங்கள்.

ஸ்கந்தாசிரமம்

தபால் பெட்டி, 759 : : எழும்பூர், மதராஸ்

விநோதக் கொத்து

இரு குமாரர்கள் தங்கள் தகப்பனார் வைத்துப்போன ஆஸ்தியைப் பாகம் பிரித்துக் கொள்வதில் சண்டையிட்டுக் கொண்டனர். பிறகு அவ்விருவரும் தங்கள் ஊர், மத்தியஸ்தக்காரரிடம் சென்று ஏதாவது வழிசொல்லும்படி கேட்டனர்.

மத்தியஸ்தக்காரர்:— இது தானா, வெகு சுலபமாயிற்றே. (முதல் பிள்ளையை நோக்கி) நீ இஷ்டப்படி சொத்துக்களை இரண்டுபாகமாகப்பிரித்துவிடு

இதைக் கேட்டவுடன் இரண்டாவது பிள்ளையின் முகம் கடுகடுத்தது. முதல் பிள்ளை சந்தோஷமாக விருந்தார். ஆனால் மத்தியஸ்தக்காரர் அதே குரலில் இரண்டாவது பிள்ளையை நோக்கி, "நீ உனக்குப் பிடித்த பாகத்தை எடுத்துக் கொள்" என்றார்

* * * *

ஒரு பிரபல வஸ்தாத் தன்னைப்பற்றி வெகுவாகப் புகழ்ந்து கொண்டிருந்தார். யாராவது திருடன் தன் வீட்டிற்குள் நுழைந்தால் அவனைத் தவிடு பொடியாக்கிவிடுவதாகச் சொன்னார்.

ஒரு நாள் அவர் வீட்டில் ஒரு திருடன் புகுந்து எல்லா சாமான்களையும் மூட்டையாகக் கட்டிக்கொண்டு மற்றொரு சாமானை எடுக்க முயன்றான். அப்பொழுது வஸ்தாத்துக்கத்திலிருந்து எழுந்துவிட்டார். "டேய், சாமான்களைக் கீழே வைத்துவிடு. இல்லாவிட்டால்."

திருடன், "இந்த சாமான்கள் உங்களுடையதல்ல. அடுத்த வீட்டுக்காருடையது" என்று சொல்லிவிட்டுச் சாமான்களுடன் ஓடிவிட்டான்.

* * * *

"உனக்கு விச்சுவைத் தெரியுமல்லவா?"

"ஏன், தெரியும்"

"அவன் எனக்கு ஐந்து ரூபாய் கடன் பாக்கி கொடுக்க வேண்டும். அவன் கடன் பாக்கி வசூலிக்கும் ஒரு வியாபாரத்தை நடத்திவருவதாகச் சமீபத்தில் கேள்விப்பட்டேன். உடனே எனக்கு அவன் கொடுக்கவேண்டிய கடனைப்பற்றி எழுதி வசூலித்தனுப்பும்படி எழுதினேன் அவன் எவ்வளவு முயன்றும் பலனேற்படவில்லை என்று எழுதித் தன் சிரமத்திற்காக ஒரு ரூபாய்க்கு பில் அனுப்பியிருக்கிறான்."

* * * *

ஒருவன் பௌண்டன் பேனா வாங்குவதற்காகக் கடைக்குச் சென்றான். ஒரு பேனாவைக் கடைக்காரர் கொடுக்க அதை வாங்கி ஒரு கடிதத்தில் எழுதிப் பார்த்தார். 'கடவுள்' என்ற வார்த்தையைப் பல தடவை எழுதினார். சுமார் 15 நிமிஷமாகியும் வாங்கவந்தவர் ஒன்றும் பதில் சொல்லவில்லையாகையால் கடைக்காரர், "என்ன கடவுள் பேனா உங்களுக்குப் பிடித்திருக்கிறதா?" என்று கேட்டார்.

* * * *

பஸ்ஸில் ஒரே கூட்டமாகவிருந்தது சிறுவன் தாயின்மடிமேல் உட்கார்ந்திருந்தான். பஸ் மத்தியில் ஓரிடத்தில் நின்றபோது ஒரு ஸ்தூலமான ஸ்திரீ ஏறினாள். அவள் பஸ்ஸில் உட்கார்ந்ததும் சிறுவன்:— அம்மா, இது ஒரு ஸ்திரீ.

தாய்:— வாயை மூடு. பேசாதே.

சிறுவன்:— சிறிது நேரத்திற்குமுன் இந்தப்பிராணி யார் என்று அப்பாவைக் கேட்டாயே. அதனால் தான் சொன்னேன். இது பிராணியல்ல. ஸ்திரீதான்.

* * * *



முகத்தைச் சிங்காரித்துக்கொள்ள உதவ ஒரு புதிய கண்ணாடி கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இது முகத்தை மிகப்பெரிதாகக் காட்டுவதால் பௌடர், ஸ்னோ முதலியன போட்டுக் கொள்வதில் மிகப் பிரயோஜனமாக விளங்குகிறது.

கண் வைத்தியர்:— இந்த அட்டையிலிருக்கும் எழுத்துக்களில் எவ்வளவு எழுத்துக்கள் படிக்க முடியும்?

வியாதிஸ்தர்:— அட்டை எங்கு இருக்கிறது

* * * *

ஜலதோஷம

உங்களை ஆஸ்பத்திரிக்குக் கூட அனுப்பி விடும்

"ஜலதோஷம் தானே" என்பீர்களோ? அதிலிருந்து தான் நியுமோனியா பிறக்கிறது. ஆகவே ரகவிய முறையிலான மிஸ்டலை ஆரம்பத்திலேயே உபயோகித்து ஜலதோஷத்தை பரவவொட்டாமல் தடுக்கு. இலவச மாப்பருடன் கூடிய ஒரு புட்டி மிஸ்டலை இன்றே வாங்குக.

Mistol

REG TRADE MARK

ஜலதோஷத்தை முளையிலேயே கிள்ளி எறிகிறது.

த்யாகராஜ கீர்த்தனம்.

[காபிரைட்.]

ஸங்கீதவித்வான் காஞ்சி பி. பி. ஸ்ரீனிவாஸய்யங்கார், பி. ஏ. எழுதியது

I

பல்லவி

க்ருஷ்ணா! மாகேமி தோவ பல்கு-கீர்த்திகல்குனு, தேவதேவ! பால (க்ரு)

சரணங்கள்

(1) * * * * * *
(2) * * * * *
(3) ஸர்வமு நீவனு கொன்னமாகு-ஸாமர்த்யமு ஜூபு, சின்னி (க்ரு)
(4) பாயலேனி மம்மு நீவு, ஏயு-பாயமைன தெல்பி ப்ரோவு, ஸ்ரீ (க்ரு)
(5) மாதோ ஜேரக யிந்த பாதகல்கெ-மரதுமாயிக ப்ராண நாத! ஸ்ரீ (க்ரு)
(6) இந்து கநுசு தல்லி த்ஸாகெனே, லேக-ஏபாபுல கண்ட்லுதாகெனே ஸ்ரீ (க்ரு)
(7) ராகேந்து முகதயாராதா த்யாக-ராஜார்ச்சித ப்ரோவராதாஸ்ரீ (க்ரு)

II

தேவ தேவ	—தேவாதி தேவரே!
பாலக்ருஷ்ண சின்னிக்ருஷ்ண	—பாலக்ருஷ்ணா!
ப்ராண நாத	—பிராண நாதரே!
ராகேந்துமுக	—பூர்ண சந்திரனைப் போன்றதேஜஸான திருமுக மண்டலத்தை யுடையவரே!
த்யாகராஜார்ச்சித	—தியாகராஜனால் பூஜிக்கப்பட்டவரே!
மாகு எமி தோவபல்கு	—எங்களுக்கு என்ன வழி சொல்லுகிறீர்.
கீர்த்தி கல்கனு	—உமக்குக் கீர்த்தி யுண்டாகும்;
ஸர்வமு நீவு அனுகொன்ன	—எல்லாம நீரே என்று எண்ணியிருக்கும், (அதாவது எல்லாப் பொருள்களுக்கும் ஆதாரமானவர் நீரே என்று நம்பியிருக்கும்)
மாகு	—எங்களுக்கு
ஸாமர்த்யமுஜூபு	—உம்முடைய சாமர்த்தியத்தை வெளிப்படுத்தும் (ஒரு வழி காட்டும்)
பாயலேனி மம்மு	—நிர்க்கதியாயிருக்கும் எங்களை
நீவு	—நீர்,
ஏ உபாயமைன தெல்பி	—எந்த உபாயத்தையாவது தெரிவித்து,
ப்ரோவு	—காப்பாற்றும்!
மாதோ ஜேரக	—எங்களுடன் நீர் சேராமல் (அதாவது எங்களுடன் நீர் சேருவதற்கு நாங்கள் இடங் கொடாததால்),
இந்த பாத கல்கெ	—இவ்வளவு பாதை யுண்டாயிற்று.
இக மரதுமா	—இனி உம்மை நாங்கள் மறக்கக் கூடுமா?
இந்து கநுசு	—இதற்காகத்தானே
தல்லி த்ஸாகெனே	—எங்கள் தாய்மார்கள் எங்களைப் பெற்றெடுத்தார்கள்
லேக	—இன்றேல்,
ஏ பாபுல கண்ட்லு தாகெனே	—எந்தப் பாவிகளின் கண் பட்டதோ?
தயாராதா	—எங்கள் மீது தயையுண்டாக வில்லையா?
ப்ரோவராதா	—எங்களைக் காப்பாற்றக் கூடாதா?

III

இந்தக் கீர்த்தனம் ஸ்வாமிகளியற்றிய நௌகா சரித்திரத்தில் உள்ளது. ஸ்ரீக்ருஷ்ண பரமாத்மா கோபியர்களோடு லீலைகளைப் புரிகையில், அவர்களை யமுனா நதியில் ஓர் ஓடத்திலேற்றிக்கொண்டு வெள்ளத்திற் சென்ற பிறகு, தம் சக்தியால் புயலுண்டாகச் செய்து. அப்போது நடுங்கிப் பயந்த கோபியரைத் தமக்கு இணங்கச் செய்து புயலை நிற்கச் செய்தாரென்பது விருத்தாந்தம். எந்த உபாயத்தைக் கையாண்டும் பயன்படாமல் படகினுள் தண்ணீர் ஏறுவதைக் கண்ட கோபியர், கிருஷ்ண பரமாத்மாவிடம் முறையிட்டுக்கொள்வது இந்தக் கீர்த்தனத்தின் விஷயம் இதில் முதலிரண்டு சரணங்கள் கதைப்போக்குக்கு ஒத்தபடி இருப்பதனாலும் மற்ற சரணங்களெல்லாம் பொதுவான ஸ்தோத்திரமாக இருப்பதனாலுந்தான் தற்சமயம் ப்ரபலமாக வழங்கப்படும் அச்சிட்ட பிரதிகளில் அவை நீக்கப்பட்டிருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது. விடப்பட்ட அந்தச் சரணங்கள் வருமாறு:—

"(1) ஸரிகுகரவிக லெல்ல போயெ—வெர்றி த்ஸலிகி மேனோர்வதாயெ ஸ்ரீ (க்ரு)
(2) ஸரிவாருலலோ ஸிக்குபோயெ—நீருஜானுல பைதாகனுயெ ஸ்ரீ (க்ரு)"

IV

புன்னாகவராளி — த்ரிச்ரஜாதி த்ரிபுட தாளம்

புன்னாகவராளியின் லக்ஷணத்திற்கு, சென்றவார இதழைப் பார்க்கவும்.

பல்லவி

; * பா ;	பா ; பா ;	பா ; மா	தா பா தா ;	; தா நீ	தா ; பா	பா ; மா	தா பா தா ;
; * க்ருஷ் ;	ணா ; மா ;	மோ ;	கே மி ;	; தோ	; வ	பல ;	கு ;
; * பா ;	பா ;பா;	பா ; மா	காரீ ஸா ;	; ஸாரீ	காரீ கா ;	மா பா மா	கா ; ரீ ;
; * கீர் ;	த்தி ; கல;	கு ;	தே வ ;	; தே	வ ;	பா	; ல ;
ஸா *							
*							

(சரணங்களையெல்லாம் பல்லவியைப் போலவே பாடவேண்டும்.)

கீழ்க்கண்ட இடங்களில் பிராஞ்சுகள் :

பம்பாய் — ரங்கூன் — ஆண்ட்வர்ப்

புதிய மன்னர்பிரான் பட்டமேற்றுக்கொள்வதற்காகத் தமது சொந்த வாசஸ்தலத்திலிருந்து புறப்பட்ட காட்சி.



விண்ட்ஸர் அரண்மனையில் புதிய மன்னர் பிரகடனம் செய்யப்பட்டபோது எடுத்த படம்.

நாட்டு நடப்பு



சித்திரக்கண்ணாடி

பெய்ஸ்பூரில் நடந்த பொருட்காட்சியில் காணப்பட்ட பொலிகாளைகள்.

விஜயநகர சாம்ராஜ்ய ஆறாவது நூற்றாண்டு [விழாக்] கொண்டாட்டம் டாக்டர் குர்துகோடி சங்கராசார்யர் தலைமையில் நடைபெற்றது.

நோயற்றவாழ்வு

மதுபானத்தாலாகும் மனோ விகாரங்கள்

—:[0]:—

(வைத்தியரத்ன பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார்,
ஆயுர்வேதபூஷணம் ஆயுர்வேதாசார்ய அவர்கள் எழுதியது)

[குடிப்பழக்கம் இல்லாத காலமுமில்லை. நாடுமில்லை. அதனாலாகும் கேடுகளைக் கண்டிக்காத சுகாதார சாஸ்திரமுமில்லை, சமூஹமுமில்லை. ஆனால் ஆயிரங் காலமாகவும் அகில தேசங்களிலும் அப்பழக்கம் அபிவ்ருத்தியாவதாகத் தெரிகிறதேயன்றி அடங்கி யொழிந்ததாகத் தோன்றவில்லை. இக்குடி வழக்கம் நிலைகுலையாமல் ஏன் நிலைத்து வருகிறதென்பதையும், மதுபானத்தினால் மனோ நிலைமைக்கு ஏற்படும் பலா பலன்களையும் இவ்வியாஸம் விளக்கும்.]

மதுபானத்தில் மூன்று வகை

உலகவழக்கத்தில் உள்ள மதுபான முறையை மூன்று வகையாகப் பிரிக்கலாம் (1) நாடோடிகளான இந்நாட்டுக் கூலிகளும் மற்ற அவர் போன்ற எளிய மக்களும் செய்யும் கட்குடி என்னும் பானம் அவற்றுள் ஒன்று இது எளிய ஜனங்கள் தம் ஏழ்மையையும் கருதாது அன்றாடம் காலக்ஷேபத்திற்காக அலைந்தோடி வியர்க்க வியர்க்க உழைத்துத் தேடிய சில காசுகளைக் கொடுத்து உடல் நோவை ஆற்றவும் உள்ளத்திற்குத் தாத்காலிகமான ஓர் உத்ஸாஹத்தை யுண்டு பண்ணிக் கொள்ளவும் விவேகமில்லாமலோ விதியில்லாமலோ நிகழ்த்தும் முறை.

(2) மற்றோர் இரண்டாம் முறையோ இன்னும் விநோதமானது. நாடோடிகளல்லாத நாகரிகர்களெனப்படும் பலரும், படிப்பும் பட்டங்களும் பணச் செருக்கும் படைத்த அநேகரும் நண்பர்கள் கூடி செய்யும் நாகரிகப் பொழுது போக்கென்றும், தம்பதிகளுடைய அல்லது பதிபத்னிகளென்று சொல்லிக்கொள்பவர்களுடைய உல்லாஸ நாகரிக வாழ்க்கையென்றும், நூதனமான மேனாட்டு முறையிற் செய்யும் மேலான நர்த்தன முறைகளென்றும் பலவேறு பெயர்களைக்கூறி, அநேக வகை மதுக்களை மனோஹரக் கேளியாகக் கருதி நிகழ்ந்துவரும் குடிப்பழக்கம் பெருங் குடிகளைப் பாழாக்கும்; மற்றொரு வகையாகும்.

ஆயுர்வேதம் கூறுவதென்ன?

(3) மூன்றாவதான மதுபான முறையை முற்றிலும் இகழ்ந்து கூறுவதற்கில்லை. மத்யம், மைரேயம், வாருணி, சீது முதலிய வெறியுண்டுபண்ணக்கூடிய வெவ்வேறு மதுவினங்கள் மிக மிகப்பண்டைய இந்திய ஜன வாழ்க்கையிலும் இருந்து வந்ததுண்டு. ஆனால் ஆஸவங்கள் என்றும், அரிஷ்டங்கள் என்றும், அர்க்கம் என்றும் சிலவகை மதுக்கள் மருந்துகளாய் மிக்க உபயோகமாவதை உணர்ந்து முற்காலத்திய முனிவர்கள்கூட அவற்றை ஆயுர்வேதக் கிரந்தங்களில் அருமருந்துகளாய் உபயோகிக்கலாமென்று விஷப தத்துவமறிந்து விளம்பியிருக்கிறார்கள். "அவ்விதம் ஔஷதத் தன்மையுள்ள ஆஸவாரிஷ்ட ரூபமான மத்யத்தைச் சக்திக்கியன்றளவாய் மட்டு மிதமறிந்து ஏற்ற காலத்தில் ஆஹாராதிகளுடன் அருந்தினால் அமுதம் போல் நன்மை பயக்கும்"— "விதினா மாத்ரயா காலே ஹிதை ரன்னைர் யதாபலம். ப்ரஹ்ருஷ்டோய: பிபேந் மத்யம் தஸ்யஸ்யா தம்ருதோபமம்" என்கிறார்கள். ஆதிகாலத்திய ஆரிய வைத்தியர்கள் "நெய், பால் முதலிய உணவுகளோடும், மற்றும் சிற்றுண்டிகளோடும் அவ்வித ஆஸவாதிகளை, வியாதி நீங்கியவன் அளவாய் அருந்துவது ஆயுளின் அபிவிருத்திக்கும், பல் விருத்திக்கும், சரீர போஷணைக்கும் அனுகூலமாகும்"—"ஸ்நிக்த்தை ராமயமுத்தஸ்ய பக்ஷ்யைச் ச ஸஹ ஸேவிதம். பவேதாயு: ப்ரகர்ஷாய பலாயோபசயாயச" என்றும் அதன் ஔஷதத்தன்மை அதிகமாகப் புகழப்பட்டிருக்கிறது. மிதமாகவும், ஏற்ற காலத்திலும் குறிப்பிட்ட நபர்கள் தவிர மற்றவர் மதுவை மனம்போன போக்கில் அமிதமாய் அருந்துவது அபாயகரமென்று அவ்வைத்தியர்களே விதித்திருக்க, அதைப் புறக்கணித்துவிட்டு, நாகரிகர்களெனப்படுவர் உட்பட உலகத்திய ஜனங்கள் ஜலப் பிராயமாய் மதுவகைகளை மட்டுமிதமின்றி மனக்களிப்புக்கென்று பிரதி தினமும்பருகிப் பணத்தையும், குணத்தையும், குடும்ப வாழ்க்கையையும் அநியாயமாய் அலங்கோல நிலைமைக்கு உட்படுத்துகிறார்கள்.

மேலே விளக்கிய மூன்று வகை மதுபான முறைகளுள் மூன்றாவதாகக் கூறியமுறையே விவேகிகளால் விரும்பத் தக்கதென்று கூறினேன். (1) மிதமாகவும் ஹிதமாகவும் கருதப்படும் இம்மதுபான முறையினால் மனோ தேகங்களுக்கு ஏற்படும் உத்ஸாஹத்துடன் கூடிய உரத்தையும் உயர்ந்தோர் மகிழ்ச்சி தரும் மதமென்றே வஸ்து தத்துவமறிந்த வைத்தியோத்தமர்கள் வழங்கியிருக்கின்றனர். மனதின் மகிழ்ச்சிக்கும், தேஹ வன்மைக்கும் முற்றிலும் அனுகூலமான இம்மதம் இகழத்தக்கதல்ல வென்றும், இது முதல் மதம் என்று வழங்கப்படு மென்றும் கூறப்படுகிறது. "புத்தி ஸ்ம்ருதி ப்ரீதிகரஸ் ஸுகச் சபாநாந்ந நித்ரா ஸுக வர்த்தநச் சஸம்பாட கீத ஸ்வர வர்த்தநச் சப்ரோக்தோதிரம்ய: ப்ரதமோ மதோஹி"—"ஆஸவாரிஷ்ட பானத்தினால் முதல் மதத்தில் மதி மகிழ்ச்சியுறும்; நினைவுக்கு எவ்வித நிலை மாறுபாடும் ஏற்படாது; அன்னபானங்களருந்துவதில் விருப்பமும், சுக நித்திரையிற் பிரவ்ருத்தியும் விருத்தியாகும்; படிப்பில் நோக்கமும், பாடுவதற்கேற்ற குரல் மேன்மையும் குறைவின்றி யுண்டாகும்; ஆகவே, முதல் மதமென்கிற இம்மதுபானத்தாலான குணம் மிக்க விரும்பத் தக்கதாம்" என்கிறார்கள் வாக்படாதிகள்.

(2) அதற்கு அடுத்தப்படியானது 'மத்திமதம்' எனப்படுகிறது. முற்கூறிய ஆஸவாரிஷ்டாதி மதுக்களைச்சிறிது அதிகமாக உட்கொண்டுவந்தாலும், மைரேயம்-சீது-வாருணி முதலிய அதிக காரமுள்ள மத்யங்களை அடிக்கடி யுட்கொள்வதாலும் மத்திம மதம் என்கிற மனோ விகாரம் ஏற்படும். "இதில் மதியின் போக்கு நினைவு, பேச்சு, நடத்தை இவை ஒரு சிறிது தடுமாற்றமடையும்; அமைதி யிழந்து பித்துக் கொள்ளிபோல் உருவத்திலும் பேச்சிலும் ஒருவாறு மாறுதலைப் பெறுவான். சோம்பலும் அதி நித்திரையும் அடிக்கடி யுண்டாகும். இவை மதுபானத்தில் தோன்றும் மத்திமதம் என்கிற இரண்டாவது படியாம்." முதலில் தேஹ-மனோ பலங்களைப் பெருக்கித் தென்படைய விரும்பி முதல் மாதத்திற்கேற்ற அளவு ஆஸவாரிஷ்டங்களை அருந்த முயன்றவர். அதை அப்பால் அடுத்தடுத்தும் அளவு மீறியும் பருகிப் பருகி இவ்விரண்டாம் படியை அடைய நேரிடுகிறது.

(3) இனி மூன்றாம் படியான மும்முரக்குடி வெறியைப் பற்றி ஒரு சிறிது விசாரிப்போம். உடலின் போஷணைக்கு உபயோகமான அன்னபானாதிகளை அலக்ஷியம் செய்து, மதுபானம் செய்வதிலேயே மட்டும் மிதமின்றி இறங்கிவிட்டால், சீது, மேதகம், வாருணி, ஸுக்தம, மைரேயம் முதலிய பல வேறு வகையான வெறியுண்டுபண்ணும் காரஸாரமுள்ள மதுவினங்களையும் அருந்த ஆரம்பித்துவிட்டால் அப்பால் அவர்களுக்கு ஏற்படும் வெறியின் வேகத்தை அடக்கவோ அளவிடவோ முடியாது. மூன்றாவது வெறி நிலைமையில் மனிதன் தன்வயமிழந்து தகாத விடங்களுக்குச் செல்வான்; மேன்மக்களை மதிக்க மாட்டான்; தகாதனவற்றைத் தின்பான்; நினைவு தடுமாறி நிந்தைக்கிடமான அந்தரங்கச் செய்திகளையும் உளறிக் கொட்டுவான்—"கச்சேதகம்யாந்ந குரூம்ச்ச மந்யேத் காதேத பக்ஷ்யாணிச நஷ்டஸம்ஜ்ஞ: ப்ரூயாச்ச குஹ்யாநி ஹ்ருதி ஸ்திதாநி மதே த்ருதீயே புருஷோஸ்வதந்த்ர:" என்று மதுபானத்தினால் ஏற்படும் மனோ நிலைமையின் மாறுபாடுகளை மிக்க நுட்பமாகப் பகுத்தறிந்து, வெறியிற் காணப்படும் வெவ்வேறு தார



காஞ்சீபுரம் பச்சையப்பன் ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டராகச் செல்லும் ஸ்ரீமான் எம். எஸ். கோடீஸ்வரனுக்குச் சென்னையில் ஒரு உபசரிப்பு நடைபெற்றது.

தம்ய அளவுகளை ஆர்யர்கள் அறிவித்திருக்கின்றனர்.

(4) முற்கூறிய மூன்று மதுபானக் கோளாறுகளிலும் முந்தியதைவிட பிந்தியது வர வர வெறியின் வேகத்தினால் மனதைக் கெடுக்கக்கூடிய குணமுடையதென்றாலும், அவற்றிலிருந்து தணிவும், பெருமுயற்சி செய்தால் காலக்கிரமத்தில் முழுப் பரிஹாரமும் அவற்றுக்குத் தேடலாம். ஆனால் மதம் என்கிற வெறிக்கு மற்றொரு அதிகப்படியான (நான்காம்) நிலைமை உண்டு; அது உன்மாதம் என்கிற பைத்தியக் கோளாறை விளைவிக்கும்; குடியில் அடங்காப் பிரவ்ருத்தியேற்பட்டுவிட்டால் இந்த நான்காம் நிலைமையாகும் படுகுழியில் பகுத்தறிவை முற்றிலு மிழந்து விழுந்துவிடுவான் மனிதன். செய்வன செய்யாதனவற்றைச் சற்றும் அவன் அறியான். இவ் வெறிக்குள்ளானவன் அசைந்தெழுந்து நடமாட வகையற்று வயமிழந்து வேரறுபட்ட மரம் போல் சாய்ந்தி வான் முற்றிலும் மூடத்தன்மைக்கு உட்பட்ட அம்மதுபானி உயிரிழந்த உடற்கட்டையினும் வேறுபடாத வெறியனாய் உலக வாழ்க்கைகளில் எதற்கும் உதவ தவனுவான் — "சதுர்த்தே து தே மூடா பக்நதாவிய நிஷ்க்ரிய: கார்யாகார்ய விசாராஜ்ஞோ ம்ருதாதப்யபரோ ம்ருத: கோ மதம் தாதருசம் கச்சேத் உன்மாதமிவா சாபரம்'' என்று குடியைக் கெடுக்கும் அடங்காக் குறி வெறியைப் பற்றிய ஒவ்வறிய வர்ணனை குடிப்பழக்கத்தில் இறங்கும் எண்ணிறந்த ஏழை மக்களுக்கும் பிறருக்கும் ஏற்ற படிப்பினையாகுமெனக் கருதி இவ்விஷயத்தை இங்கெடுத்து விளக்க விரும்பினேன்.

ஆங்கில வைத்தியர் கூறுவதென்ன?

குடிவெறி முதிர்ந்து உடல் மனம் தெரியாது உழலும் நிலைமையைப்பற்றி இனி ஆங்கில முறையில் அவ்வைத்தியாதிகாரிகள் விளம்புவதென்ன என்பதைப் படிப்பதும வாசக நேயர்களுக்கு உபயோகமாயிருக்கும. ஆயுர்வேதத்தில் வைத்தியத்துக்கு வசப்படாத குடிவெறியை பானாத்யயம்' என்றும், 'பரமதம்' என்றும், 'மாதாத்யயம்' என்றும் ல வேறு பரிபாஷைகளால் வழக்குவர். இதையே ஆங்கிலத்தில் 'டிப்ஸோமேனியா' என்றும், 'ஆய்னோமேனியா' என்றும் சொல்வது வழக்கம். மேல் நாட்டுக் குடிகளிடம் இக்குடிப்பழக்கம் அநேக காலமாக மற்ற நாட்டினரைவிட மிக்க மிதமிஞ்சி இருந்துவந்தும், மிதமில்லா மதுபானத்தினாலான கேட்டை, அந்நாட்டார் 1830-ம் வருஷத்துக்குப் பிறகுதான் உணர முயன்று முற்குறிப்பிட்ட பாரிபாஷிகம் பெயரிட்டு அந்நிலைமை நிந்திக்கத்தகுந்ததென வழங்கத் தலைப்பட்டனர். உணவுகளிலும உள்ளம் செல்லாது நித்தமும் நிவ்ருத்திக்கவியலாத குடிப்பழக்கத்தில் மூழ்கியவருக்கு மதுபானத்திலேயே மறுக்கக்கூடாத ஆவலும் ஆதிரமும் ஏற்படுமென்றும், அதை மதுபானத்தாலேற்படும் ஓர் மனக்கோளாறென்று ஸாமாந்யமாகக் கூறுவதைவிட மதுபானத்தினாலான உன்மாதம் (பித்து) என்று வழங்குவதே உசிதமென்றும் டாக்டர் டானா என்பவர் 'பிராக்டீஸ் ஆப் மெடிஸின்' என்னும் தம் நூலில் கூறுகிறார் மும்முரமாக் குடிப்பழக்கத்தில் ஈடுபட்டு அதில் ஒருவன் அகற்றவியலாத ஆவலைப் பெற்றுவிட்டால், அவனது நாடி நரம்புகளும் மூளையும் முற்றிலும் வலிவிழந்து, அவனுக்கு ஆதியிலிருந்த ஸொந்த மனோபாவ மெதற்கும் அவை வசப்படாமல் தடுமாற்றமடைந்து, பித்தென்கிற விலக்கக்கூடாத விகாரத்தை அவனுக்கு விளைவிக்கிறதென்றும், அவனை ஓர் அறையில் படுக்கவைத்து அடைத்து வைத்துப் பாதுகாப்பதோ, அல்லது அவனிஷ்டப்படி ஆத்திரத்தை அடக்க மதுவை அருந்த விட்டு விடுவதோ இவ்விரண்டில் ஒன்றுதான் அப்பேராவலின் 'வேகமென்னும் பித்து வெறியைத்' தாத்காலிகமாகத் தணிக்கு முபாயமாகுமென்றும் அவர் கூறியிருக்கிறார். அமிதமான குடிப்பழக்கத்தால் அளவற்ற ஜனம் பல வகையிற் சீரழிவதைக் கவனித்த அதிகாரிகள், இங்கிலாந்தில் 1844-ம் வருஷத்தில் அவ்வழக்கத்தைத் தடுக்கவும் குடிப்பழக்கத்தில் ஈடுபட்டவர்களைத் தண்டிக்கவும் தக்க உபயாயங்களை விசாரித்தறிய நோக்கங்கொண்டு 'இங்கிலீஷ் லுனஸி கமிஷன்' என்று ஒரு கமிட்டியை நியமித்தனர். உன்மத்தர்களுக்கென்று அமைக்கப்பட்டுள்ள விடுதிகளில் பெருங் குடிப்பழக்கத்தால்

(29-ம் பக்கம் பார்க்க.)

வைத்தியரத்ன பண்டிட் யு. ராமநாத சாஸ்திரியாருடைய

மஹா பில்வாதி லேகியம்.

பித்தவாயு, கீல் பிடிப்பு, பித்த மயக்கம், பலஹீனம், அன்னத் துவேஷம், அஜீர்ணம், மலச் சிக்கல் இவைகளைக் கண்டிக்கும். 1 சேர் கொண்ட டப்பி 1-க்கு ரூபா 3. வி. பி. வேறு.

(Sastriar in Govt. Medical dress)

ஆனந்த பற்பொடி

குணம், ருசி, வாசனை இவைகளில் இது ஒன்றுதான் மார்க்கெட்டில் சிறந்தது. டப்பி 1-க்கு 0—2—9. ஒரு டஜன் கொண்ட பெட்டி 1-க்கு ரூபா 1—14—0. வி.பி.வேறு. எங்கும் கிடைக்கும்.

ஆனந்த பற்பசை

ஆனந்த பற்பொடியை பசை ரூபமாக செய்யப்பட்டிருக்கிறது. ட்யூப் 1க்கு 0-8-0 வி. பி. வேறு எங்கும் கிடைக்கும்.

திவான் ஸர் C. P. ராமஸ்வாமி அய்யர், K. C. I. E. திருவாங்கூர் சமஸ்தானம், அவர்கள் எழுதுகிறார்:—

"வைத்தியரத்ன பண்டிட் யு. ராமநாத சாஸ்திரி, D. V. S. அவர்கள் ஆயுர்வேத சாஸ்திர ரீதியாய் அநேக வருஷங்களாக ஜயத்துடன் வைத்தியம் செய்து கொண்டு வருகிறார் எனது குடும்பத்திலுள்ள அனைவர்களாலும் இவரால் தயார் செய்யப்பட்ட அநேக மருந்துகள் உபயோகிக்கப்பட்டு வருகின்றன. ஆதலால் மேற்படி வைத்தியரத்ன அவர்களுடைய விடாமுயற்சிக்கும் அவருடைய மருந்துகளின் யோக வீரியங்களுக்கும் அத்தாக்ஷி செய்வதற்கு நான் அத்யந்தம் ஸந்தோஷமுள்ளவனாக இருக்கிறேன்.''

திவான் ஸர் R. K. ஷண்முகம் செட்டியார், K. C. I. E. கோச்சி சமஸ்தானம், அவர்கள் எழுதுகிறார்:—

"வைத்தியரத்ன பண்டிட் யு. ராமநாத சாஸ்திரிகளுடைய ஆனந்த பற்பொடியை நான் உபயோகித்து இருக்கிறேன். அப்பற்பொடி உபயோகிப்பதற்கு அத்யந்தம் ஆனந்தகரமாயும் நேர்த்தியாகவும் இருப்பதை நான் அறிந்தேன். ஸ்ரீமான் சாஸ்திரிகளுடைய முயற்சிக்கு நான் அபிவிருத்தியைக் கோருகிறேன.''

சகல ஆயுர்வேத ஔஷதங்களும் கிடைக்கும். கேட்லாக் இனம்.

வைத்தியரத்ன யு. ராமநாத சாஸ்திரி,

வைத்திய ஸித்தாச்ரமம். 39, பஜார்ரோட், மயிலாப்பூர், மதராஸ்

கல்யாணி வண்டியில் ஏற விருந்த என் மனைவியைச் சற்று அப்பால் அழைத்துக் கொண்டுபோய் "உடம்பை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள். அடிக்கடி கடிதம் எழுதிக்கொண்டிரு" என்றாள்.

கடிதத்தின் ரகசியம்

——:[o]:——

"பூரி"

"மனைவி சகிதமாக ரயில் பிரயாணம் செய்வதாயிருந்தால், ரயில் கிளப்புவதற்குப் பன்னிரண்டு மணி நேரம் முன்னதாகவே அவளைத் துரிதப்படுத்திக் கொண்டிரு" என்று ஒரு மஹான் சொல்லியிருப்பதாக ஞாபகம். நானும் என் மனைவியும் ஒரு சமயம் பங்களூர் புறப்பட விருந்த போது மேற்படி புத்திமதியை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு காலை முதலே அவளை அவசரப்படுத்திக்கொண்டிருந்தேன்.

நாங்கள் வண்டியில் சாமானை ஏற்றிக் கிளம்புவதற்குத் தயாராயிருந்த சமயம் பக்கத்து வீட்டுப் பவானி வந்து சேர்ந்தாள். அவள் என் மனைவி ஊரைவிட்டுச் சிறிது காலம் போயிருப்பதைச் சகிக்க மாட்டாதவள்போல் தோன்றினாள். "இந்தா நீ ஊர் போய்ச் சேர்ந்ததும் உடனே கடிதம் எழுத வேண்டும். பிறகு இரண்டு நாளைக்கொருதரம் உங்கள் உடம்பு சௌக்கியத்தைப் பற்றித் தவறாமல் எழுதிக்கொண்டிருக்க வேண்டும். பேசாதிருந்துவிடாதே" என்று கேட்டுக் கொண்டாள்.

"இல்லை, கட்டாயம் எழுதுகிறேன்" என்று என் மனைவி வாக்குத்தத்தஞ் செய்தாள்.

"மறக்கமாட்டாயே?"

"மறக்கவே மாட்டேன்" என்று என் மனைவி அன்புடன் கூறினாள்.

பவானி இந்தப் பதிலைக் கேட்டுச் சந்துஷ்டி யடைந்த முகத்துடன் சென்றதும் காந்தாமணி வந்தாள். அவள் மகா கண்டிப்புப் பேர்வழி யென்று தோன்றிற்று. அவள் என் மனைவியின் கையைப் பிடித்துக்கொண்டு "நீ எனக்கு அடிக்கடி கடிதம் எழுதிக்கொண்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால் அப்புறம் உன்னுடன் பேசவேமாட்டேன்" என்றாள்.

"நன்றாகச் சொன்னாய்! உனக்கு எழுதாமல் வேறுயாருக்கு எழுதப்போகிறேன்" என்றாள் என் மனைவி.

"வாரத்துக்கு ஒன்றாவது எழுதவேண்டும்" என்று உத்தரவிட்டுக் காந்தாமணி சென்றாள்.

ரயிலுக்கு நாழிகையாகிவிட்டதால் நான் என் மனைவியை வண்டியிலேறும்படி சொல்லிக் கொண்டிருந்தபோது எங்கிருந்தோ கல்யாணி வந்து முளைத்தாள்.

அவள் வண்டியில் ஏற விருந்த என்மனைவியைச் சற்று அப்பால் அழைத்துக்கொண்டு போய் "உடம்பை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள். அடிக்கடி கடிதம் எழுதிக்கொண்டிரு" என்றாள்.

"நீங்கள் சொல்ல வேண்டுமா? நான் பார்க்கும் வேடிக்கைகளை யெல்லாம்பற்றி விவரமாகக் கடிதம் எழுதுகிறேன்" என்றாள் என்மனைவி.

"அப்படித்தான் சொல்வாய். பிறகு அங்கே போனதும் மறந்துபோய் விடுவாய். மறந்தாயோ இந்த வீட்டில் அடி எடுத்து வைக்க மாட்டேன்" என்று அவள் எச்சரித்தாள்.

"இந்தத் தடவை பாரேன். நான் உங்களுக்கெல்லாம் எழுதுவதற்கென்று தயாராய் இங்கேயே இரண்டு ரூபாய்க்குக் கவர் வாங்கி வைத்திருக்கிறேன்" என்று என் மனைவி ஒரு பொய் சொன்னாள்.

என் மனைவிக்கு இவ்வளவு பேர் அத்தியந்த சிநேகிதிகள் இருக்கிறார்களென்று எனக்கு இதுவரையில் தெரியாது. இன்னும் சற்றுத் தாமதித்தால் வேறு யாராவது வந்துவிடுவார்களோவென்று பயந்து அவளை வண்டியிலேறச் செய்து ஸ்டேஷனுக்குச் சென்றோம. நாங்கள் டிக்கெட் வாங்கிக்கொண்டு ரயில் ஏறுவதற்கும் அது கிளம்புவதற்கும் சரியாயிருந்தது.

பெங்களூர் போய் ஒரு வாரத்துக்கெல்லாம் என் மனைவியின் சிநேகிதிகள் ஞாபகம் வந்தது. "பவானிக்குக் கடிதம் எழுதிவிட்டாயா?' என்று என் மனைவியைக் கேட்டேன்.

"யாரு பவானிக்கா? போயும் போயும் அந்த வாயாடிக்கா கடிதம் எழுதப் போகிறேன்?" என்று அவள் சாவதானமாகச் சொன்னதைக் கேட்டு நான் ஆச்சரியப்பட்டேன்.

ஸ்திரீகளின் வியாதிகளைப் போக்க "லோத்ரா"வை விடச் சிறந்த உண்மை நிவாரணி வேறில்லை இது மாதவிடாயை கிரமப்படி கிரமமாக வரச் செய்கிறது; அளவுடன் மாத விடாயை வெளிப்படுத்துகிறது; அதிகமாகப் போவதைத் தடுக்கிறது; மாதவிடாய்க் காலத்தில் ஏற்படும் நோயையும், வயிற்று நோய், முதுகு நோய்களையும் தீர்க்கிறது; இவை எல்லாவற்றுடன் சாதாரணமாக தேக சுகத்துக்கும் பலவிர்த்திக்கும் இஃதொரு உயர்ந்த பலனளிக்க வல்ல 'டானிக்' மருந்தாகவுமிருக்கிறது.

லோத்ரா

மாதவிடாய்க் கோளாறுகளுக்குரிய சிறந்த 'டானிக்'

ஒவ்வொரு வீட்டிலும் இது இருக்க வேண்டியது

கேஸரி குடீரம்

எழும்பூர் :: :: மதராஸ்

10 வருஷம் உத்திரவாதமுள்ள புது மாதிரியான பஞ்சவர்ண கல்செயின்கள்

(செயின் 1-க்கு)

ரூபாய் 5-0-0.

எங்கள் ரோல்டு கோல்டு செயின்கள் ஐந்துவித நிறமான செயற்கை கற்கள் வைத்துக் கட்டிய இந்த புது மோஸ்தர் செயின்களை குழந்தைகளும், பெரியவர்களும் அணிந்து ஆனந்தமடையலாம்.

(கேட்லாக் இலவசம்)

R. S. பிரகாசம் & Co.,

அலாய் கோல்டு ஜுவல்லர்ஸ்,

187, சைனா பஜார் ரோட், ஜி. டி.

மதராஸ்

"காந்தாமணிக்கு!"

"அந்தத் தரித்திரத்துக்குக் கடிதம் எழுதுகிறது வேறையா? நீங்கள் உங்கள் காரியத்தைப் பார்த்துக் கொண்டு போங்கள். நான் அவர்களுக்குக் கடிதம் எழுதினால் என்ன, எழுதாவிட்டால் என்ன?" என்று சினந்தாள்.

என்னுடைய ஆச்சரியம் அதிகமாயிற்று. "ஆனால் கல்யாணிக்குக்கூட எழுதப்போவதில்லையா?" என்று விசாரித்தேன்.

அப்பொழுது என் மனைவிக்கு வந்த கோபத்தைப் பார்க்கவேண்டுமே. "வேறுயாருக்கு எழுதினாலும் எழுதாவிட்டாலும் அந்த மூதேவிக்கு மட்டும் நான் ஒரு நாளும் எழுதப்போவதில்லை" என்று அழுத்தந் திருத்தமாகக் கூறினாள்.

கடைசிவரையில் அவள் யாருக்கும் கடிதம் எழுதவில்லை. பெங்களூரிலிருந்து நாங்கள் ஊர் திரும்பியபிறகு அவள் தன் தோழிகளுக்கு என்ன சமாதானம் சொன்னாளோ எனக்குத் தெரியாது.

அடுத்தவருஷம் நாங்கள் மைசூருக்குப் புறப்பட்டபோது முன்போலவே ஒரு நாடகம் நடந்தது.

பவானி கடிதம் எழுத மறந்துவிடக் கூடாதென்று மன்றாடினாள். காந்தாமணி கடிதம் எழுதாவிட்டால் பேசப்போவதில்லை யென்று பயமுறுத்தினாள். கல்யாணி வீட்டில் அடி எடுத்துவைக்கப் போவதில்லை யென்று சபதஞ் செய்தாள். என் மனைவியோ கடிதம் எழுதத் தவறுவதில்லை யென்று எல்லோருக்கும் வாக்குத் தத்தம் செய்து கொடுத்தாள்.

மைசூர் வந்த சில தினங்களுக்குப் பிறகு ஒரு நாள் என் மனைவியினிடம் அவளது சிநேகிதிகளுக்குக் கடிதம் எழுத வேண்டியதைப்பற்றி ஞாபகப் படுத்தினேன். அவள் மிகவும் வெறுப்புடன் "ஏதாவது அசட்டுப் பிசட்டென்று பேசாதேயுங்கள். நான் ஒருத்திக்கும் கடிதம் எழுதப் போவதில்லையென்று உங்களுக்குத் தெரியும்" என்றாள்.

"அப்படியானால் என் அவர்களிடம் எழுதுவதாகச் சொல்லிவந்தாய்?"

"மரியாதைக்குச் சொன்னேன்" என்று சொல்லிவிட்டுத் தன் சிநேகிதிகளைப்பற்றித் தனது அபிப்பிராயத்தை வெளியிட்டாள்.

அன்று மாலை நாங்கள் ஒரு ஸினீமாவுக்குப் போவதாக இருந்தோம். நான் புறப்படுவதற்குத் தயார் செய்துகொண்டு அவளைப் போய்க் கூப்பிட்டபோது "எனக்கு இன்றுவேலையிருக்கிறது. நாளைக்குப் போகலாம்" என்றாள்.

ஸினீமாவுக்கு அன்று கட்டாயம் போகவேண்டுமென்று அவளை பிடிவாதஞ்செய்துவிட்டு இப்பொழுது வேண்டாமென்று சொல்வதைக் கேட்டு வியப்படைந்தேன்.

"என்ன வேலையோ?" என்று கேட்டேன்.

"என் சிநேகிதிகளுக்கெல்லாம் கடிதம் எழுதப்போகிறேன்" என்றாள்.

"நான் கேட்டபோது கோபித்துக்கொண்டாயே?" என்றேன்.

"அதென்னமோ அப்பொழுது கோபம் வந்தது. எழுதுகிறேன் என்று சொல்லிவிட்டுப் பிறகு எழுதாதிருந்தால் நன்றாயிருக்குமா?" என்று கூறிக் கடிதங்கள் எழுதுவதில் முனைந்தாள்.

திடீரென்று அவளுக்குக் கடிதம் எழுதத் தோன்றிய தன் காரணம் என்னவென்று அறிய ஆவல் கொண்டு அவள் எழுதுவதற்காக வைத்துக் கொண்டிருந்த லெட்டர் பேப்பரைக் கவனித்தேன். அது மிகவும் உயர்ந்த ரகப் பேப்பர். அதன் ஒரு மூலையில் "ஸர் சேஷாச்சார்" என்று அச்சிடப்பட்டிருந்தது. நாங்கள் தங்கியிருந்தது அவர் வீட்டில் தான்.

சமஸ்தான நீதிபதியான ஸர் சேஷாசார் வீட்டில் நாங்கள் தங்கியிருந்த பெருமையைத் தன் சிநேகிதிகளுக்குத் தெரிவிக்க அவள் விரும்பியதைக் கண்டு நான் ஆச்சரியப்படவில்லை. பெருமைக்கு ஆசைப்படாத பயித்தியக்காரி ஸ்திரீ யார்?

வருஷப்பலன்

மாதவாரி ஒருவருஷப்பலன் எழுத ரூ. 3. வாராந்திர பலன் எழுத ரூ. 10. தர்ம நியாயமான 5 கேள்விகளுக்கு பதில் எழுத ரூ. 1. வி. பி. செலவு 5 அணா. ஜாதக விவரம் அல்லது கடிதம் எழுதும்போதுள்ள நேரம், சுமார் வயது, பெயர் தேவை.

ஹநுமான் ஜோதிஷ ஆச்ரமம்,
திருத்தணி, S. இந்தியா

கொனேலா - கொனேலாக்ஸ் - கொனேசெல்ப்

கொனேசைகான்

வெள்ளை, வெட்டைக்கு

பாட்டில், ரூ. 1-8-0. யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்.

201, மோகல் வீதி, ரங்கூன். (மதுரை, பம்பாய், கல்கத்தா.)

ஜெனித் திராக்ஷாஸவா

ஆயுர்வேத சாஸ்திரீய முறைப்படி "ஜெனித் திராக்ஷாஸவா" தயாரிக்கப்பட்டிருக்கிறது. க்ஷயரோகத்தின் ஆரம்ப நிலையையும், காசம், இருமல் முதலிய ஈரல் நோய்களையும், ஜல தோஷம், சளி, அஜீர்ணம், மலச் சிக்கல், வாந்தி யெடுத்தல் முதலான நோய்களையும், தொண்டையைப்பற்றின சகல ரோகங்களையும் முழுவதும் குணப்படுத்தும். குழந்தைகளுக்கு உண்டாகும் கக்குவான் இருமலுக்குக் கைகண்ட மருந்து. இது வெகு ருசியுள்ள பானம். தினசரி உபயோகித்தால் குடலைச் சுத்தி செய்து பசியை அதிகரிக்கச் செய்கிறது. படுப்பதற்குச் சிறிது நேரத்திற்கு முன் ஜெனித் திராக்ஷாஸவாவைச் சிறிது பருகினால், காலையில் எழுந்து வேலை செய்வதற்கு வெகு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் கொடுக்கும்.

ஒவ்வொரு நகரத்திலும், கிராமங்களிலும்கூட, இப்பொழுது ஜெனித் திராக்ஷாஸவா கிடைக்கும். தபால் மூலமாக இம்மருந்தை அனுப்புவதென்றால் அதிகச் செலவு ஆகும். நீங்கள் இருக்கும் இடத்திலேயே ஜெனித் திராக்ஷாஸவாவை வாங்கினால் உங்களுக்கு லாபமும் சௌகரியம் உண்டு.

விலைகள்:—1½ பவுண்டு ரூ. 1-12-0 1 பவுண்டு ரூ. 1-4-0.
½ பவுண்டு ரூ. 0-12-0

பாக்கிங் வி. பி. செலவுகள் வேறு.

ஜெனித் கெமிகல் ஒர்க்ஸ்,

தேவகரன் கட்டடங்கள், பிரின்ஸஸ் தெரு, பம்பாய்

The Zenith Chemical Works,

Deokaran Mansions Princess Street, Bombay, No. 2

சென்னை ராஜதானிக்கும், மைசூர் சமஸ்தானத்திற்கும் ஸோல் டிஸ்டிரிபியூட்டர்கள்.—

ஜே. பலாபாய் & கம்பெனி,
260, சைனாபஜார் — மதராஸ்

ஆடவருக்கோர் நற்செய்தி!

நீங்கள் பலவீனப்பட்டு, வாழ்க்கை இன்பத்தைப் பூரணமாக அனுபவிக்க முடியாமலிருந்தால் 15 தினங்களுக்கு டாக்டர் பால்ஸ்விம் மாத்திரைகளைச் சாப்பிடுங்கள்; அற்புதபலனைக் காண்பீர்கள் பத்திரிகைகளில் வெளிவரும் பல இந்திய, வெளிநாட்டு மருந்துகளைவிட இம்மாத்திரைகள் மிக மேலானவை. தீங்கிழைக்கும் சாக்குகள் கிடையாது. சுத்தமூலிகைகளாலானவை. நரம்புத் தளர்ச்சி, புருஷத்துவமின்மை, ஹிருதய மெலிவு, நீரிழிவு, நீல் பிடிப்பு முதலியவற்றிற்கு நல்லது. எல்லா மருந்து வியாபாரிகளிடமும் புட்டி 1-க்கு ரூ. 2 வீதம் கிடைக்கும், 15 நாளைக்கு வரும். அப்பா & கம்பெனி, சைனாபஜார் ரோட், மதராஸ். தாதர் & கம்பெனி, பார்க் டவுன் மதராஸ்.

S. PAUL & Co., Chemists, (S. M.)
4, Hospital Street, Dharamtola, CALCUTTA.



ஸ்தாபிதம்
1885.

ஐக்கோர்ட் ஜட்ஜ்களாலும் ஆங்கிலேயர்களாலும் ஜமீந்தார்களாலும் உயர்தர உத்தியோகஸ்தர்களாலும் பிரபல தனவைசியர்களாலும் அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்று கவர்ன்மெண்டு 26 ஜில்லாக்களுக்கும் போர்டு மூலமாய் சப்ளை செய்து கொண்டு வரப்பட்ட உறுதியான இரும்புப்பெட்டிகளும் நயமான இரும்பு பீரோக்களும் எங்களிடம் சரஸமான விலைக்குக் கிடைக்கும்.



பழ. மு. முத்தய்யா செட்டியார் & ஸன்ஸ்,
இரும்புப் பெட்டி வியாபாரம்,
7, திருவொற்றியூர் ஐரோடு, பழைய வண்ணாரப்பேட்டை, மதராஸ்.
பிராஞ்சு ஆபீஸ்,—1/135. பிராட்வே, மதராஸ்.

நவ நாகரீகம்

வெண் பொங்கல்

(காசினி எழுதியது.)

* * * வெண் பொங்கலுக்கும், தத்தியோன்னத்துக்கும் பிடித்தது கொண்டாட்டம். வெறும் அரிசியினால் செய்யப் பட்ட பதார்த்தம் என்ற பெயர் போய். இவை எல்லாவித சத்துக்களும் நிரம்பிய மேன்மையான உணவுப் பதார்த்தங்கள் ஆகிவிட்டன. நேற்று மத்தியானம் நான் லேடி சின்னையா வீட்டிற்குப் போயிருந்தேன். டிபனுக்கு எல்லாரும் தட்டுத் தட்டாக வெண் பொங்கலையும் சீமைத் தக்காளிப் பழ சாலட்டையும் வைத்துச் சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள். 'ஏது உங்கள் வீட்டில்கூட அரிசிப் பலஹாரம் செய்து விட்டீர்கள்? இரண்டு வேளை அரிசிச் சாதம் சாப்பிடுவது போராதா? டிபனுக்கும் இதுவேவா வரவேண்டும் என்று சொல்லுவீர்களே! என்று என்னுடன் வந்த அத்தை கேட்டாள்.

'மார்கழி மாதமோ இல்லையோ? வெண் பொங்கலை நினைத்துக்கொண்டுவிட்டார்கள்' என்று நான் சொன்னேன்.

அப்படி ஒன்றும் இல்லை; அத்தை அன்றைக்கு ஒரு நாள், 'யாராவது ஒரு விஷயத்

தைப் பற்றி எழுதுவது வரை உங்களுக்கு நினைவிருக்கலாம். ருங்கள்; உருட்டி உருட்டி

யில் அதில் உள்ள சாராம்சம் அந்த சமாசாரம்தான் இது வெண்பொங்கலை மொக்குகிறார்

சைதாப்பேட்டையில் சமீபத்தில் நடைபெற்ற சுகாதாரவாரக் கொண்டாட்டத்தை யொட்டி நடந்த குழந்தைகள் காட்சி

உங்களுக்குப் புரியாது; எழுதி விட்டால் வேத வாக்காகி விடும்' என்று சொன்னது

வும். எனக்கு வெண் பொங்கல் பிடிக்கும், பண்ணுங்கள் என்று நான் சொல்லும்போதெல்லாம், எல்லாருமாக மூணுவது வேளையும் அரிசிச் சாதமா? கோதுமை, ராகி, முதலியவைகளினால் செய்த சத்து டிபனுகச் சாப்பிட வேண்டாமா என்று என்னுடன் சண்டைக்கு வருவார்கள். இப்பொழுது பா

கள்!' என்றான் லேடி சின்னையாவின் மகன்.

'போங்கோ அண்ணா! ஏதாவது ஏத்தாளி பண்ணுவதுதான் உங்களுக்கு வேலை! என்று அவனுடைய கடைசி சகோதரி சொன்னாள்.

'அத்தை நியாயம் சொல்லட்டும், இங்கு உள்ளவர்களில்

(18-ம் பக்கம் பார்க்க)

உபயோகிப்பதற்குமுன் பிடிக்கும் காணாமல் அற்பமாயிருந்த கூந்தல், கேசவர்த்தினி உபயோகித்த பிறகு அபரிமிதமாய்விட்டதால், இரு கைக்கு மடங்கவில்லை. கூந்தலைக் கருத்து, நீண்டு, செறிந்து வளரச் செய்வது

கேசவர்த்தினி

ஒன்றே

மாத உபயோகத்துக்குப் போதுமான புட்டி விலை அணா 12.

மேற்செலவு வேறு.

தயாரிப்பவர்: தென் இந்திய ரஸாயன சாலை, மயிலாப்பூர், சென்னை.

குமார சஞ்சீவினி

ரிஜிஸ்டர்ட்

குழந்தைகளின்

ஈரல்-குலை-ஜுரக்கட்டி

வியாதிகளுக்கு

நிகரற்ற குணமுடையது

ஸ்ரீ வைத்தியர். அண்ணாமலை முதலியார்

வைத்தியர் அண்ணாமலை தெரு. மயிலாப்பூர், சென்னை.

:காங்கிரஸ் தலைவர் வருகை:



பண்டித ஜவஹர்லால் நேரு, ஸவாடா ஸ்டேஷனில் உபசாரணைக் கமிட்டித் தலைவர் ஸ்ரீமான் சங்கரராவ் தேவ் முதலியோரால் வரவேற்கப்பட்டார்.

(வலது பக்கம்) திலகர் நகரின் வாயில்—"சத்திரபதிகேட்"



காங்கிரஸ் தலைவர் ஓர் ஸ்பெஷல் ரயிலில் ஸவாடா ஸ்டேஷனில் வந்திறங்கினர்.

காங்கிரஸ் தலைவர் ஸவாடா ஸ்டேஷனிலிருந்து பெய்ஸ்பூருக்கு ஆறு ஜோடி காளைகள் பூட்டிய ரதத்தில் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்.

: பெய்ஸ்பூர் காங்கிரஸ் படங்கள் :

காங்கரஸ் பந்தலில தலைவர்கள் நின்று பேசிய மேடை.

(வலது பக்கம் மேல்படம்) கிருஷிகர்கள் ஜதாவை வரவேற்று பண்டித ஜவஹர்லால் நேரு பிரசங்கம் செய்யும் :காட்சி.





அகில இந்திய காதி பொருட்காட்சியைத்:திறந்து வைத்து மகாத்மாஜி பிரசங்கம் செய்கிறார்.

பண்டித ஜவஹர்லாலும் சர்தார் படேலும் விஷயாலோசனைக் கமிட்டிக் கூட்டத்திற்குச் சென்றபோது எடுத்த படம்.

(வலது பக்கம்) காங்கிரஸின் போது கூடிய ஜனத்திரளின் ஒரு பகுதி.

நவ நாகரீகம்

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்தானே பெரியவர்?' என்ருன்.

'அத்தை எற்கனவே உங்கள் கக்ஷி' என்று அவள் ஆக்ஷேபித்தாள்.

'சரி; நான் உள்ளதைச் சொல்லுகிறேன். அப்புறம் யார் வேண்டுமானுலும் நியாயம் சொல்லட்டும். இந்த வீட்டில் அரிசி டிபன் என்ற ஆக்ஷேபனையைப் பற்றி நான் அதிகம் சொல்லவேண்டியதில்லை. கொஞ்ச நாட்களுக்குமுன், வெண்பொங்கலில் பயற்றம் பருப்பு, நெய், அரிசி முதலியவை கலந்திருக்கும் அளவு மிகவும் உசிதமானதென்றும், அதுவும் கெட்டித் தயிர் விட்டுப் பிசையப்பட்ட தயிர் சாதமும் சத்துப் பொருந்திய உணவுகள் என்றும் ஒரு தினசரிப் பத்திரிகையில், கணக்குகளுடன் போட்டிருந்தது. மேலும், வெள்ளரிக்காய்ப் பச்சடி, கோசுமல்லி வைடமீன் நிறைந்த உணவு என்றும் போட்டிருந்தது. இது சமீபத்தில்தான் எழுதபபட்ட விஷயம். இந்த வீட்டில் வெண்பொங்கல் இத்துடன் மூன்று தரம் செய்தாகிவிட்டது. தயிர் சாதம் தினம் செய்யத் தயார். இனறைக்குப் பாருங்கள்; உருளைக்கிழங்கு வறுவல் பண்ணக் கூடாதோ? டொமாடோ சாலட்டில் தான் சத்து அதிகம் என்று அதைப்பண்ணி இருக்கிருர்கள். நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்' என்று சிரித்தான்.

ஆனுல் அவன் சொன்னது என்னமோ உண்மைதான். தினசரிப் பத்திரிகையில் படித்தோம் என்று இன்று ஆனாபிள், சிவன் வீட்டில் தயிர் சாதமும், வடையும் டிபன் செய்திருந்தார்கள் இப்பொழுது வெண் பொங்கலையும் தயிர் சாதத்தையும் பண்ணிப் பரிமாறி, சகல சாராம்சங்களும் ததும்பும் சரியான, நாகரீகமான உணவு என்று கூறலாம். தொட்டுக்கொள்ளுவதற்கு சாலட், கோசுமலலி, வடை, இவைகளைக் கூட்ட் பண்ண வேண்டும். வறுவல் மட்டும் இன்னும் சத்துள்ள உணவாகக் கருதப்படவில்லை. அப்படியே நறுக்கி, பச்சையாக எண்ணெயில் வறுக்கப்படுவதினுல் உருளை, சேனை, வாழை முதலிய வறுவல்கள் சத்துள்ள புஷ்டிகரமான ஆகாரம் என்று யாராவது கண்டு பிடித்து எழுதினுல், அப்புறம் தெரியும் அதன் மகிமை! என் இருள் என் அத்தை. அடுத்து இரண்டு மூன்று விஷயங்களில் அத்தை சொன்னது சரியாகிவிட்டதினுல், அத்தை அட்டகாசம் பண்ணுகிருள். சில வேளைகளில் எனக்கே கோபம் வந்துவிடுகிறது.

வளையல்

'சுதேசிப் பொருட் காக்ஷியில் புதிய தினுசு வளையல்கள் வந்திருக்கிறதாமே' என்று நீ கேட்டிருக்கிருய். புதிய தினுசுகள் அப்படி ஒன்றும் அதிகமாகக் காணோமே? செலுலாயிட்டில் பட்டையான வளையல் தினுசு ஒன்று வந்திருக்கிறது. இது சுமாருக்கு ஒரு விரல் அகலத்துக்குமேல் இருக்கிறது. பல அழகிய வர்ணங்களில், சரிகை வேலை செய்யப்பட்ட இந்த வளையல்கள் ஜதை எட்டு அணு என்று விற்கிருர்கள். இது பட்டையாகவும், ஓரங்கள் கத்தரிக்கப்பட்டும், அநேக தினுசில் விற்கப்படுகிறது. போன வருஷம் மாதிரியில், உருண்டையான கனமான முறுக்குக் கண்ணுடி வளையல்களிலும் பல தினுசுகள் வந்திருக்கின்றன. மெல்லிய வளையல்களும் ஏராளமாக வந்திருக்கின்றன. என் சிநேகிதி ஒருத்தி தன் குழந்தைகளை அழைத்துக்கொண்டு எங்கள் வீட்டிற்கு வந்திருந்தாள். அவள் குழந்தைகள் கையில் சிறிய சிறிய நக்ஷத்திரங்கள் மாதிரியில் செய்யப்பட்ட பூக்கள் வைத்த செலுலாயிட் வளையல்கள் போட்டிருந்தாள். இவை மிகவும் அழகாக இருந்தன. எங்கேயோ காக்ஷியிலில் வாங்கினுளாம். ஜதை இரண்டணுத்தானும் விலை ஆச்சுதாம்.

பொருட் காக்ஷியில் கண்ணுடித் துண்டுகளை உருக்கி, வளையல் செய்யும் விதத்தைச் செய்து காண்பிக்கிருர்கள். நெருப்புக்கு நடுவில் ஒரு இரும்புக் கம்பியில் சொருகப்பட்ட கண்ணுடித் துண்டை வைத்து நெருபபு மாதிரியில் அது சிவந்து ஜொலித்துப் பிறகு உருக ஆரமபித்ததும், மற்ருெரு இரும்புக் கம்பியினுல் ஒரு ஓரத்தைப் பிடித்து, இழுத்து ரப்பர் மாதிரியில் நீட்டிக் கைலாகவமாக முறுக்கும் காக்ஷி மிகவும் நன்ருக இருந்தது. மற்ருெரு இடத்தில் குயவன் சட்டி புனைவதும் பார்ப்பதற்கு ஆச்சரியமாக இருந்தது. அவனைச் சுற்றிப் பல பேர்கள் நின்றுகொண்டு வேடிக்கை பார்த்ததுமன்றித் தாங்கள் இதுவரையில் சட்டி பண்ணுவது எப்படி என்பதைக் கண்டதே கிடையாது என்பதையும் ஒத்துக்கொண்டார்கள். நீயும், நானும் குசக் குடிசைக்குச் சென்று, இந்த வேடிக்கை பார்த்துக் குழந்தைகளாக விளையாடினது எனக்குப் பலமாக நினைவு வந்தது. பொருட் காக்ஷி எப்பொழுதும்போல் தான் இருந்தது. தினுசு, தினுசான கதர் ஆடை, கதர்ப் பட்டு எல்லாம் வந்திருக்கின்றன. மற்றைய விஷயங்கள் அடுத்த கடிதத்தில்.

* * * *

உயர்ந்த
வைரங்கள்
T. R.
ஜோஷி & சன்ஸ்,
Diamond Merchants
38, ஏகாம்பரேசுவரர் அக்ரஹாரம்
பி. டி. மதராஸ்.

ரூ. 100 இனாம்

(மாந்திரீக மோதிரம்)

காதல் விஷயங்களில் வெற்றியைத் தரும். பரீக்ஷையில் தேர்ச்சி உண்டாகும், உத்தியோகம், புத்திர பாக்கியம், செல்வம் முதலியவைகளைத் தரும். வியாஜ்ஜியங்களில் வெற்றி, வியாதிகள் நீங்கும். அதிர்ஷ்டம் உண்டாகும். இதை வாங்கி வைத்துக் கொள்ளுங்கள். விலை ரூ. 2.

BENGAL MESMERISM HOUSE,
(S. M.) Panchpota, BENGA!

'EVEREST' COPYING & LEAD PENCILS &
'EVEREST' Carbon Papers are the best in the Market. Try once.
Sole Distributors in INDIA.
P. R. NATHAM & Co., High Class Stationers.
Phone 2305 China Bazaar Road, MADRAS.

Dentidin

உங்கள் வலியைப் பிறர் வாங்கிக்கொள்ள முடியுமா?

மற்றவர்கள் சந்தோஷத்தில் நீங்கள் பங்கெடுத்துக் கொள்ளுகிறீர்கள. ஆனுல் உங்கள் கஷ்டம், உங்கள் வலி இவைகளை நீங்களே தான் அனுபவித்தாகவேண்டியிருக்கிறது. அதிலும பல்வலியானுல் சொல்ல முடியாத துன்பம்தான்.

பல்வலியை உடனே நிவர்த்திக்க வேண்டும்; பல்வலி எற்படாமல் தடுக்கப்படவும் வேண்டும். இது மிகவும் அவசியம்.

"டெண்டிடின்" ஒன்றுதான் வலியை நிச்சயமாக அகற்றக் கூடியது. ஒரு தடவை உபயோகித்தால் போதும். இது பயரியாவையும், ஈறுகளில் உண்டாகும் ரணம் முதலியவற்றையும் தடுக்கிறது.

இன்றே ஒன்று வாங்கி உபயோகித்துப் பாருங்கள்.

விலை ஒரு ரூபாய். தபாற் செலவு வேறு.

மொத்த டிஸ்டிரிபியூட்டர்கள்:—

லச்சி & கம்பெனி, ராயப்பேட்டை ஹைரோடு, மயிலாப்பூர்.

ஆர். கே. ஓ. ரேடியோ கம்பெனியாரின் நடிகர்

ராபர்ட் டோனட்

ஸ்பெயினில் கலகக்காரர்கள் முன்னேற்றம்

மாட்ரிட்டில் கலகக்காரர் துருப்புகள் ஏராளமாக வந்துகொண்டிருக்கின்றன. துருப்புகள் இரண்டு ரயில்களிலிருந்து இறங்கிச் செல்லும் காட்சி.

ஸ்பெயின் கலகக்காரர்களுக்கு அந்நிய நாடுகள் ஆயுத உதவி யளிப்பதாகக் கூறப்படுகிறது. படத்தில் கலகக்காரர்களைச் சேர்ந்த ஒரு போர்த் தலைவன் பிரெஞ்சு யுத்த பீரங்கி ஒன்றை உபயோகிக்கு முன் பரிசீலனை செய்துகொண்டிருக்கும் காட்சி.

பாலஸ்தீன விடுதலை சைந்யத்தின் தலைவரான பாஜிபே எல்-காக்ஜி மறுபடியும் திரும்பப் போகிறாராம். மேற்படி தலைவரையும் அவரது சகாக்களையும் படத்தில் காணலாம். (இடதுபக்கம்) இத்தாலிய குடியானவர்களுக்குச் சமீபத்தில் ஒரு பரிசளிப்பு விழா நடைபெற்றது. அப்பொழுது அடிஸ் அபாபா பாதிரி முஸோலினியையும் இத்தாலிய நாகரீகத்தையும் பாராட்டிப் பேசினர்.

ரியோடி ஜனிரோவிற்கு அமரிக்கக் குடியரசுத் தலைவர் ரூஸ்வெல்ட் விஜயம் செய்த போது பொது ஜனங்களின் வரவேற்பை யேற்று வந்தனம் செய்கிறார்.

(வலது பக்கம்) மாஜி மன்னர் எட்வர்டும் மிஸஸ் ஸிம்ஸனும். எட்வர்ட் சில மாதங்களுக்குமுன் உல்லாசப் பிரயாணம் செய்தபோது எடுத்த படங்களில் ஒன்று.

சர்வதேச கத்தோலிக்க ஸ்திரீகள் சங்கத்தின் தலைவியான பெல்ஜியத்தைச் சேர்ந்த கிறிஸ்டின் டி. ஹெம்டின் சமீபத்தில் சென்னைக்கு விஜயம் செய்திருந்தார். சென்னை ஆர்ச் பிஷப் தலைமையில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் அவர் பேசியபோது எடுத்த படம்.

பெயிஸ்பூரில் நடைபெற்ற அகில இந்திய காதி பொருட் காட்சியில் மகாத்மா காந்தி வெண்ணெயைக் கடைந்தெடுக்கும் இயந்திரமொன்றைப் பார்வையிட்டபோது எடுத்தபடம்.

மற்ற பக்கங்களில்

செப்பிடுவித்தை	2
ராதா (தொடர்கதை)	4
விநோதக்கொத்து	7
சங்கீதப்பகுதி	8
நாட்டு நடப்பு-சித்திரக் கண்ணாடி	10
மதுபானத்தாலாகும் மனோவிகாரங்கள்	11
கடிதத்தின் ரகஸியம்	13
நவநாகரீகம்	15
பெய்ஸ்பூர் காங்கிரஸ் படங்கள்	16
தென்னிந்தியப் பிரமுகர்கள்	25
கண்ணோட்டம்-பிரமுகர்கள்	28
அதிசயம் ஆனால் உண்மை	30
பிரபஞ்சவர்த்தமானம்	31
தங்கம் நிறைந்த பைகள் (சிறுவர் பகுதி)	33
பன்னு	39

இந்திய வர்த்தமானம்

பெயிஸ்பூர் காங்கிரஸ்

காங்கிரஸுக்குப்பின் பலம் கிராமங்களே என்பது காங்கிரஸ் தலைவர்கள் உணர 50 வருஷங்களாயின; சமீப காலமாக சாமான்ய ஜனங்கள் தொடர்பு அதிகம் ஏற்படும்படி செய்ய வேண்டுமென்பது தலைவர்களின் கருத்தாக இருக்கிறது; இந்த வருஷத்திய காங்கிரஸை ஒரு சிறு கிராமத்தில் கூட்டியதும் இதன் அறிகுறியேயாகும்.

பெயிஸ்பூர் காங்கிரஸ் பல வழிகளிலும் சரித்திரத்தில் இடம்பெறக் கூடியது; முதன் முதலாக கிராமத்தில் கூடிய காங்கிரஸ் இது. மூந்தின காங்கிரஸ் தலைவரே இந்தக் காங்கிரஸிலும் தலைமை வகித்தார்; காங்கிரஸ் நடவடிக்கைகளை ஜரூராக நடத்தி முடிக்கக் கூடுமென்பதற்கும் இவ்வருஷத்திய காங்கிரஸ் ருஜுவாகும்.

லட்சக்கணக்கான கிராமவாசிகள் காங்கிரஸ் நடவடிக்கைகளில் அக்கறை காட்டினார்கள். அவர்களுடைய பேருதவியின்றேல், காங்கிரஸை இவ்வளவு சிறப்பாக நடத்தியிருக்க முடியாது; பல வழிகளிலும் ஏற்பட்ட கஷ்டங்களையும் நிர்ப்பந்தங்களையும் சமாளித்துக்கொண்டிருக்க முடியாது.

உபசரணை சபைத் தலைவர் ரத்தத்தில் மகாராஷ்டிரரத்தம் ஓடுகிறது; மகாராஷ்டிரத்தின் பூர்வ பெருமையை அவர் எடுத்துரைத்தார்; சிவாஜியையும் திலகரையும் கோகலேயையும் அது ஈன்ற நாடென்பதை பிரதிநிதிகளுக்கு ஞாபகப் படுத்தினார்; தேச விடுதலைக்கான எவ்வித முயற்சியிலும் மகாராஷ்டிரம் முன்னணியில் இருக்குமென்று திட்டமாக நம்பியிருக்கலாமென்று அவர் உறுதிமொழி கூறினார்.

காங்கிரஸ் தலைவர் உலகின் இப்போதைய நிலையையே படம்பிடித்துக் காட்டினார்; உலக நிலைமைக்குத் தகுந்த வழியில் நடந்து கொள்ள வேண்டிய அவசியத்தை வற்புறுத்தினார்; உலகிலிருந்து ஏகாதிபத்தியப் பித்தை ஒழிக்க சொத்து சுதந்திரங்களை இழந்தோர் அனைவரும் ஒன்று சேர்ந்துகொள்ள வேண்டுமென்று அவர் வேண்டிக் கொண்டார்.

இந்தியாவைப் பிடித்துள்ள பெரு நோய்க்கு அபேதவாதமே மருந்தென்பது அவர் திட்டமான அபிப்பிராயம். ஆனால் ஜனநாயக ஆட்சி முறையை ஏற்படுத்த வேண்டியதே முதன்மையாகச் செய்யவேண்டிய வேலை யென்பதை அவர் சுட்டிக் காட்டினார். புதிய அரசியலைத் தகர்ப்பதே சட்ட சபைப் பிரவேசத்தின் முக்கிய கருத்தென்பதை அவர் விளக்கிக் காட்டினார். பதவி ஏற்கக் கூடாதென்ற அபிப்பிராயத்தை மறுபடியும் எடுத்துச் சொல்லவும் அவர் மறந்துவிடவில்லை. விவசாயிகள், தொழிலாளர்கள் இவர்களைக் கைதூக்கி விடுவதற்காகப்பாடுபட வேண்டியதன் முக்கியத்தையும் அவர் விளக்கிக் கூறினார்.

இந்தக் காங்கிரஸில் பல முக்கியமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. வேலை நிறுத்தம் செய்துள்ள வங்காள-நாகபுரி ரெயில்வேத் தொழிலாளரிடம் அநுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது. சாமான்ய ஜனங்களுடைய தொடர்பை ஏற்படுத்திக்கொள்ள வேண்டிய அவசியம் வற்புறுத்தப்பட்டது. மன்னர் மகுடாபிஷேகத்தில் கலந்துகொள்ளக்கூடாதென்று முடிவு செய்யப்பட்டது. புதிய அரசியலை எதிர்ப்பதற்கு அறிகுறியாக அது அமுலுக்கு வரும் ஏப்ரல் முதல் தேதியன்று ஹர்த்தால் செய்ய வேண்டுமென்று தீர்மானிக்கப் பட்டது.

புதிய சீர்திருத்தத்தைத் தகர்க்க வேண்டுமென்றும், அரசியலை வகுக்க ஜனப்பிரதிநிதி சபையைக் கூட்ட வேண்டுமென்றும் குறிப்பிடும் தீர்மானத்தின் மேல ரஸமான விவாதம் நடந்தது. பாபு ராஜேந்திரர் இத் தீர்மானத்தைப் பிரேரித்து வெகு அழகாகப் பேசினார். பண்டித மதன் மோஹன மாளவியா இத்தீர்மானத்தை ஆமோதித்தார்.

"நான் ஐம்பது வருஷ காலமாக தேசத்திற்குச் சேவை செய்திருக்கிறேன்; இத் தேசத்தினிடமிருந்தும், உலகினிடமிருந்தும் நான் விடைபெற்றுக்கொண்டு செல்லவேண்டிய காலம் நெருங்கிவிட்டது; என்னுடைய தேசம் அடிமைப்பற்றிலிருந்து விடுதலை பெறுமலிருக்கையிலேயே என்னுடைய காலம் முடிந்து விடுமபோலிருப்பதை நினைத்துக் கொள்ளும்போது ஏற்படும் துக்கத்தை என்னால் சகித்துக்கொள்ள முடியவில்லை; நமது நாட்டில் சந்திர சூரியன் உதயமாகும் காலம் நெருங்கும்படி செய்வதன் மூலம், என் போன்ற விருத்தர்கள் துன்பத்திற்கும் அவமானத்திற்கும் ஆளாகாமலிருக்கும்படி செய்ய வேண்டுமென நான் கேட்டுக் கொள்ளுகிறேன். பழையசகாமுறையின் சுதந்திர உணர்ச்சியுடன் வீறு கொண்டெழுந்து வேலை செய்யும்படி உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்" என்று பண்டித மாளவியா கூறியபோது சபையோர் கண்ணீர் வடித்தனர்.

காங்கிரஸ் வாதிகள் உத்தியோகமேற்கக் கூடாதென்று ஸர்தார் ஸார்துல் சிங் கவீஷியர் அபேதவாதிகள் சார்பாக ஒரு திருத்தத்தைப்பிரேரித்தார். ஸ்ரீமான் சத்தியமூர்த்தி இதை எதிர்த்தார். திருத்தம் தோற்றுப்போயிற்று. சாதகமாக 262 பேர்களும் விரோதமாக 451 பேர்களும் ஓட்டு செய்தனர். அசல் தீர்மானம் நிறைவேறியது.

அடுத்த காங்கிரஸை எந்த மாதத்தில் கூட்டுவதென்பதை முடிவு செய்ய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்கு அதிகாரம், கொடுக்கவும் பிரஜா உரி

ஜில் இவர் மாணுக்கராகச் சேர்ந்துகொண்டு "பி. ஏ." பட்டத்தை ஸ்வீகரித்துக் கொண்டார். உடனே பிரஸிடென்சிகாலேஜிலேயே மாணுக்கராக விருந்து இவர் சட்ட சாஸ்திரப் படிப்பையும் மேற்கொண்டார். அக்காலத்தில் சட்டசாஸ்திர காலேஜ் தனியாக இக்காலம்போல் கிடையாது. சென்னை பிரஸிடென்சி காலேஜிலேயே சட்டசாஸ்திரம் சில குறிப்பிட்ட மணிகளுக்குள் போதிக்கப்பட்டு வந்தது. சாதாரணமாக சாயங்கால வேளையில் சட்டசாஸ்திர உபந்நியாஸங்கள் நிகழ்த்தப்படுவது வழக்கம். அக்காலத்தில் மிஸ்டர் (பின்பு ஜஸ்டிஸ் ஸர்) ஹோரேஷியோ ஷெப்பர்டு என்பார் ஸீனியர் புரொபஸராகவும், ஸ்ரீமான் (பின்பு ஸர்) வி. பாஷ்யமய்யங்கார் ஜூனியர் புரொபஸராகவும் இருந்து சட்டசாஸ்திரத்தை மாணுக்கர்களுக்குப் போதித்து வந்தனர். லாகாலேஜ் பிரஸிடென்சி காலேஜின் ஒரு பகுதியாக விருந்து வந்தது. 1891-ம் வருஷத்தில்தான் லாகாலேஜ் தனியாக ஆரம்பிக்கப்பட்டது.) சுமார் 1882-ல் "பி. ஏ" பட்டத்தைப் பெற்றுக் கொண்ட பின்பு இவர் மூன்று வருஷ காலம் படித்து 1884-ல் "பி. எல்" பட்டத்தையும் சிறப்புடன் பெற்றுக்கொண்டார். மறு வருஷம் (1885-ல்) இவர் நியாயவாதியாகத் தொழில் நடத்த பதிவு செய்யப்பட்டார். இவர் ஸர் ஹோரேஷியோ ஷெப்பர்டு என்ற ஆங்கில கனவானின்கீழ் அப்ரண்டிஸாக விருந்து தமது தொழில் விசேஷப் பயிற்சியைப் பெற்றுக் கொண்டார். அப்போது ஸர் ஷெப்பர்டு சென்னையில் அட்வகேட் ஜனரலாக விருந்தார். வக்கீலாகத் தொழில் நடத்துவதற்கு அங்கீகரிக்கப்பட்ட பின்பும் பல வருஷங்கள் இவர் ஸர் ஷெப்பர்டு கீழ் இருந்து வந்து, அவருடன் அநேகம் முக்கிய வாதங்களில் ஜூனியராக ஆஜராகி வந்தார். சில வருஷங்களுக்குப் பின்பு ஸர் ஷெப்பர்டு ஹைகோர்ட்டு ஜட்ஜியாகநியமிக்கப்பட்டார். ஆகையினுல் இவர் தனிமையாகத் தொழில் நடத்த வேண்டியது அவசியமாகியது. ஸர் ஷெப்பர்டு கீழ் இருந்து வந்ததனுல் இவருக்கு விசேஷ லாபங்களும் அனுகூலங்களும் கிடைத்தன. அவருக்கும் இவரிடம் விசேஷ அபிமானமும் ப்ரீதியும் இருந்து வந்தன.

இவர் வக்கீலாகப் பதிவு செய்யப்பட்ட காலத்திலேயே இன்னும் பல பிரமுகர்களும் பதிவு செய்யப்பட்டனர். அவர்களில் முக்கியமானவர்களை இங்கு குறிப்பிக்க வேண்டுவதவசியமாகும். ஸர் பி. எஸ். சிவஸ்வாமி அய்யர், கே. ஸி. எஸ். ஐ, காலஞ்சென்ற வி. கிருஷ்ணஸ்வாமி அய்யர், ஸி. எஸ். ஐ, எஸ். கஸ்தூரிரங்க அய்யங்கார், ராவ்பஹுதூர் எம் ஆர். ராமகிருஷ்ணய்யர், ஸர். பி. ராஜகோபாலாச்சாரியார், கே. ஸி. எஸ். ஐ, திவான்பஹுதூர் டி. ஆர் ராமச்சந்திரய்யர், டி. வி. வெங்கடராமய்யர் முதலியவர்கள் இவருடன் படித்து அவருடன் தேறி இவருடன் வக்கீலாகப் பதிவு செய்யப்பட்டவர்கள். ஆகையினுல் வக்கீல் தொழிலை ஆரம்பித்த காலத்திலிருந்தே இவர் பிற்காலத்தில் சட்ட சாஸ்திர சமர்த்தர்கள் எனப் புகழ்பெற்றவர்களுடன் பழக வேண்டியது அவசியமாகியது. மேலே குறிப்பிக்கப்பட்ட பெரியார்களுடன் இவரும் அக்காலத்திலேயே பிரசித்தபுருஷராக விளங்கலாஞர். தொழிலில் இவர் மேன்மையடைவதற்கு ஸர் ஷெப்பர்டு துரையுடன் இருந்து வந்த சமபந்தம் மிக உதவியதாயினும், இவருடைய புத்தி கூர்மையும் விசால அறிவும் இவருக்கு இன்னும் அதிகமாக உதவி புரிந்தன. வெகு சீக்கிரத்திலேயே இவர் தொழிலில் மேன்மையை யடைந்துவிட்டார். சட்ட சாஸ்திரத்தில் இவருக்கு நல்ல ஞானம் இருந்தது; தவிர உயர் குணங்களும் இவரிடம் அமைந்திருந்தன. வக்கீல் தொழிலில் இவர் விசேஷ சிரத்தைக் காட்டி வந்தார்; இவர் ஊக்கத்துடன் உழைத்து வந்தார்.

மைலாப்பூர் பிரிவும் எழும்பூர் பிரிவும்

அக்காலத்தில் சென்னை நியாயவாதிகளுக்குள் இரு பிரிவுகள் இருந்து வந்தன. ஒன்று மைலாப்பூர் பிரிவு, மற்றொன்று எழும்பூர் பிரிவு. எழும்பூர் பக்கங்களில் வசித்து வந்த வக்கீல்கள் ஒரு புறமும், மைலாப்பூர் பக்கங்களில் வசித்து வந்தவர்கள் மற்றொருபுறமுமாகஇருந்து வந்தனர். எழும்பூர் வக்கீல்களின் சிரோபூஷணமாக அக்காலத்தில் விளங்கியவர் ஸர் ஸி. சங்ரன் நாயர். மைலாப்பூரில் ஸர் வி. பாஷ்யமய்யங்காரும், ஸர் எஸ். சுப்பிரமணிய அய்யரும் பிரதான புருஷர்களாக விருந்து வந்தனர். இவ்விரு கோஷ்டியாருக்குள்ளும் சதா போட்டி இருந்து வந்தது. ஸ்ரீமான் கே. நாராயண ராவ் எழும்பூரில் வசித்து வந்தபடியால் அவர் ஸர் சங்கரன நாயரின் கோஷ்டியைச சார்ந்தவராக விருந்து வந்தார். இவ்விஷயம் எதற்காக எழுதப்பட்டதெனில் இவர் காலத்தில் வக்கீல் தொழில் விஷயமாக இந்நகரில் இருந்து வந்த போட்டியைக் குறிபபிடுவதற்காகவேதான்!

தேசீய ஆர்வம்

இவருக்கு மஹாஜனசபை ஸ்தாபிக்கப்பட்ட காலத்திலிருந்தே தேசீய ஆர்வம் ஏற்பட்டது. அச்சபையின் அங்கத்தினர்களுள் ஒருவராக இவர் சேர்ந்துகொண்டார். பின்பு சில வருஷங்கள் இவர் இம் மஹாஜனசபையின் தலைவராகவும் இருந்தார். அநேகம் பொது விவகாரங்களில் இவர் ஈடுபட்டார். பல காங்கிரஸ் மஹாசபைக் கூட்டங்களுக்கும் இவர் சென்று வந்தார். 1905-ல் காசி க்ஷேத்திரத்தில் கூடிய காங்கிரஸ் மஹா சபையில் இவர் இங்கிலாந்தில் கனம் கோபால கிருஷ்ண கோகலேயும் லாலா லஜபதிராயும் செய்த சேவையைப் பாராட்டிப் பேசினு.

ருஷிய படையெடுப்பு பீதி கவர்னரின் அநீதி

சுமார் 1886-ம் வருஷத்தில் இத்தேசத்தில் ருஷியாவின் படையெடுப்புப் பீதி ஏற்பட்டபோது, இச்சென்னை நகரத்தில் நால்வர் ராவணுவப்படையில் தங்களைச் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று விண்ணப்பஞ் செய்துகொண்டனர். ஸர் சங்கரன் நாயர், சேலம் ராமசுவாமி முதலியார், கே. நாராயணராவ் ஆகியோர்கள் வாலண்டியர் படையில் சேர அனுமதி கேட்டனர். இவர்கள்சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இவர்களை "வாலண்டியர்கள்" மிக்க திருப்தியுடன் வரவேற்றனர். ஆனுல் ஸர்கிராண்ட் டப் அப்போது கவர்னராக விருந்தபடியால் இதை அங்கீகரிக்கவில்லை; ஏற்கெனவே தாம் இழைத்த அநீதிகள் போதாவென்று அவர் இவர்களைப் படையினின்று நீக்கி விடுமாறு உத்திரவிட்டார் இல்லாவிடில் இவர்கள் சிறிதும் தயங்காமல் போர் முனைக்கும் சென்றிருப்பார்கள். இந்த சந்தர்ப்பத்திலிருந்து இவரது தைர்யமும் துணிச்சலும் தெரியவரும். சமயம் வாய்ந்தபோது தேச சேவை புரிய வேண்டும் என இவருக்கிருந்த ஆர்வமும் ஸ்பஷ்டமாகும்.

1891-ல் சென்னை லா காலேஜ் பிரத்தியேகமாக நிறுவப்பட்டது. அப்போது இவர்

தலைவலி, இராத்தூக்கமின்மைக்கு ப்ரிங்கால் உபயோகியுங்கள். ப்ரிங்கால் துல்லிய. மணமானது; மயிர் உதிர்தல், பால்ய நரை இவற்றிற்கும் சிறந்தது

BHRINGOL

ப்ரிங்கால் என்பது ஆயுர்வேத முறைப் படியான மகா ப்ரிங்கராஜ தைலம்;
தயாரிப்பவர்கள் :
கல்கத்தா கெமிகல் கம்பெனி,
லிமிடெட்,,
HO 1


விலை குறைவான போலி நகைகளை வாங்கி ஏமாறாதீர்கள்

நெருப்பிற்கும். திராவகத்திற்கும் உத்திரவாதமான நகை எது ?

அதுதான் தியாகராஜ தங்க நகைகள்

எமது கம்பெனி நகைகள் அதிக நாட்கள் உழைக்கக் கூடியவை என்பது யாவருக்கும் தெரிந்த விஷயமே. இப்போது அதிக நாட்கள் கஷ்டப்பட்டு நீண்ட நாட்கள் உழைக்கக் கூடிய விதமான மெட்டல் தயார் செய்து கை தேர்ந்த வேலைக் காரர்களை கொண்டு நகைகளை தயார் செய்திருக்கிறோம். ஒரு தரம் வாங்கி பார்த்தால்தான் எங்கள் உண்மை தெரியவரும் எமது நகைகள் கண்களைக்கவரும் அழகும் வேலைப்பாடும் உள்ளவை. பல பொருட் காக்ஷிகளில் தங்க மெடல்கள் பரிசுபெற்றவை. தங்கத்திற்கு விலையில் குறைந்தாலும் குணத்தில் மேற்பட்டவை. அதிக செலவின்றி எல்லோரும் அழகாய் அணிந்து கொள்ளத் தகுந்த உயர்தர நகைகளும் பலரகமான கல்மாலைகளும் நயமாய் கிடைக்கும்.

கேட்டலாக் இனம்.
கல்மாலை 1 பெட்டை ரூ. 5

ஸ்ரீ தியாகராஜா மெட்டல் ஜிவல்லரி ஒர்க்ஸ்,
77, சைனபஜார் ரோட், மதராஸ்.

அக்கலாசாலையில் ஒருபுரொபஸராக நியமிக்கப்பட்டார். இக்கலாசாலையில் இவ்வாறு ஆசிரியராக இவர் சுமார் 12 வருஷகாலம் 1930-ம் வருஷ பரியந்தம் இருந்து வந்தார். இவர் கலாசாலையின் "ஹிந்துலா" போதித்து வந்தார். இவருடன் கலாசாலையில் ஸர் வி. பி. தேசிகாச்சாரியார் வி. கிருஷ்ணஸ்வாமி அய்யர், ராவ் பஹதூர் ராமகிருஷ்ணய்யர், திவான் பஹதூர் ஸி. ராமச்சந்திர ராவ் ஸாஹேப், ஸர். பி. எஸ். சிவஸ்வாமி அய்யர் முதலிய பலபிரமுகர்கள் ஆசிரியர்களாகவிருந்து வந்தனர். 1902-ல் கலாசாலை பிரின்ஸிபால் மிஸ்டர் நெல்ஸன் ரஜாவில் சொற்பகாலம் சென்றபோது இவரே அவருக்குப் பதிலாக அந்த ஸ்தானத்திற்குத் தாற்காலிகமாக நியமிக்கப்பட்டார். அப்போது "ஹிந்து" பத்திரிகையில் பின்வருமாறு எழுதப்பட்டது.

சட்ட கலாசாலையில் முதல் இந்திய பிரின்ஸிபால்

"மிஸ்டர் நாராயணராவிற்கு அளிக்கப்பட்டுள்ள பிரின்ஸிபல் பதவி தாற்காலிகமானபோதிலும், நாம் பெருமைபடக் கூடியதாகும். எமக்குத் தெரிந்தவரையில், கவர்ன்மெண்டாரால் தொழில் சம்பந்தமாக நிறுவப்பட்டுள்ள கலாசாலைகள் ஒன்றின் பிரின்ஸிபாலாக நியமிக்கப்பட்ட முதலாவது இந்தியர் இவர் தான். கலாசாலையில் இவரது உழைப்பு நீடித்ததாக விருப்பதுடன் அதி உபயோகமானதாகும்; இப்பெருமைக்கு இவர் எவ்விதத்திலும் உரியவர்." கலாசாலையிலும் இவரது மாணவர்களுக்கு இவரிடம் விசேஷ ப்ரீதி இருந்துவந்தது. இதை நிரூபிக்க அவர்கள் 1902-ம் வருஷம் டிசம்பர் மாதத்தில் கலாசாலையில் இவரது உருவப் படத்தைப் பிரதிஷ்டை செய்து வைத்தனர். இதற்கு முன்பு கலாசாயின் ஆசிரியர் ஒருவருக்கும் இத்தகைய மரியாதை கிடைத்ததில்லை. மிஸ்டர் மெயினுக்குக்கூட இது கிடைக்கவில்லை. இவ்வளவு பஹுமானிக்கப்பட்ட இவருக்கு வைஸ் பிரின்ஸிபல் பதவியையாவது அரசாங்கத்தார் அளிக்கலாம் என எதிர்பார்க்கப்பட்டது வீணாகியது; இது இவருக்கு இழைக்கப்பட்ட அநீதிகளில் ஒன்றாகும். இவரது உருவப்பட்டத்தை லாகாலேஜில் சீப் ஜஸ்டிஸ் ஸர் ஆர்னால்டு ஒயிட் திறந்து வைத்து, இவரது குணாதிசயங்களை சிலாகித்துப் பேசினார். சீப் ஜஸ்டிஸ் தமது பிரசங்கத்தில் பேசியதாவது:—"நான் இத்தேசத்திற்கு வந்தது முதல் எனக்கு அவரைத் தெரியும். நான் தொழில் நடத்தும்போது அவர் பல துறைகளிலும் உழைத்து வந்ததை அறிவேன். வக்கீல் [illegible] அவரை எனக்குத் தெரியும். நான் ஹைகோர்ட்டு ஜட்ஜியான பின்பு அவரை ஒரு நியாயவாதியாக அறிவேன். இக் கட்டிடத்தில் இருந்து அவரது பிரசங்கங்களைக் கேட்க உங்களுக்கிருக்கும் பாக்கியம் எனக்குக் கிடையாது. ஆனால் அடிக்கடி ஹைகோர்ட்டில் அட்வொகேட்டாக அவர் செய்யும் பிரசங்கங்களைக் கேட்டிருக்கிறேன். ஆனால் இவ்விரண்டு பிரசங்கங்களுக்குள் வித்யாசம் இருக்கின்றது. மாணவர்களுக்கு ஆசிரியராக அவர் சட்டத்தை எடுத்துச் சொல்லுகையில் அது சரியாகவும் ஏற்றதாகவும் இருக்கிறது. அட்வொகேட்டாக இவர் சட்டத்தை எடுத்துச் சொல்லுகையில் அது சில சமயங்களில் சரியாகவும் சில சமயங்களில் அல்லாமலும் இருக்கின்றது. இதற்கு அவரிடம் குறை காணுவது தகாது; ஏனெனில் அவர் தமது கக்ஷிக்காரர்களுக்காக சட்டம் பேசவேண்டியிருக்கிறது. சரியோ பிசகோ வழக்குக்கு உகந்த மாதிரி அவர் பேசவேண்டியது அவசியமாகிறது." மேற்கூறப்பட்ட வார்த்தைகள் சீப் ஜஸ்டிஸ் இவரிடம் கொண்ட மதிப்பை நன்கு காட்டுகின்றது.

இவர் சிலகாலம் சென்னை முனிசிபல் சபை அங்கத்தினராகவும் இருந்துவந்தார். சமூகச் சீர்திருத்த விஷயமாகவும் இவருக்கு விசேஷ சிரத்தை உண்டு. சென்னை சர்வகலாசாலை செனெட் சபை மெம்பராவும் இவர் 1901 முதல் 1916 வரையில் இருந்து, கல்வி விஷயமாகப் பெரிதும் ஊக்கமுடன் வாழ்ந்து வந்தார்.

கவர்ன்மெண்ட் இழைத்த அநீதி

1906-ல் இவர் கவர்ன்மெண்டு ப்ளீடராகவும் பப்ளிக் பிராஸிகியூட்டராகவும் தாற்காலிகமாக நியமிக்கப்பட்டார். ஆனால் 1908-ல் இந்த ஸ்தானம் மீண்டும் காலியான போது இவரை அதற்கு நியமிக்கவில்லை. ஆனால் ஒரு ஐரோப்பிய பாரிஸ்டரை காயமாக நியமிக்கப்பட்டார். இது இவருக்கு மிகுந்த துக்கத்தை விளைவித்தது. இதனால் தமக்குப் பெரிய அவமானம் இழைக்கப்பட்டது என இவர் கருதினார். இவர் இப்பதவிகளை இருமுறை தாற்காலிகமாக வஹித்தார். இந்த அநீதியைப்பற்றி சென்னை மஹாஜன சபையார் இந்தியா மந்திரி மார்லி பிரபுவிற்கு ஒரு தந்தி கொடுத்தனர்.

1910-ல் கவர்ன்மெண்டார் இவருக்கு "திவான் பஹதூர்" பட்டத்தை அளித்தனர். சுமார் 1914-ல் திவான்பஹதூர் நாராயண ராவ் வக்கீல் தொழிலினின்று விலகிக்கொண்டு தமதூருக்கு தேக அசௌக்கியம் காரணமாகச் சென்றுவிட்டார். 1916-ம் வருஷம் நவம்பர் மாதம் 30-ந் தேதியன்று திவான்பஹதூர் நாராயணராவ் மங்களூரில் திடீரென்று மாரடைப்பினால் தமது 54-வது வயதில் காலமானார். தென்கன்னடத்தில் தோன்றி சட்டசாஸ்திரத்துறையில் பிரசித்தராக விளங்கியவரை இத்தேசம் இழந்தது.

நெய், நெய் என்றால் எல்லாம் நெய்யாமோ!

நெடுங்கால அனுபவஸ்தர்கள் நாடுகளில் சென்று நல்ல வெண்ணையை உடனுக்குடன் கிராமங்களில் வாங்கிக் கொணர்ந்து கைதேர்ந்த ஆட்களைக் கொண்டு அனுபவ முறைப்படி உருக்கி எடுத்த

நெய் தான்

நல்ல நெய் எனப்படும் இதுதான்

P. K, V.

இந்த அடையாளமிடப்பட்ட சரக்கு கவர்ண்மென்ட் காரியாலயங்களுக்கும், ஹாஸ்டல்களுக்கும், கோவாப்பரேடிவ் ஸ்டோர்களுக்கும், பிரபல கனவான்கள் வீடுகட்கும் ஒழுங்காய்க் கொடுக்கப்பட்டு வருவதும், எல்லோராலும் புகழப்படுவதுமாகிய

அசல் நெய் இதுதான்

மணம், குணம், சுவை, சுத்தம் எல்லாவற்றிற்கும் உத்திரவாதம்

இந்த இரண்டு டிரேட் மார்க்குகளும் எம்முடையவையே. மூன்று மார்க்குகளில் எது வாங்கினாலும் உங்களுக்கு நயமே.

தயாரிப்பவர்கள்:—

பி. கே. வரதாச்சாரி

அண்டு கம்பெனி

வெண்ணெய், நெய் வியாபாரம்

ஜம்மலமடுகு, கடப்பை ஜில்லா.

தலைமை ஆபீஸ்:—

18, பைகிராப்ட்ஸ்ரோட் திருவல்லிக்கேணி, சென்னப்பட்டணம்.

கிடைக்குமிடம்:—

ஸ்ரீநிவாஸ் ப்ராவிஷன் ஸ்டோர், திருவல்லிக்கேணி, நுங்கம்பாக்கம், தியாகராயநகர், மதராஸ்.

கண்டேட்டம் பிரமுகர்கள்

வேலூரில் அஸிஸ்டெண்ட் எஞ்சினியராகவுள்ள ஸ்ரீமான் ராகவாச்சாரியின் குமாரி ஸ்ரீமதி லக்ஷ்மி சமீபத்தில் ஜெய லக்ஷ்மி தியேட்டரில் நாட்டியமாடிக் காட்டினுள். அப்பொழுது அவளுக்கு ஒரு பதக்கமும் அளிக்கப்பட்டது. வலது பக்கத்தில் அவள் ஹிந்துஸ்தானி நாட்டியமொன்றை ஆடிக் காட்டியபோது எடுத்த படம்.



கெய்ரோவில் பிரிட்டிஷ் ஸ்தானீகராக நியமிக்கப்பட்டிருக்கும் ஸர் மைல்ஸ் லாம்ப்ஸன்

அழகு செய்துகொள்வதில் மேனுட்டார் முறையைக் கற்றுக்கொள்ள பாரிஸ் செல்லும் ஸ்ரீமதி (மிஸஸ்) சுஷிலா பாய் காளே.

நோயற்றவாழ்வு

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

வெறி கொண்டவர்களையும் பிடித்து அடைத்து வைத்து, ஏற்ற உபசாரங்கள் செய்வது உசிதமென்று அக் கமிஷனர்கள் முடிவாக அபிப்பிராயப்பட்டார்கள். அவர்களை வேறு வகையான தண்டனைக்கு உட்படுத்துவது சரியல்லவென்றும் கூறி அதற்கு இவ்வாறு காரணமும் காட்டியிருக்கிறார்கள். "கடுங்குடியானது உடலையும் உள்ளத்தையும் ஒடுக்கித் தற்கொலை புரியும் தகாத காரியமாகவே கருதக்கூடியது. ஆனால் அதிவிரைவில் உயிரைப் போக்கிக் கொள்ளுவதற்கு உபாயமாயேற்படும் முயற்சியே தற்கொலை வேலையாமென்றும், அம்முயற்சிக்காக யத்தனித்தவனே சிறைவாஸம் முதலிய தண்டனைக்குப் பாத்திரமாவான் என்றும் சட்டமும் மனஸ்ஸாக்ஷியும் கூறுகின்றன. ஒருவன் தன் தேஹத்தில் ஸ்பிரிட் வஸ்து முதலியதாலான விஷத்தைச் சிறுகச் சிறுக ஊட்டி, அப்பால் காலக்கிரமத்தில் தாது க்ஷீணத்தையும் அதனால் ஆயுளுக்கு அழிவையும் விளைவித்துக் கொள்ளலாம். அவன் தன்னையும் தன் குடும்பத்தையும் கெடுத்துப் பாழாக்கிக் கொள்ளலாம். அதனால் அவன் ஒழுக்கந்தவறியவனாகவும், முறை தவறிய நடத்தையுள்ளவனாகவுமே கருதப்படுகிறான்; ஜனஸமூஹத்தில் உயர் நிலைமையடையாது கீழ் நிலைமைக்குப் போகும் அவனது நடத்தைக்காகப் பலமான சிக்ஷைகளை அவனுக்கு ஏற்படுத்துவது நீதியாகாது. பொதுஜனங்களின் நல்வாழ்க்கைக்கு இத்தகையவர் இடையூறு விளைவிப்பதாகத் தெரிவதால், இவர்களைத் தாத்காலிகமாக உன்மத்த சாலைகளில் அழைத்துப்போய் வைத்து ஒரு சிறிது சரிப்படுத்தவோ, கடுங்குடியைத் தடுக்கக் கருதி சொற்ப தண்டனைகளை வேறு வகையில் விதித்து அவர்களை வழிக்குக் கொண்டுவரவோ பார்லிமெண்டார் சட்டதிட்டங்களை அமைக்கலாம்." இவ்விதமான ரிபோர்டிலிருந்து நாம் தெரிந்துகொள்வது யாதெனில், அளவு மீறிய குடிப்பழக்கத்தில் ஆழ்ந்தவர் அப்பால் மதுபானமின்றி அவ்வாறுத ஆத்திரத்தை அடக்க முடியாதென்றும் நாள்தோறும் நாழிகைதோறும் அதை அருந்தியே ஆவலைத் தணித்து ஆயுளையும் அழித்துக் கொள்ள வேண்டி நேரிடுகிறதென்றும், கண்டிப்பான சட்டதிட்டங்களை அதிகாரிகள் இயற்றி வைக்க முடியாமலிருப்பதால் அக்குடிகாரர்கள் ஜன ஸமூகத்திடையே வேறு பலருடைய ஒழுக்க வழக்கங்களுக்கும் சீர்கேடு விளைவிப்பவராகின்றனரென்றும் நமக்கு விளங்குகிறதென்பதே. "மட்டில்லாத மதுபானத்தினால் ஆரோக்கியத்திற் சீரழிந்த அநேகர் தம்மை ஓர் இடத்தில் பத்திரமாக இருக்கச் செய்யவும், பாதுக்கவும் விரும்பி என்னிடம் வந்ததுண்டு; எவ்விதமான சிகித்ஸை செய்து கொள்ளவும் தயாராயிருந்தார்கள்; தம்மை ஓர் இடத்தில் தகுந்த பாதுகாப்புடன் வைத்துப் பரிபாலிக்காவிட்டால் வேறு எந்த முறையும் மதுபான ஆவலிலிருந்து தம்மைக் காக்கப் பயன்படாவென்றும் பலர் என்னிடம் தாமே வந்து கூறியிருக்கிறார்கள்; ஏனெனில் அவர்கள் அறவே தன் வயமிழந்துவிட்டவர்; அவர்கள் நடத்தையில் அவர் தமக்குத்தாமே நம்பிக்கை யிழந்தவர்; மதுபானக்கேடு அத்தகையது" என்று டாக்டர் புட் என்பவர் "ஹெல்த் கல்சர்" என்கிற பத்திரிகையில் எழுதுகிறார்.

எவ்வித மது ஆரோக்கியத்துக்கு ஏற்றது?

ஆயுர்வேத நூல்களிற் கூறியுள்ளபடி அமிதமான மதுபானம் உள்ளக் கிளர்ச்சிக்கும் உன்மாதத்திற்கும் காரணமாகும். ஆங்கில வைத்தியாசிரியர்களின் ஆராய்ச்சி முறைகளும் அவ்விதந்தான் அபிப்பிராயப்படுவதாக எடுத்துக் காட்டியிருக்கிறேன் ஆனால் 'முதல் மதம்' என்கிற வெகு மிதமான (காரமில்லாத) மதுபானத்தினால் ஏற்படும் குணத்தை ஆயுர்வேத வைத்தியமும், ஆங்கில வைத்தியமுங்கூட ஆக்ஷேபித்துக் கூறுவதில்லை. வியாதிகளால் வருந்தி மிக்க பலஹீனப்பட்ட சில நோயாளிகளும், மிகக் கடுமையான உடலுழைப்பாலும் உள்ளச் சோர்வாலும் களைத்திருக்கும் சிலரும் உடலுக்கு உரமுண்டாக்கிக்கொள்ளவும், உள்ளத்தை உத்ஸாஹப்படுத்தவும், வெறியுண்டாக்கும் வீர்யத்தைப் பெறாத அரிஷ்டங்கள் என்றும் ஆஸவங்கள் என்றும் வழங்கப்படும் சில மிருது வீர்யமுள்ள மதுவினங்கள் மருந்துகளாக உட்கொள்ள ஏற்றவைகளென்று சாஸ்திரங் கூறுவதற்கேற்ப அனுபவமும் அறிவிக்கின்றது. அளவு மீறி மதுபானம் செய்து மனக்கோளாறடைந்த மனிதரும் அவ்வித ஆஸாவாரிஷ்டங்களை (தீக்ஷ்ண வீர்யமுள்ள மதுவினங்களுக்குப் பதிலாக) அருந்தி வந்து, சிறுகச் சிறுக மதுவெறியிலிருந்து மீட்சி பெறவுங்கூடும். தேஹபோஷணைக்கும் தேஹபலத்துக்கும் ஏற்ற ஆஸவாரிஷ்டங்கள் முக்கியமாய் திராக்ஷாரிஷ்டம், அச்வகந்தாரிஷ்டம், தசமூலாரிஷ்டம், சாரிபாத்யாஸவம் முதலியன சரீரத்திற்கு வன்மையையும், மனதுக்கு உத்ஸாஹத்தையும் ஒருங்கே உண்டு பண்ணுவதற்காகவும், அந்தந்த வியாதிகளை அகற்றுவதற்காகவும் வேறு பல ஔஷதங்களும் ஆஸவமுறையிலும் அரிஷ்டமுறையிலும் பக்குவம் செய்வதற்கு ஆயுர்வேத நூல்களில் நூற்றுக்கணக்கான பிரயோகங்கள் விளக்கப்பட்டிருக்கின்றன. அவையெல்லாம் குடிப்பழக்கத்தைக் கொடுக்கும் கடும் வீர்யமுள்ள மதுவகைகளாகா.

அசல் புளூ ஜாகர்

வைரங்கள்

இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்பட்ட (CULTURE)

நல்முத்துக்கள்

கிடைக்குமிடம்:

சிமன்லால் பிரதாப் சந்த்

175, சைனுபஜார், மதராஸ்.

ரூ. 500 இனும்!

திமிர் குஷ்டமும், வெண்குஷ்டமும்.

உலகக் கியாதி வாய்ந்த எனது மருந்துகளை 15 தினங்களுக்கு உபயோகித்தால் எல்லாவிதமான திமிர் குஷ்டமும், வெண்குஷ்டமும் நிரந்தரமாக நிவர்த்தியாகிவிடும். பற்பல டாக்டர்கள், கவிராஜர்கள், ஹக்கீம்களும் கைவிட்டதானாலும்கூட பரவாயில்லை. எனது அற்புத மருந்துகளை உபயோகியுங்கள். பலனில்லை என நிரூபிப்பவருக்கு ரூ. 500 இனும். 7 நாள் மருந்து ரூ. 2—8; 15 நாள் மருந்து ரூ. 4. தபால் செலவு தனி

SRI SWAMI & Co,
(34) Panchpota, Bengal.

சென்னை ஆயுர்வேத கலாசாலையிற் பயின்று டிப்ளோமா பெற்றவரும், எஸ். கே. பி டி. ஆஸ்பத்திரியின் தலைமை டாக்டராயிருந்தவரும், கவர்ன்மெண்டு இந்திய வைத்தியக் கலாசாலைப் பரீக்ஷகரும், ஸிலோன் வைத்தியக் கல்லூரி பரீக்ஷக போர்டின் பிரஸிடெண்டும், அகில இந்திய ஆயுர்வேத வித்யாபீட பரீக்ஷகரும். அநேக ஆயுர்வேத காவ்ய நாடகாதி கிரந்தங்கள் இயற்றியவருமான,

வைத்திய ரத்னம்

பண்டித **எம். துரைஸ்வாமி ஐயங்கார்**, ஏ. வி. எஸ்

ஆயுர்வேதபூஷணம், ஆயுர்வேதசார்ய அவர்களுடையஔஷதங்கள்

ஆயுஷ்ய ரஸாயனம் எவ்வித பலஹீனத்தையு நீக்கும். தேஹ புஷ்டியையும், மூளைச் செழிப்பையும், இருதய பலத்தையும் தரும். நரம்புத் தளர்ச்சியை நீக்கும். தேனினும் இனிக்கும்.
புட்டி ரூ. **3-4-0.**

அஜீர்ண கேஸரி இரைப்பையில் புளிப்பு, புளித்த ஏப்பம், மார்பு எரிவு, வயிற்றுப்புசம் முதலிய தொந்தரவளிக்கும் கடுமையான அஜீர்ணங்களில் பலன் தரத்தக்கதென்று உபயோகித்துப் பரீக்ஷிக்கப்பட்ட சூர்ணம் டப்பா 1-க்கு ரூ. **2-8-0.**

ஹரீதக்யாதி லேஹ்யம் எவ்வித மலச்சிக்கலுக்கும் திவ்யௌஷதம் ஸிவர்என்கிற கல்லீரலைத்தூண்டி, பித்தத்தை வெளிப்படுத்தி, காமாலை முதலியதையும் தணிக்கும். கர்ப்பிணி முதல் அனைவரும் உபயோகிக்கலாம். 1 பவுண்டு புட்டி ரூ. **3-0-0.**

லோஹாஸவம் இரத்தத்தைத் துரிதமாய் விருத்தி செய்யும் அயத்திராவகம். குழந்தை முதல் அனைவருக்கும் ஏற்றது. இரத்தக் குறைவு, பலஹீனம், தோலைப் பற்றிய வியாதிகள் முதல்யவை தீரும்.
1 பவுண்டு ரூ **3-12-0**

விடங்காரிஷ்டம் கீல் வாயுவுக்கு மிகப் பிரசஸ்தமான திராவகம். நீர்க்கடுப்பு முதலியவற்றையும் நீக்கும். பொதுவாக வாயுரோகங்களில் உபயோகிக்கக்கூடிய சிறந்த மருந்து. 1 பவுண்டு ரூ **5.**

காஸஹர ரஸாயனம் இருமல், மார்ச்சளி, நாட்பட்ட ஜலதோஷம், ச்வாஸ-காஸம், டான்ஸிலடிஸ் என்கிற தொண்டை வீக்கம், கக்குவான் ஆகியவை இதனால் முற்றிலும் குணமடைந்திருக்கின்றன. எவ்வயதினரும் உபயோகிக்கலாம் இனியசுவை.
புட்டி ரூ **2-8-0.**

வேறு ஸகல ஆயுர்வேத ஔஷதங்களும் கிடைக்கும்.

ஆர்யன் பார்மஸி,

"ஆர்ய க்ருஹம்" 11, ஆதியப்ப முதலி தெரு, வேப்பேரி, மதராஸ்.

உலகப் பிரசித்தி பெற்ற

ஆர். முகம் அண்டு கம்பெனியாரின்

நெ. 1. மணிமார்க் பட்டணம் மூக்குத்தூளை

உபயோகியுங்கள்.

TRADE MARK

1. நெ. வீசை 1-க்கு விலை ரூ. 4 0
2. நெ. வீசை 1-க்கு விலை ரூ. 3 8

ஏஜண்டுகள் தேவை:—

விலாசம்: ஆர். முகம அண்டு கம்பெனி,
நெ. 5, ஓல்டு ஜயில் தெருவு, மதராஸ்.

அதிசயம் ஆனால் உண்மை

1 சீனா வெள்ளை எலும்பு ஸ்தூபிகளைக் கட்டுவதற்கு ஒரு கோடி மனிதர்களின் எலும்புகள் தூளாக்கப்பட்டு உபயோகிக்கப்பட்டனவாம் 2. க்ரீட் தீவிலுள்ள காண்டியாவில் ரொட்டிகள் சக்கரமாகத் தயாரிக்கப்படுகின்றன. 3. ரஷ்யாவல் இறுதிச் சடங்குகள் சம்பந்தமாக மூன்று மெழுகு வர்த்திகளை ஒரே தீக்குச்சியினால் கொளுத்தும் வழக்கம் இருந்து வருகிறது. இதன் காரணமாக ஐரோப்பியர்கள் மூன்று சிகரேட்டுகளை ஒரே தீக் குச்சியைக் கொண்டு பற்ற வைப்பதில்லை 4. இங்கிலாந்தில் ஊமைப் (ஸைலண்ட்) படங்களைக் காட்டும் தியேட்டர் ஒன்றுதான் இருக்கிறது. அது மான்செஸ்டரில் இருக்கிறது.



அபிஸீனிய வைஸ்ராய் ஜெனரல் கிரேஸியானி அடிஸ் அபாபாவில் அபிஸீனியச் சிறுவர் படையைப் பார்வையிட்டார். இத்தாலியர் முறையில் இவர்கள் அணிவகுத்துச் செல்வதிலிருந்து இத்தாலியர் அபிஸீனியாவில் பூரண ஆதிக்கம் பெற்றுவிட்டனரென்பது விளங்கும்.

பிரபஞ்ச வர்த்தமானம்

ஸ்பெயின் நிலைமை

ஸ்பெயின் உள்நாட்டுக் கலக நிலைமையில் யாதொரு மாறுதலுமேற்படவில்லை. ஸ்பானியக் கலகத்தில் சேர்ந்து போர் புரியும் பொருட்டு ஏராளமான அந்நியர்கள் அந்நாட்டுக்குச் செல்வது கண்டு பிரிட்டிஷ் சர்க்கார் விசேஷக் கவலை யடைந்திருக்கின்றனர். இது காரணமாக அவர்கள் ஜெர்மனி, இத்தாலி, போர்ச்சுகல், ரஷ்யா இந்நாடுகளைச் சேர்ந்தவர்கள் கலகத்தில் கலந்துகொள்ளும் கருத்துடன் ஸ்பெயினுக்குச் செல்வதைத் தடுக்க அத்தேச சர்க்கார்கள் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமாறு அவைகளுக்குத் தங்கள் ஸ்தானீகர்கள் மூலம் தெரிவித்திருக்கிறார்கள். பிரெஞ்சு சர்க்காரும் இத்தகைய நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கின்றனர்.

மாட்ரிட்டிலுள்ள பிரிட்டிஷ் ஸ்தானீகர் தமது சிப்பந்திகளுடன் வலன்ஷியாவுக்குப் புறப்பட்டுவிட்டார். அவரது காரியாலயத்தில் அடைக்கலம் புகுந்திருந்த அனைவரும் அங்கிருந்து வெளியேறி விடுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றனர். ஸ்பானிய சர்க்கார் சீக்கிரத்தில் மாட்ரிட்டுக்குத் திரும்பக் கூடுமென நம்ப இடமில்லாததே பிரிட்டிஷ் ஸ்தானீகர் காரியாலயம் மாட்ரிட்டிலிருந்து வாலன்ஷியாவிற்கு மற்றப்பட்டதன் காரணம்.

* * * *

உலகின் அலங்கோல நிலை

எதியோபிய சக்ரவர்த்திக்குச் சொந்த நாட்டை இழந்த துக்கத்தைக் காட்டிலும் உலகின் அலங்கோல நிலையே அதிகக் கவலையை விளைவிக்கிறது. அவரைப் பேட்டி கண்டபொழுது அவர் கூறியதாவது:—எங்களுடைய நிலைமை தான் தெரிந்திருக்கிறது; ஐரோப்பாவிலும் ஸ்பெயினிலும் இருந்துவரும் நிலைமை அதைவிட மோசமாக இருக்கிறது; எங்கள் நாடு திக்கற்றதாக இருந்தது; ஸ்பெயினியில் இரண்டு கட்சிகளுக்கும் பக்கபலம் அதிகமாக இருப்பது அதிகக் கவலையை விளைவிக்கிறது எதியோபியாவுக்கு நியாயம் கிடைக்கவில்லை; ஆனால் பொது ஜனங்கள் அதற்கு நியாயம் வழங்கி விட்டார்கள். அதை எதியோபியர்கள் பெரிய ஆறுதலாகக் கருதுகின்றனர். அந்த பலத்தைக் கொண்டு எதிரியிடம் சிக்காத பிரதேச வாசிகள் போராடி வருகின்றனர். இத்தாலியின் ஆதிக்கத்திற்குட்பட்ட பிரதேசங்களிலிருந்து வருகிறவர்களும் எதிர்ப்புணர்ச்சியைக் காட்டியே வருகின்றனர். ஆயினும் அங்கு நடந்து வருவது என்னவென்பதை நாம் அறிந்துகொள்ள வழியில்லாமலிருக்கிறது. இத்தாலியர் விஷப் புகை பலத்தைக்கொண்டே நாட்டில் எஞ்சியுள்ள பாகங்களைப் பிடித்துக்கொண்டு வருகிறார்கள். அடிஸ் அபாபாவிலிருந்து எடுத்துக்கொண்ட தங்கத்தை சோல்ஜர்களுக்கு அவர்கள் சம்பளமாகக் கொடுத்துவருகிறார்கள் இன்னமும் சர்வதேசச் சங்கம் கூடுகிறதென்றால் அவர்களுக்கு நம்பிக்கை உதிக்கிறது.

* * * *

பட்டத்துறவில் லாய்ட் ஜார்ஜின் துக்கம்

தற்பொழுது ஜமைகாவிலிருக்கும் மிஸ்டர் லாயிட் ஜார்ஜ் வின்ஸர் கோமகனுக்குப் பின் வருமாறு ஒரு செய்தியனுப்பியிருப்பதாகத் தெரிகிறது:—

"முன்னர் மந்திரிப் பதவி வகித்து வந்தவனும் முன் போல் இப்பொழுதும் தங்களை விசேஷமாக மதித்துவருபவனுமான அடியேன் கிறிஸ்துமஸை முன்னிட்டு எனது நல்வாழ்த்தை தங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

தங்கள்பால் நான் கொண்டுள்ள விசுவாசமும் அன்பும் இப்பொழுது இன்னும் பெருகியிருக்கின்றன. வெறுக்கத்தக்கவாறு முட்டாள்தனமான முறையில் தாங்கள் நடத்தப்பட்டது கண்டு நான் வருந்துவதுடன், சிலர் அற்பத்தனமாகச் சிறிதும் பெருந்தன்மையின்றி தங்களைப்பற்றித் தாறுமாறாகப் பேசிவருவதை ஆத்திரத்துடன் கண்டிக்கின்றேன்.

தமது குடிகளில் மிகவும் தாழ்ந்த நிலையிலுள்ளோர்பால் அனுதாபம் காட்டிவந்த ஒரு மன்னரை பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் இழந்துவிட்டது பற்றி பெரிதும் வருந்துகிறேன்."

* * * *

பெய்ஸ்பூரில் ஆரம்பமான அகில இந்திய காதி பொருட் காட்சி சாலை திறந்துவைக்கப்படுமுன் கவி ரவீந்திரரால் இயற்றப்பட்ட "ஜனகணமனே அதிநாயக" என்னும் தேசியப் பாடலை மஹாராஷ்டிர தேச சேவிகைகள் பாடினார்கள்.

பிராட்காஸ்ட் புதிய வெளியீடு

பிராட்காஸ்ட் கிறிஸ்மஸ் புது வருஷ வெளியீட்டு ரிகார்டுகள் வரப்பெற்றோம். 'நீண்ட நேரம் பாடும் நேர்த்தியான ரிகார்டுகள்' என்பது பிராட்காஸ்ட் ரிகார்டுகளுக்கு முற்றிலும் தகும்; விசேஷமாக இப்போது தகும்.

'சங்கீதஞானமு' என்ற தங்யாசி கிருதியை ஸ்ரீமான் ராஜமாணிக்கம் பிள்ளை ஒரு ரிகார்டின் இரு புறங்களிலும் வாசித்திருக்கிறார். ஸ்ரீமான் பிள்ளையின் வித்வத்தைக் குறித்து விசேஷமாகச் சொல்ல வேண்டியதில்லை. பிடில் வித்வான்களின் முன்னணியில் இவர் முதல் ஸ்தானத்தை வகிக்கிறார்! இவர் வாத்தியத்தைத்தான் வாசிக்கிறாரா? நம்முடைய நரம்புகளிலேயே வாசித்து மகத்தானந்தத்தை உண்டு பண்ணுகிறாரா என்று ஐயுறத்தக்க முறையில் இவர் வாசித்திருக்கிறார். சங்கீதப்பிரியர்கள் வாங்கிக் கேட்கவேண்டிய ரிகார்டுகளில் இதுவொன்று.

ஐந்து ரிகார்டுகளில் ஒரு தமிழ் நாடக ஸெட்டும் வெளியிடப் பட்டுள்ளது. மனோரஞ்சனி என்பது நாடகத்தின் பெயர். ரிகார்டுகளின் தன்மையை உத்தேசித்தும் இப்பெயர் பொருத்தமானது. கதை வரலாற்றைக் குறிப்பிட விரும்பவில்லை. அவ்வாறு செய்தால் சுவாரஸ்யம் கெட்டுவிடும். தமாஷான கதை, இனிய பாட்டுகள், உணர்ச்சி ததும்பும் சம்பாஷணைகள், உயர்ந்த ரிகார்டிங். அதைவிட வேறென்ன வேண்டும்?

பட்டத்துறவுப் படம்

வின்ஸர் கோமகன் தாம் பட்டந் துறந்த விவரத்தைத் தத்ரூபமாகக் காட்டும் ஒரு ஸினிமாக் காட்சியை வியன்னாவில் பார்வையிட்டார். அவர் யோசனையிலாழ்ந்த முகத்துடன் மௌனமாக அதைப் பார்த்துக்கொண்டிருந்தார்.

* * * *

யார்க் ஆர்ச்பிஷப்பின் துண்டுப் பிரசுரம்

மாஜி மன்னர் எட்வர்டின் பட்டத்துறவுபற்றி யார்க் ஆர்ச்பிஷப் ஒரு துண்டுப்பிரசுரம் வெளியிட்டுள்ளார். அதில் அவர் பின்வருமாறு தெரிவித்திருக்கிறார்:—

"மாஜி மன்னர் பட்டத்தை துறப்பதென்று முடிவு [illegible] செய்ய நேர்ந்ததற்கு [illegible]ன சந்தர்ப்பம் ஒருபோதும் ஏற்பட்டிருக்கவே கூடாது. அவர் தமது விவாக உத்தேசத்தைச் சென்ற அக்டோபர் மாதம் மிஸ்டர் பால்டுவினிடம் தெரிவித்ததற்கு முன்பேயே, தீங்கு நிகழ்ந்துவிட்டது.

இதற்கு முன் எவ்வளவோ பேருக்கு பிறரது மனைவிகள் மீது காதல் தோன்றியிருக்கிறது. வெகு ஜாக்கிரதையாக முடிவு செய்ய வேண்டிய சமயம் அதுதான். காதலைக் கைவிடுவதா, அல்லது கடமையைக் கைவிடுவதா என்ற சங்கடம் ஏற்படக்கூடிய அளவுக்கு அக் காதல் முற்றுமுன், அவ்விருதரப்பினரும் சந்திப்பதை நிறுத்திவிட வேண்டும். இதுதான் யோக்கியதையுள்ளவர்கள் செய்யும் முடிவு.

* * * *

சீனக் கலகம் முடிந்தது

சீனாவில் கலகக்காரர்களுடன் சமரசம் ஏற்பட்டுவிட்டது. இதனால் கலகமும் ஒருவாறு முடிந்துவிட்டது. சீனப் பிரதம மந்திரியான மார்ஷல் சியாங்கெய் ஷேக் விடுதலை பெற்றுவிட்டார். கலகத் தலைவரான ஜெனரல் சாங்ஸுலியாங் நாங்கிங்கு வந்து சேர்ந்ததும் பிரதம மந்திரிக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் அவர் தெரிவித்திருந்ததாவது:—

"நான் இயற்கையிலேயே நாகரிக மறியாதவன்—மரியாதை சம்பிரதாயங்கள் தெரிந்தவனுமல்லேன். கடுமையானதொரு குற்றத்தை நான் செய்துவிட்டேன். அதுபற்றி நான் பெரிதும் மனமுடைந்[illegible] இக்குற்றத்திற்[illegible] தக்க தண்டனையைப் பெறும்பொருட்டு, தங்களுடன் நாங்கிங்கு வந்திருக்கிறேன். எனக்கு மரண தண்டனை விதிப்பதால் தேசத்திற்கு க்ஷேமமேற்படுமாயின், அத்தண்டனையை ஏற்கவும் நான் தயாராயிருக்கிறேன். நியாயப்படி என்னை எவ்வாறு நடத்தவேண்டுமோ அவ்வாறு நடத்துக. சிநேகம் காரணமாகவோ, அனுதாபம் போன்ற உணர்ச்சி காரணமாகவோ என்னை வேறுவிதமாக நடத்த வேண்டாம்."

பிரதம மந்திரியுடன் கைது செய்யப்பட்ட உள் நாட்டு மந்திரியான சாங்ஸோலின் என்பவரும் விடுதலை பெற்றுவிட்டார். நாங்கிங்கிலும் மற்ற நகரங்களிலும் ராணுவச் சட்ட அமுல் ரத்து செய்யப்பட்டிருக்கிறது.

* * * *

வெடிகுண்டுக்காகப் பந்தோபஸ்து அறைகள்

இனி புதிதாக வீடுகள் கட்டுவோர் வெடிகுண்டு வீச்சின் பொழுது தங்கக் கூடிய பந்தோபஸ்து அறைகளும் அமைக்க வேண்டுமென இத்தாலிய சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கின்றனர்.

* * * *

ராஸ்காஸாவின் குமாரர்கள் கதி

ராஸ் காஸாவின் குமாரர்களில் எஞ்சியிருந்த இருவரையும் ஒரு இத்தாலியப் போலீஸ் படை சிறைப்படுத்திப் பிறகு சுட்டுக் கொன்றுவிட்டதாகச் செய்தி கிடைத்திருக்கிறது.

* * * *

ருஷ்யாவில் மீண்டும் ஜெர்மானியர் கைதி

[illegible] ஜெர்மானியர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். பாஸிஸ்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகவும் உளவறிந்து வந்ததாகவும் அவர்கள்மீது குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறது. இவ்வழக்கு பற்றிய விசாரணை சீக்கிரத்தில் பஹிரங்கமாக நடக்குமென்று கூறப்படுகிறது.

* * * *

புரொப்ரைட்டர்,

ஆங்கிலோ பர்மா பின்மென்,

147, பிராட்வே, மதராஸ்.

அன்பார்ந்த ஐயா,

தங்களுக்குச் சலவைக்காக அனுப்பிய எனது கோட்டின் ஒரு ஜேபியில் இருந்த எனக்குச் சொந்தமான வைர மோதிரம் ஒன்றைத் தாங்கள் அன்பு கூர்ந்து எனக்குத் திருப்பிக் கொடுத்ததற்காக நான் தங்களுக்குப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்; அதற்காகத் தங்களுக்கு எனது மனமார்ந்த வந்தனம். மேற்படி மோதிரம் விலை மதிப்பானது மட்டுமென்றி, நான் வெகு பிரியமாக கொண்டாடி வந்ததுமாகும். அது தொலைந்தே போய்விட்டது என நான் முடிவு செய்துவிட்ட சமயத்தில் எனக்குத் திரும்பக் கிடைத்தது; தாங்கள் விசேஷ யோக்கியப் பொறுப்புடன் நடந்து கொண்டதை நான் பாராட்டி மெச்சுகிறேன். தாங்களும் தாங்கள் ஸ்தாபனமும் நீடூழி காலம் வெற்றியுடன் விளங்க வேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்.

(ஒப்பம்) வி. ஜெயராமன்,

பர்மனண்ட் வே சார்ஜ்மென், M. E. T.

சிறுவர் பகுதி

தங்கம் நிறைந்த பைகள்

(டி. பி. குருசுவாமி)

முன் ஒரு காலத்தில் ஒரு மகம்மதிய குருவினிடத்தில் ஹோசான் என்னும் ஓர் வேலைக்காரன் இருந்துவந்தான். அவன் மிகவும் பேராசையுள்ளவன. அவனும் அவன் மனைவியும் ஓர் கூரைக் குடிசையில் வசித்துவந்தார்கள். ஹோசானுக்கு ஒவ்வொரு மாதத்திலும் கிடைக்கும் பணத்தை எல்லாம்ஓர்சாக்குப்பையிலிட்டு புதைத்து வைத்திருந்தான். புதைக்கும்பணத்தை அவனும் அவன் மனைவியும் ஒருவரும் இல்லாத போதும், வேலை இல்லாத நேரமும் எண்ணி, எண்ணிப் பார்ப்பதே அவர்களுடைய பெரிய விருப்பம்.

ஹோசான் மிகவும் பேராசைக்காரனானதால், அவன் தன் எஜமானனாகிய மகம்மதிய குருவின் அரண்மனையில் திருடுவதற்கும் துணிந்தான். அவன் ஒவ்வொருநாளும் ஒவ்வொரு பொன் கட்டியை எடுத்துக்கொண்டு போய் தன் பணத்தோடு சேர்த்துப் புதைத்துவைத்தான்.

அவன் மனைவி ஒரு நாள் தங்கள் சாப்பாட்டிற்காகச்செலவழியும் சொற்ப தொகையையும் நினைந்து மனமுருகி, வயிறெரிந்து, தன் கணவனிடம் ஓர் யோசனை கூறினாள்.

"நாதா, தாங்கள் இருப்பதாக வெளியில் தெரிவித்துக்கொள்ளாமலிருக்க வேண்டும். அதற்குத் தாங்கள் இரவில் மாத்திரம் இங்கு வந்து விடியுமுன் சென்றுவிட வேண்டும். அப்படியானால் நான் தாங்கள் சிறையில் அநியாயமாய் அடைக்கப்பட்டதாக பிச்சை எடுக்கிறேன். இப்போது நம் சாப்பாட்டிற்காக செலவழியும் தொகையையும் நாம் மீதகலாம்'' என்றாள். அன்று முதல் ஹோசான் அவ்வாறே செய்தான். அவன் மனைவி அன்று முதல் கடைகளுக்குச் சென்று தன் கணவனை மகம்மதிய குரு அநியாயமாகச் சிறையில் அடைத்துவிட்டதாகவும், தனக்குச் சாப்பாட்டிற்கு யாதொரு வழியுமில்லை என்றும் கெஞ்சியும் பிச்சை எடுத்தாள். அவள் மேல் இரக்கங்கொண்ட கடைக்காரர்கள் தங்கள் கடைகளில் சிதறுண்ட சாமான்களையும், தங்கள் தங்களாலான உதவியையும் புரிந்தார்கள்.

பிறகு கொஞ்ச நாளைக்கெல்லாம் கடைக்காரர்களுக்கு ஹோசான் சிறையிருப்பதுபற்றி சந்தேகம் ஏற்படவே, அவர்கள் அவளை வெருட்டி உதவி செய்ய மறுத்தனர். அதன் பிறகு அவள் தன் உற்றார் வீடுகளுக்குச் சென்று, தன் புருஷன் அனியாயமாய் சிறைப்பட்டதாய் ஓலமிட்டு, அவரவர்கள் தங்களாலியன்றதைக் கொடுக்க, தொண்டு வந்து ஜீவித்து வந்தாள்.

இஃதிவ்வாறிருக்க, மகம்மதிய குருவின் வீட்டில் நாளுக்கு நாள் பொன் கட்டிகள் குறைவுபடவே அவருடைய வேலைக்காரர்களின் வீடுகளை சோதித்தபொழுது, பேராசையுள்ள ஹோசான் வீட்டில் அவைகள் இருப்பதைக் கண்டு சேவகர்கள் தங்கள் குருவினிடம் அறிவித்தார்கள்.

இதைக் கேட்ட மகம்மதிய குரு, அவனையும் மற்றவர்களையும் விசாரித்து, இத்திருட்டானது பேராசையால் தூண்டப்பட்டு செய்ததாகும் என அறிந்து, அதற்கு அவர்களுக்கு தண்டனையைவிட புத்தி புகட்டுவதே மேல் என அறிந்து, அவர் தம் குடிகளுக்கு "ஒருவரும் ஹோசானுக்கும் அவன்

மனைவிக்கும் சாப்பாட்டிற்கு வேண்டிய தானியமும், உடுக்க உடையும் கொடுக்கக்கூடாது'' என்று கட்டளையிட்டார். அதோடு அவன் திருடிய திருட்டுப் பொருள்களாகிய அப்பொன் மூட்டைகளை அவனிடமே கொடுத்தனுப்பி விட்டார்.

ஹோசான் தான் தண்டனை அடையாததோடு, பொன் மூட்டைகளும் திரும்பக் கிடைத்தது பற்றி சந்தோஷித்தான்.

பொன்னைக் கொண்டு அவன் சாமான்களோ, துணிகளோ, வாங்கச் சென்றபோது ஒருவரும் கொடுக்க மறுத்தனர். சென்றவிடமெல்லாம் அவனை இகழ்ந்தனர். கடைக்காரர்கள் தங்களை பொய் சொல்லி ஏமாற்றியதற்காகக்கடிந்தனர். இப்படி சில நாள் செல்ல இவர்களிடம் இருந்த உணவுப் பொருள்கள் குறையவு இவர்கள் உண்ண உணவின்றி வாடி வருந்தினர். உடல் மெலிந்து கண் பஞ்சடைந்து வாடினர். கடைசியாக தங்கள் பணத்தால் யாதும் பயனில்லை என அறிந்து மகம்மதிய குருவிடம் சென்று, பொன் மூட்டைகளை வைத்து, காலில்

விழுந்து அப்பொன் மூட்டைகளை எடுத்துக் கொள்ளும்படியாகவும், தங்களுக்காக ஜனங்களுக்கு இட்ட கட்டளையை மாற்றும்படியாகவும் கெஞ்சிக் கேட்டுக் கொண்டனர்.

பிறகு அக்குரு அவர்கள் கொணடுவந்தபொன் மூட்டைகளை அவர்களுக்கே கொடுத்து, அவர்களுக்காக ஜனங்களுக்கு இட்ட கட்டளையையும் நீக்கி, அவர்களுக்குப்புத்தி புகட்டினார். அன்று முதல் ஹோசானும் அவன் மனைவியும் பேராசை என்னும் பேயை ஒழித்து, சுகமாக வாழ்ந்து வந்தார்கள்.

கெற்ப சஞ்சீவி எண்ணெ

ஸ்திரீகளுக்கு மாதாந்தரத்தில் வரும் பொறுக்கமுடியாத வயிற்று வலியை அந்த க்ஷணமே நிறுத்தும். சூதக க்ஷயம், சூதக சூலை, சூதக ஜுரம், சூதக வாய்வு, சூதக கட்டு, சூதகச் சிக்கல், சூதகத் திராக்ஷி, சூதகக் கட்டினால் உண்டாகும் தலைவலி, உடம்புவலி, கைகால் பொருத்துகள் உளைவு, மேலெல்லாம் குத்து, குடைச்சல், உடம்பு ஸ்தூலித்துப் போதல், வயிர் பெருத்தல், காந்தல், எழுந்திருக்க முடியாமை, திகைப்பு, மூச்சு, மயக்கம், பசியின்மை, சாப்பாட்டில் வெறுப்பு, ஒருசெம்பு ஜலங்கூட தூக்கமுடியாத பலஹீனம், சூதக ஜன்னி முதலிய வியாதிகளையெல்லாம் தீர்த்து கெற்பப்பை சுத்திகரிக்கப்பட்டு, கெற்ப உற்பத்தியை உண்டுபண்ணும். 6-வித மலடு தீரும். கெற்பம் தரிக்கவிடாது பண்ணும் கிருமிகளைக் கூட்டோடு வெளியிலகற்றிவிடும். திடகாத்திரமும், பூரண ஆயுளுமுள்ள குழந்தை தரிக்கும்.

1 நபருக்கு 3 புட்டி வேண்டும்

1 புட்டி ரூ 2. 3-புட்டி ரூ. 5. சேலவு வேறு

குணம் இல்லாவிடில் ரூபா 5 வாபீஸ்

பழனி வைத்திய ஆசிரியர்

ஆர். எம். கே. வேலுசாமி பிள்ளை

சித்த வைத்திய சாலை

146 புரசவாக்கம் ஹைரோட் சென்னை

கிளைமை ஆபீஸ், பழனி

வெளிவந்து விட்டன!

ஹோமியோ புத்தகங்கள்

ஹோமியோ வைத்திய முறை

தத்துவம்

தெலுங்குப்பதிப்பு விலை ரூ. 1 தான்.

M. BHATTACHARYYA & Co

Economic Pharmacy, 84, Clive Street CALCUT

வருங்கால பலன்

புராதன சாஸ்திர ஆராய்ச்சியின் பேரில அனுபவம் பெற்ற இருவர் கலந்து தெளிவுபடக் கூறுவதாம்.

பண்டிட M R K. மூர்த்தி, ஜோதிஷ கலா வல்லபர் — பண்டிட் E. S. K. சுவாமி. ஜோதிஷ தத்வக்கியானி

ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 1. காரணமுடன் கேள்வி 1-க்கு ரூ. 1. ஒரு வருஷ மாதவாரி பலன ரூ. 2 ஆயுள்வரை பொதுப்பலன் ரூ. 10. ஜாதகமாவது, பிறந்த நேரம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.

ஜோதிட கழகம்" 70, தேவராஜமுதலி தெரு, பி.டி. மதராஸ்.

இரங்கோன் கலர் சிந்தடிக்கற்கள் மணிமாலைகள்

இந்தியாவில் எல்லா பாகங்களிலும் ஏராளமாய் விரும்பக்கூடிய தற்கால நாகரீகத்துக்கேற்றவாறு கெமிகல் கோல்டினால் புதுமாதிரியாய் தயார் செய்தவை. இதை ஸ்திரீகள் குழந்தைகள் நேர்த்தியாய் அணிந்து கொள்ளலாம்.

25"நீளமுள்ள கலர் கல்மாலை 1க்கு ரூ. 4-0-0

ஷெ பெண்டன்டு போட்டது 1க்கு ,, 5-0-0

ஜாலர் ஒட்டியாணம் பெரியது 1க்கு ,, 6-8-0

நெ.1. சாதா கெஜ்ஜைஒட்டியாணம் 1க்கு 5-8.

நெ. 2. 1க்கு 3-8-0 நெ. 3. 1-க்கு 2-8-0

கைவளையல்கள் பெரிய சைஸ் ஜதை 1-க்கு 2-8-0. கெமிகல் கோல்ட் ரங்கோன டைமண்டு 14 கற்கள் உள்ள கம்மல் ஜதை 1க்கு 6-0-0. எல்லாவற்றிற்கும் 5 வருஷம் உத்தரவாதம். F. M. S. ஆர்டருக்கு முன் பணம் அனுப்பவும்.

கே. நாதமுனி & சன்ஸ்,

(ஸ்தாபிதம் 1910.)

168, சைனா பஜார் ரோட் மதராஸ்.

முக்கிய அறிவிப்பு.

அமிர்தாஞ்சன் டிப்போவின் படை மெழுகு

இதுவரையில்

ராஜா-ராணி, வியாபாரக் குறியுடன்விளங்கிய எமது வில்லியம் அண்டு கம்பெனியின் படை மெழுகு இப்பொழுது கீழ்க்கண்ட வகையில் மாற்றப்பட்டிருக்கிறது.

அமிர்தாஞ்சன் டிப்போவின் மூவர்ண 'உதய சூர்யன்'

மேற்படி தகவலையறியும்படி முக்கியமாக எமது வாடிக்கைக்காரர்களை நாம் கேட்டுக்கொள்ளுகிறோம். வியாபாரக் குறியில் மாறுதல் ஏற்பட்டிருக்கிறதே தவிர எமது மருந்தின் தயாரிப்பில் எவ்வகை மாறுதலுமில்லையென்று உறுதி கூறுகிறோம்.

அமிர்தாஞ்சன் லிமிடெட் பம்பாய், மதராஸ், கல்கத்தா

ஸ்டாக் செய்பவர்கள்:— எ. பி. பரேக், சைனா பஜார் ரோட், மதராஸ்

ஷியாம் & கம்பெனி, பந்தர் தெரு, மதராஸ்.

"குஜராத்சமாச்சார்" (தினப் பதிப்பு)

"பிரஜாபந்து" (வாரப் பதிப்பு)

[1898-ல் ஸ்தாபிக்கப்பட்டவை]

குஜராத்தில் பிரபல்யம் வாய்ந்தவை ஆமதாபாத்திலின்று பிரசுரிக்கப்படுபவை

குஜராத்தில் உங்கள் வியாபாரம் பெருக வேண்டுமானால் இப்பத்திரிகைகளில் விளம்பரஞ் செய்யுங்கள்

இங்கிலீஷிலேயே கடிதங்கள் எழுதவேண்டும்.

Manager, Gujarat Samachar & Praja Bhandhu

AHMEDABAD.

ராதா

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

யல்லவா நான் என்னுடைய சுகத்தையும் கருதாமலிருந்து விட்டேன்! நீயாவது வாழ்வா யென்று நம்பியல்லவா என் வாழ்வை நான் கெடுத்துக் கொண்டேன்! உன் வாழ்வும் என் வாழ்வும் ஒன்றுபோலாய் விட்டதே! என் அம்மா! உன் முகம் சற்றேனும் வாடவில்லையே! மகாலக்ஷ்மி போலிருக்கிறாயே! உனக்குச் சாகும் பருவமா இது! நீ செத்துவிட்டது பொய் போலிருக்கிறதே! எனக்கு விவாகமானதும், தம்பி பிறந்ததும், நீ மாண்டதும் எல்லாம் ஒரு கனவுபோல் தோன்றுகின்றதே! நான்கு தினத்திற்குள் எத்தனை விந்தை நடந்துவிட்டது! நான் எந்த விந்தைக்கென்று அழுவேன்! மனிதர் செய்த விந்தை பாதியும் தெய்வம் செய்த விந்தை பாதியுமாய்விட்டதே! நீ என்னைப்பற்றிய கவலையின் மிகுதியால் இறந்தாயோ? அல்லது, தெய்வச் செயலாய் இறந்தாயோ? தெய்வச் செயலா! தெய்வமே! என் அன்னை இந்தப் புண்ணியவதி என்ன பாவம் செய்தாளென்று இந் த அற்பவயதில் அலைழத்துக் கொண்டாய்! ஆவலாய்ச் சுமந்து பெற்ற பிள்ளையை கண்ணாறப் பார்க்கு முன் கொண்டு போய்விட்டாயே! ஈசா இது உன் கருணைக்கழகா! என்று புலம்பிக்கொண்டிருந்த ராதா தம்பியை நினைந்து திடீரென்றெழுந்து இரண்டாம் கட்டுக்குப் போய் "என் தம்பீ! என் தம்பீ! நீயாவது பிழைப்பாயா! நீயும் மோசம் செய்துவிடுவாயோ? உன்னை நம்பித்தான் நான் உயிர் வைத்திருக்கின்றேன். என் தம்பீ! இவ்வுலகில் எனக்கு உன் பற்றையன்றி வேறொரு பற்றுமில்லை! சொல்லடா என் தம்பீ பிழைத்துக் கொள்வாயா? உன் தாயைத் தேடாயோ? நீ பெரியவனாய் "என் அக்கா, என் அம்மை யெங்கே?" என்று என்னைக் கேட்டால், நான் உனக்கென்னடா சொல்வேன். அம்மையிருந்து அருமை செய்ய உன் தலையில் எழுதவில்லையேடா தம்பீ?" என்று தொண்டை வெடிக்கக் கூவிப் புலம்பினாள். புலம்பிக்கொண்டிருக்கும்பொழுதே, தொண்டைக் கட்டினாலும், நாவறட்சியினாலும் ராதா அயர்ந்து மூர்ச்சையாய்க் கீழே சாய்ந்தாள்.

இதுவரையும், இறந்துகிடக்கும் அநந்த கல்யாணியை ஒரு பக்கமும், பிறந்து ஒரு நாழிகைகூட ஆகாத சிசுவையொரு பக்கமும் சுற்றிச் சுற்றிப் பார்த்துக்கொண்டு கூவுகிறவர்களும், மூக்கின்மேற் கை வைத்தபடியே நின்று "ஐயோ!" வென்று பரிதாபப்படுகிறவர்களுமான அவ்வூர் அயல் வீட்டு ஸ்திரீகள், ராதா மூர்ச்சையாய்க் கிடப்பதைக் கண்டு அவளுக்கும் சிகிச்சை செய்யத் தொடங்கினார்கள். உள்ளபடியே இக்கொடிய துக்கத்தை ஒருவரும் சகிக்கவில்லை. அதிலும் நமது ராதா—பன்னிரண்டு வயதுப் பாலிகை—குயிலினுமினிய இரக்கமான இனிய குரலில்—கல்லும் கரைந்துருகியோடுமாறு—அழும் அழுகையைக் கேட்டுக் கண்ணீர்விடாதவர்களில்லை. இத்துடன் வெளிக்கூடத்தில், இதுவரை இத்தனை கொடிய துக்கங்களுக் காட்பட்டிராத ஸ்வபாவியாகிய நந்தகோபர் படும் துக்கத்தையும் அவர் வடிக்கும் கண்ணீரையும் பார்த்துக் கொதிப்படையாத ஆண் பிள்ளைகள் அவ்வூரிலில்லை. அநந்த கல்யாணி பிராணன் பிரிந்து மூன்று நான்கு மணி நேரமாய் வீடு முழுதும்கூவென்ற கூச்சலாகவே யிருந்தது. பூந்துறை யென்னும் லக்ஷ்மீகரமான கிராம முழுதுமே அன்று தினம் துக்கமென்னும் மேகத்தால் மூடப்பட்டாற்போல் இருண்டிருந்தது.

மேளகாரர், நாவிதர் முதலிய இழவுத் தொழிலாளிகள் மயானத்துக்குப் புறப்படத் தயாராய் நிற்கின்றார்கள். அநந்த கல்யாணிக்கென்று தயார்செய்யப்பட்ட பூந்தேர்முடிந்து ஒரு மணி நேரமாய் அவள் வரவை யெதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தது. சுமார் பன்னிரண்டு மணிக்கெல்லாம் அநந்த கல்யாணி, தன் பெயருக்கிசைய, ஒரு கல்யாணப் பெண் போல் மஞ்சள் சந்தனம் புஷ்பம்முதலியவற்றால் மங்கலமாய் அலங்கரிக்கப்பட்டு, தன் தாயையும், தன் அருமை மக்கள் இருவரையும், தனது உயிர் நாதன் நந்த கோபரையும், அவர்கள் மேல் வைத்திருந்த அன்பையும் மறந்தவளாய், வீட்டினின்று வெளிப்பட்டு, தெருவாயிலிலிருந்த பூந்தேரிற் கிடத்தப்பட்டாள். மயானத்தை அடையவும், அவளுடைய பேரில்லாப் புத்திரனுக்குப் பிரதிநிதியாயிருந்து, கணவரே சகல தகனக்கிரியைகளையும் செய்து முடிந்து வீடுவந்து சேர்ந்தார். இக்கொடிய துஷ்டி சமாசாரத்தைத் தந்தி மூலமாயும் கடித மூலமாயுமறிந்த அயலூர்ப் பந்துக்கள் மறு நாள் மூன்றாம்நாள் வரை வந்து கொண்டேயிருந்தார்கள். பாற்கடலிலிருந்து மணமகன் தண்டபாணியும் சோபனமான காளத்தியும் தவிர, நச்சு முதலியார், பஞ்சணை, பூசையாச்சி முதலிய சகலரும் வந்து, மனைவியை இழந்த நந்த கோபரையும், ஒரே மகளை ஒரு பொழுதிலிழந்து வருந்தும் அன்னபூரணியையும், அன்னையின் பிரிவையாற்றாது அலறியலறி வாடிய ராதாவையும் சமாதானம் செய்து கொண்டிருந்தார்கள்.

பதினாறும் நாள்வரை நச்சு முக்கியார் பஞ்சணையுடன் பூந்துறையிலேயே யிருந்து மாப்பிள்ளை முதலியாரின் சோகத்தை ஆற்றிக் கொண்டிருந்தார்.

ஒரு நாள் அவர் நந்தகோபரைப் பார்த்து "மாப்பிள்ளாய், ஏதோ தெய்வகதியாய் நேர்ந்த சம்பவத்துக்காகத் தாங்கள் இனி வருந்துவதில் பயனில்லை. உற்று நினைத்தால் நீங்கள் ஒரு விஷயத்திற்காக சந்தோஷப்பட வேண்டிய நியாயமுமுண்டு. இப்பொழுது இறந்த எனது தங்கை ஒரு வாரத்திற்கு முன் இறந்திருந்தால், அவள் தனது ஏக புத்ரியின் விவாகத்தைப் பார்த்திருக்க முடியுமா? விவாகம் தான் நடக்குமா? கல்யாண வீட்டுக்காரராகிய எங்களுக்குத்தான் எவ்வளவு பொருளும் சாமான்களும் சேதமாயிருக்கும்! பார்த்தோர் பரிகாசம் செய்யும்படி ஆய்விடுமே! மாப்பிள்ளை, எனக்கு இந்த வைகாசி வந்தால் சரியாய் அறுபது வயது பூர்த்தியாகிறது. இந்த வயது வரை நான் எடுத்த காரியம ஒன்றாவது தவறியிருப்பதில்லை. மலைபோல் ஆபத்துகள் வந்தாலும், பனிபோல் நீங்கிவிடும். என்தங்கை அநந்த கல்யாணி இப்படி இடை நடுவில் போகப்போகிறதையறியாமல், பெண் கொடுப்பதற்கு ஆக்ஷேபித்தாளே! அவள் நினைத்ததென்ன, முடிவில் நடந்ததென்ன! பார்த்தீர்களா? யாராயிருந்தாலும் சரி—சொல்லுகிறேன் கேளுங்கள்—பெரியவாள் சொல்லைத் தட்டப்

வெற்றி கிட்டியது

என மிஸ்டர்..........22-6-36௨ பம்பாயிலிருந்து எழுதுகிறார்

"தங்கள் "திபேத் மூலிகை" யால் தான் நான் மெட்ரிக் பரீக்ஷையில் தேறினேன்."

"திபேத் மூலிகை"யால் கீழ்க்கண்டவை சித்தியாகின்றன; லாமா யோகியின் வரப்பிரசாதம்.

வசீகரம். ஆண் பெண் இரு பாலருக்கும் இடையில் இன்ப மயமான ... தலை உட ... வசீகரிக்கும். இதை அணிபவர் அதன் ஆ சரிய சக்தியை விரைவில அறிவா. விலை ரூபா 3-8-0

2. வியாபாரமும், தொழிலும்:—நிச்சயமான தொழில விருத்தியும், இலாபமும்சித்திக்கும். விலைரூ 3-8-0

3. வியாஜ்யங்கள்:—இதன் சக்தியால் நம்பமுடியாத எவ்விதவியாஜ்யங்களும் ஜெயமாகும். விலை ரூ 3-8-0

4. வியாதிகள்:— முடியாதெனக் கைவிடப்பட்ட சகலவித கொடிய ரோகங்களும் அடியோடு நீங்கும். விலை ரூபா 3-8-0 5 உத்தியோகம்:—வேலையில்லாத திண்டாட்டத்தில் அவதிபடும் இளைஞருக்கு அவரவர் ஸ்திதிக்குத் தக்கபடி உத்தியோகம் கிடைக்கும். சம்பள உயர்வும் உத்தியோக மேன்மையும் நிச்சயம். விலை ரூ. 3-8-0 6. பரீக்ஷைகள்:- எவ்விதப் பரீக்ஷைகளிலும் நிச்சயமாய்த் தேறலாம். விலை ரூபா 3-8-0 7. சத்ருக்களை ஜெயித்தல்:—எவ்வளவு அபாயகரமான விரோதிகளும் இதை அணிபவர் முன், முழந்தாளிட்டுப் பணிவர். விலை ரூபா 3-8-0 8. கிரஹ தோஷம்:-எல்லாவிதமான கிரஹ தோஷங்களும் சாந்தியாகும். விலை ரூபா 3-8-0 9. ஆரோக்யமும், செல்வமும்:—எளிதில் சித்திக்கும். விலை ரூ. 3-8-0.

அறிவிப்பு:—இந்த சாஸ்திரங்களில் நம்பிக்கை உள்ளவர்கள் மாத்திரம் தங்கள் நோக்கம் இன்னதென்பதைக் குறித்து எழுதவும். ஒவ்வொரு நோக்கத்துக்கும் தனிப்பட்ட மூலிகை அவசியம். ஒரு மூலிகையின் விலை ரூபா 3-8-0. தபால் சார்ஜு வேறு. ஒரே தடவையில் 3 மூலிகைகளை வாங்கினால் தபால் சார்ஜ் உள்பட ரூ. 9-6-0.

BIJOYA LODGE, (S.M.W.)
P. O SALKIA HOWRAH

மின்சாரரசம்

சகல வியாதிகட்கும் தேவாமிருதம் போன்றது.
புட்டி 1-க்கு ரூபா 2.
மின்சார ரசம் கம்பெனி, (லிட்)
சேலம்,

படாது. பெரியவாள் மனம் கன்னும்படி நடப்பதே வினை. அது முடிவில், தன்னையே பாதிக்கும். என்னவோ, மாப்பிள்ளாய், என் மனம்—அதாவது என் மனம் காந்த பாலுக்குச் சமானம்—என் மனம் நோவ நடந்தவர்கள் ஒருவராவது விர்த்தியடையவில்லை" என்றிவ்வாருக அநந்த கல்யாணியின் மாணத்திற்குத் தன் சாபமே காரணமென்ற கருத்துடன் சமாதானம் செய்துகொண்டே யிருந்தார்.

தன் மைத்துனர் சொல்வதெல்லாம் :நியாயமென்றும், அவர் கோபத்துக்காளானது அநந்தகல்யாணிபேரில் பெரிய குற்றந்தானென்றும் நந்தகோபர் மனத்திற்குத் தோன்றும்படியிருந்தது நச்சுமுதலியின் சமர்த்தான பேச்சு. பின்னும், நச்சு முதலி, "மாப்பிள்ளாய், அவளை மறந்துவிடுங்கள். அவளையே நினைத்துக்கொண்டிருந்தால் உடம்பு கெட்டுவிடும். இதுவரை பிரமசாரியாய் இருந்ததாய் நினைத்துவிடுங்கள். தங்களுக்கு வயது முப்பத்துநாலுகூட ஆகவில்லையே! இந்த வயதுவரை விவாகமே யில்லாமல் இருப்பவர்கள் எத்தனையோ பேர்களுண்டு. அவர்களில் நீங்களுமொருவர் என்று நினைத்துவிடுங்கள். நீங்களென்ன பெண்பிள்ளையா? ஆண்பிள்ளைச் சிங்கம்தானே? இவள் ஒரு மனைவிபோனுல், இவளுக்கு மேலான ஆயிரமனைவிமாரை விவாகம் செய்து சுகிக்கக்கூடிய அந்தஸ்தும் பொருளும் அதற்கேற்ற வயதும் தைரியமும் தங்களிடமில்லையா? அல்லது தங்களைப்போல் மனைவியையிழந்தவர்களில்லையா? தூரப் போவானேன்? நான், பார்த்தால் ஒரு மனிதன், நான்கு ஸ்திரீகளை விவாகம் செய்தேன்! அந்த நால்வரையும் இழந்து விட்டேன்! ஒருத்தியிறந்ததற்காகவாவது என் கண்ணில் ஒரு துளிஜலம் வந்ததை யாராவதுபார்த்திருப்பார்களா! வேணுமானுல் விசாரித்துப்பாருங்கள்! அந்த எண்ணம் தானெனக்கு உண்டா? அதற்காக என் உடல் மெலிந்த துண்டா! எப்போ பார்த்தாலும் கல்யாணமாப்பிள்ளைபோல் கம்பீரமாய்த்தானிருப்பேன்! "இப்படித் தைரியசாலி உண்டா?" என்று அநேகர் ஆச்சரியப்படுவார்கள். என் தைரியமும் திட சித்தமும் யாருக்கு வாய்க்கும்? இந்த வயதில் நீங்கள் இப்படி வருத்தப்படுகிறீர்களே! நான் நாற்பது வயதுக்குமேல் நான்காவது விவாகம் செய்து, குச்சிலியப் பெண்போலிருக்கிற தங்கள் மருமகள் காளத்தியைப் பெற்றேன். அவளுக்கும் வயது பதினேழாகிறது. அவளைப் பார்த்தால், கிழவன் பெற்ற பெண் என்று சொல்ல முடியாது. அசல் மலையாள தேசத்து ஆச்சிப்பெண்போலிருக்குமே தவிர, சும்மா என் தங்கை அநந்த கல்யாணி மாதிரி, தள்ளினுற் கீழே விழுகிறுற் போல் ஈர்க்கில் துரும்பு மாதிரி இருக்கமாட்டாள். குணத்திலும் அவளைப்பார்க்கிலும் ஆயிர மடங்கு விசேஷமானவள். இப்படி யெல்லாம் நான்பெறவில்லையா? பாற்கடல் தாசி பஞ்சாமிர்தம் என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். அவளுக்கு நான் தாத்தா என்கிற முறை. அவள் அடிக்கடி என்னைப் பார்த்து, "தாத்தா, நீங்கள் இப்போதுகூட மூன்று பெண்சாதிமாரை வைத்து ஆண்டு பிள்ளைகளும் மணிமணியாய் பெற்றுவிடுவீர்களே!" என்று பரிகாசமாய் என் தைரியத்தை மெச்சிக்கொள்வாள்! தாசிகள் சும்மா லேசாய் ஒரு மனிதனைப்பற்றி வாய்திறந்து மெச்ச மாட்டார்கள்! அது போகட்டும். எனக்கு நான்கு கல்யாணமும் எப்படி நடந்ததென்று தெரியுமா? ஒரு மனைவியிறந்து இருபது நாளைக்குள்—அதிகப்பட்டால் ஒரு மாதத்துக்குள்—மறு மனைவி வீட்டிற்கு வந்துவிடுவாள். இறந்த மறுநாளே பெண் விசாரிக்கும்படிக்கும், முகூர்த்தம் பார்க்கும்படிக்கும் ஏற்பாடு செய்துவிடுவேன். சூதகநாள் பதினறு கழியவும், அதைத் தொடர்ந்தே கல்யாண வேலையும் தொடங்கிவிடுவேன்! என்னுடைய திடசித்தம் தங்களுக்கெல்லாம் வருமா?" என்று தன் மைத்துனருக்குத் தேறுதலும் சமாதானமும் சொல்லிக்கொண்டு வரும்பொழுதே—பேச்சோடு பேச்சாய்—தன் மகள் காளத்தியின் ரூபலாவண்யத்தையும், அவளை மணப்பதற்கேற்ற யௌவனம் தன் மைத்துனரிடம் அமைந்திருப்பதையும், தான் செய்தது போலவே வெகு துரிதமாய் ஒரு மாதத்திற்குள் இருவர்க்கும் விவாகம் செய்யலாமென்ற தனது நோக்கத்தையும் ஊடே நுழைத்துச் சமர்த்தாய்ப் பேசிவிட்டார். இவ்வனைத்தையும் கேட்டுக் கொண்டே மௌனமாயிருந்த

நந்த:—அத்தான், தாங்கள் சொல்லியதெல்லாம் உண்மை தான். அவளை மறந்துவிடவேண்டுமென்று என்னுலியன்றமட்டும் பார்க்கிறேன். முடியவில்லையே! ஆண் குழந்தை யில்லையென்று கவலைப்பட்டாளே! தெய்வங்களுக்கெல்லாம் பிரார்த்தனை செய்தாளே! மகனும் பிறந்தானே! பிறந்த மகனைக் கண்ணுற் பாராமற் போய்விட்டாளே! இதை நினைக்கும் பொழுது என் வயிறு எரிகிறதே! என்ன செய்யட்டும்! எல்லாரையும் போல் அவளும் இறந்திருந்தால் மறந்து விடுவேனே!

நச்சு:—அவள் அதிர்ஷ்டம் அவ்வளவுதான். இதினும் கொடிய சாவுகள் எத்தனையோ நடந்திருக்கிறதே! ஆனுல், தங்களைப் போல் ஒருவரும் கோழைத்தனமாய்க் கவலைப் பட்டதில்லை.

பஞ்சணை:—தம்பி, சும்மா வருத்தப் படாதேயுங்கள். இன்னொருத்திக்கு மாலை பூத்திருக்கும்போது, இவளை "இரு இரு" என்று சொன்னுலும் இருப்பாளா?

நச்சு:-நானும் வந்து இருபது நாளாய் வேண்டியமட்டிலும் சமாதானம். செய்தும் மாப்பிள்ளை ஆறுகின்றூர்களில்லை. இந்த ஊரிலேயே உட்கார்ந்துகொண்டிருந்தால் அந்த நினைவு போகாது.

பஞ்ச:—அப்படியானுல், நாமிருவரும் தம்பியைப் பாற்கடலுக்குக் கூட்டிக் கொண்டு போய்—எப்படியிருந்த தேகம் என்னவரய் மெலிந்துவிட்டது!—தேற்ற வேணும்.

நச்சு:—சும்மா சோற்றைச் சாப்பிட்டால் தேகம் தேறிவிடுமா? சீக்கிரம் கல்யாணத்தை நடத்தினுல் தானே தேறும். மாப்பிள்ளை துக்கத்தை நம்மால் ஆற்ற முடியுமா? இன்னொரு மனைவி வந்துதான் ஆற்ற வேண்டும்.

பஞ்ச:—ஆமாம். அது நிஜம் தான். வருகிற பங்குனியில் கல்யாணம் நடக்கவில்லையானுல், தம்பி உடம்பு ரொம்பக் கெட்டுப்போய்விடும்! இதற்குத் தம்பி சம்மதிக்க வேணுமே!

நச்சு:-சம்மதிக்கிறதென்ன? ஆகட்டுமென்று வாய்திறந்து சொல்வார்களா? கட்டாயப்படுத்திக் கூட்டிக்கொண்டு போகவேண்டியதுதான். மாப்பிள்ளாய், ரஜா எவ்வளவு நாளைக்கு எடுத்திருக்கிறீர்கள்?

நந்த:—மூன்று மாதத்திற்கு.

நச்சு:—எது முதல் மூன்று மாதம்?

நந்த:—தை மாதம் 5உ முதல்

நச்சு:—அப்படியானுல், தை போக, மாசி, பங்குனி, சித்திரை 5உ வரை ரஜாவிருக்கிறது. எல்லாம் முன் கூட்டியே அமைந்துவிட்டது. அந்த ஈசன்—அந்தக் கருணாகரப் பிரபுவினுடைய செயலா நம்முடைய செயலா! நாளைக் காலையில் புறப்பட வேண்டியதுதான். மாப்பிள்ளாய், அநந்த கல்யாணியின் நகைகள் ரொம்ப ஜாஸ்தியாய் உண்டோ? அவை யாரிடமிருக்கிறது?

நந்த:—அதைப்பற்றி நான் நினைக்கவேயில்லை. ஒருக்கால், ராதா பத்திரமாய் வைத்திருப்பாள். அவளையும்கூட நான் பார்க்கவில்லை.

பஞ்ச:—அவளிடமில்லை. இந்த வீட்டு அன்னபூரணி அத்தை தன்பெட்டியில் பூட்டி வைத்திருக்கிறார்களாம்.

நச்சு:—அவள் வைத்துப் பூட்டுவானேன்? அவள் போட்ட நகையா? எல்லாம் மாப்பிள்ளை போட்டது தானே? ஆண் பிள்ளையில்லாத வீட்டில் அவைகள் ஏன் இருக்க வேணும்?

நந்த:—சிசு திடப்படுகிற வரை ராதாவும் இங்கே தானே இருக்க வேணும்? அவள்வரும்போது கொண்டு வருவாள். அல்லது அத்தையிடமிருந்தாலும் முடிவில் ராதாவுக்குத் தானே கொடுப்பார்கள்?

பஞ்ச:—அது சரிதான். இங்கே தானிருக்கட்டுமேன்?

என்றிவ்வாறு மூவரும் நகை விஷயமாய்ச் சம்பாஷணை செய்ததில், நச்சு முதலியார் தன் மகளை நந்தகோபருக்குக் கொடுக்கப் போகிறபடியால், அந்த நகைகள் அவர் இரண்

டாக்டர் ஜம்மி வெங்கடரமணய்யாவின்

லிவர்க்யூர்

குழந்தைகள் ஈரல், குலைகட்டிகளுக்கு நிகரற்றது என்று டாக்டர்களாலும், பெற்றோர்களாலும் போற்றப்பட்டது.

அநேக கண்காட்சிகளில் தங்கமெடல்களும், நற்சாட்சி பத்திரங்களும் பெற்றது

ரங்கூன் ஏஜெண்டு:—ரிலையன்ஸ் பார்மசி, 125-12, பின்னட் வீதி—ரங்கூன்

டாவது மனைவியாகிய தன் மகளையடைய வேண்டுமென்ற நோக்கத்துடனும், ஆனல், பஞ்சணை அந்த நகைகள் தன் மருமகள் ராதாவுக்குக் கிடைத்தால் தன் குடும்பத்தைச்சேருமென்ற நோக்கத்துடனும் உட்கருத்து வைத்துக்கொண்டே பேசினர்கள். இருவர் கருத்தையும் நந்தகோபர் உணரவில்லை.

இந்த சம்பாஷணை நடந்த மறுநாள், அதாவது அகந்த கல்யாணி காலம் சென்ற இருபத்தோராம் நாள், நச்சு முதலியும், பஞ்சணையும், அவர்களுடைய கட்டாயத்தின்பேரில், நந்தகோபரும் பாற்கடலுக்குப் புறப்பட்டார்கள். வீட்டில் எவின் வார்த்தை கேட்பதற்குக்கூட ஆண்பிள்ளை யில்லாதபடியால், தான் மகேந்திரத்திற்குப் புறப்படுகிறவரை ராஜு பூந்துறையிலேயே யிருக்கும்படி நந்தகோபர் உத்தரவு செய்தார். பூசையாச்சியும் குழந்தையின் பாதுகாப்புக்காகப் பூந்துறையிலிலிருந்து கொண்டாள். இவ்வாறு, மூவரும் ரெயிலுக்குப் புறப்பட்ட சமயம், நந்தகோபர் ராதாவினிடம் வழியனுப்பக்கொள்வதற்காக இரண்டாம் கட்டிற்குட் சென்றார். தாயை இழந்த காலமுதல்; சரியான ஆகாரமும், நித்திரையுமின்றி, இரண்டாம் கட்டைவிட்டு வெளியேருமலும், மனிதர் முகத்தில் விழியாமலும், வந்தவர்களோடு பேசாமலும், சதா தன் தம்பியாகிய சிசுவின் முகத்தை உற்றுப் பார்த்துக்கொண்டு, அழுதகண்ணும் சிந்திய மூக்குமாய், அறுப்புண்ட வெற்றிலைக் கொடி போல் வாடிச் சுருண்டு படுத்த படுக்கையிலேயே கிடந்த ராதா, தன் பிதாவின் குரலைக் கேட்டவுடன், தன் முகத்தைக் குப்புற வைத்துப் படுத்துக்கொண்டாள். நந்தகோபர் "தாயே, ராதா, நான் பாற்கடலுக்குப் போய்விட்டு வருகிறேன். தம்பியைப் பார்த்துக்கொள்" என்று சொல்வதற்கு வாயைத் திறக்கவும், ராதா தன்னை மறந்தவளாய் "அப்பா, தம்பியை நானு பார்த்துக்கொள்ள வேண்டும்! அம்மாவை அனுப்பிவிட்டீர்களே! எனக்கு யார் துணை! என் அப்பா!' வென்று கூவி அலறிக்கொண்டு தன்முன் நின்ற பிதாவின் இரண்டு கால்களையும் கட்டிக்கொண்டு விம்மி விம்மி அழுதாள். பக்கத்தில் நின்ற பஞ்சணை "ஏனடி சும்மா அழுதழுது மாய்கிறாய்! இந்த அம்மை போனல் இன்னொரு அம்மை வருவாள். புறப்படுகிற நேரத்தில் சகுனத்தடை செய்யாதேடி" என்றாள். இதற்குள் நச்சுமுதலி தன் கடுவாய்த் தொண்டையைத் திறந்து "அதென்ன சத்தம்? போனவள் போனள் இருக்கிற கழுதைகள் பேய்க்கூப்பாடு போடுவானேன்? எங்களுக்கெல்லாம் இல்லாத வருத்தமும் கவலையும் உனக்கு வந்து விட்டதோ! சும்மாகிட. மாப்பிள்ளாய் வெளியே வாருங்கள், மணியாய்விட்டது" என்று அதிகாரம் செய்துகொண்டு இரண்டாம் கட்டிற்குள் நுழைந்தார். சண்டாளன் நச்சு முதலி குரலைக் கேட்கவும், ராதா கம் என்று வாயைப் பொத்திக்கொண்டாள். நந்தகோபர் ராதாவையும், அவள் பக்கத்திற் கிடந்த சிசுவையும் கண்டு தன் கண்களிலிருந்து வரும் கண்ணீரைத்துடைத்துக் கொண்டு, தன் கையைப்பிடித்து வெளியே இழுக்கும் நச்சு முதலிக்குப் பின்னல் வந்தார். மூவரும் புறப்பட்டு விட்டார்கள். நந்தகோபர் பாற்கடலுக்குப் போகவும், அவ்வூர் ஜனங்களும் அவரிடம் துஷ்டி விசாரித்தார்கள். மனைவியையிழந்து வந்திருப்பது மன்றி நந்தகோபர் கல்யாண மாப்பிள்ளையாயும் வந்து விட்டாரென்று பண்ணைவீட்டுக்காரர் அவருக்குச் செய்த உபசாரங்களுக்கு அளவில்லை. அவருடைய சம்மதத்தை வாயாரப் பெற்றுக் கொள்ளாமலே நச்சுமுதலி தன் மகள் காளத்திக்கும் அவருக்கும் விவாகம் நடக்கப்போவதாய்ப் பிரஸ்தாபிக்கத் தொடங்கியது மன்றி, கல்யாண வேலைகளுக்கும் ஆரம்பித்துவிட்டார். எடுப்பார் கைப்பிள்ளையாகிய நந்தகோபர். அந்தரங்கத்தில் இவ்வளவு துரிதமாய் மறுவிவாகம் செய்துகொள்ள விரும்பாதிருப்பினும் தன் மைத்துனருடைய அதிகாரத்திற்கும் வாயடிக்கும் அஞ்சியவராய், கேட்டதற்கெல்லாம், "ஊம் ஊம்" என்று தலையசைத்துக் கொண்டே நாட்களைத் தள்ளினர். நச்சு முதலி பங்குனி மாதத்தில் முகூர்த்தமும் நிச்சயித்து விட்டார். தான் நெடுநாள் எண்ணியிருந்த எண்ணப்படி, எல்லாம் அமைந்து விட்டதே யென்று தனக்குள் மகிழ்வார் வார், பிறரிடமும் சொல்வார். நந்தகோபருடைய சொத்துக்களெல்லாம் தன் வைப்பாட்டி மகன் தண்டபாணிக்குக் கிடைத்துவிட்டதென்று மகிழ்ந்த நச்சுமுதலி இப்போது எல்லாப்பாக்கியமும் தன் சொந்த மகள் காளத்திக்கே கிடைக்கப் போவதை நினைந்து பூரித்தார். குறித்த முகூர்த்தத்தில் நந்தகோபரையும் காளத்தியையும் மணவறையில் ஒன்ருய் வைத்துக் கண்குளிரப் பார்த்து மகிழ்ந்தார்; மகிழ்ச்சியிலாழ்ந்தார்.

இவ்வாறு விவாகமுடியவும் பங்குனி யென்ற மாதமுமுடிந்தது. நந்தகோபர் ரஜாக் காலமும் குறுகிவிட்டது. மகேந்திரத்துக்குப் புறப்படுமுன், நந்தகோபர் தன் மக்களைப் பார்த்துவிட்டு வருவதற்காக மறுபடியும் பூந்துறைக்குத் தனியாய் வந்தார், வருமுன்னமே, அவர்க்கு மறுவிவாகம் நடந்த செய்தியைக் கேட்டுக்கொண்ட ராதா அவரிடம் நன்றாய் முகம் கொடுத்துப் பேசவுமில்லை; விவாகத்தைப் பற்றிக் கேட்கவுமில்லை. ராஜுவை விட்டுவிட்டுப் போகும்படிமட்டும் ஒரு வார்த்தை கேட்டுக்கொண்டாள். அவ்வாறே அனுமதி கொடுத்துவிட்டு நந்தகோபர் பாற்கடலையடைந்து, தன் புது மனைவி காளத்தியையும், தனக்கு உபசார வழித்துணையாய் வந்த தன் புது மாமனர் நச்சு முதலியையும் அழைத்துக்கொண்டு மகேந்திரம் சென்று யதாப்பிரகாரம் உத்தியோகம் செய்யத் தொடங்கிவிட்டார்.

(தொடரும்)

—நீலகிரி—

காப்பிக்கொட்டை

கீழ்க்கண்ட ரகங்களை சகல சார்ஜும் உள்பட சென்னை ராஜதானியில் அல்லது பம்பாய்க்குத் தெற்கேயுள்ள எந்த ஸ்டேஷனுக்கு வேண்டுமானலும் அனுப்பப்படும்:—

— வி. பி. ரெயில்வே பார்சல் மூலமாய் —

10 lb எக்ஸ்ட்ரா போல்டு தட்டைக்கோட்டை ரூபா 5—2—0

கூட்ஸ் வண்டி மூலமாக (Goods Train)

1×30 lb மூட்டை நீலகிரி "O" சைஸ் ,, 14—4—0

1×30 lb மூட்டை ,, எக்ஸ்ட்ரா போல்டு ,, 12-11—0

இன்னும் இதர காப்பிப்பொடி டீ தினுசுகளின் விலை விவரங்களுக்கு :: :: கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும் :: ::

யுனைடெட் காப்பி சப்ளை கம்பெனி, லிமிடெட்.,

மானேஜிங் ஏஜெண்ட்ஸ்

T ஸ்டேன்ஸ் & Co, Ltd., கோயம்புத்தூர்.

நஞ்சன்கூடு பல்பொடி ப்ாக்டெரியின்

கூலோயில் சிறந்த ஸ்நானத் தைலம்

அணு3 யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதறுஸ். ரூ. 1.

(முக்கிய ஊர்களில் டிப்போ ஏற்படுத்துகிறோம்)

மார்பு ரணத்தைப் போக்குங்கள்

மார்பு வலி, காசம் முதலியவற்றால் கஷ்டப்பட்டால் பேப்ஸ் உட்கொள்ளுங்கள். வாயில் போட்டுக் கரைகையில் இக் கிருமிநாச, சுவாச நிவாரண மாத்திரைகள் சிறந்த ஆவியை வெளியிடுகின்றன; இவை சுவாசாசயத்தினுள் ஊடுருவிச் செல்கின்றன. பேப்ஸ் கபத்தை அறுத்து, சமனமூட்டுகிறது. படுக்கைக்குப் பக்கத்தில் பேப்ஸ் வைத்திருங்கள். பேப்ஸ் கைக்கடக்கமான



புட்டிகளில் புட்டி 1-க்கு ரூ. 1 வீதம் கிடைக்கும்.

ஏஜண்டுகள் : மெஸர்ஸ் தாதா & கம்பெனி, பார்க் டவுன் மதராஸ்.

பேப்ஸ் கிருமிநாச சுவாச நிவாரணி மாத்திரைகளை உட்கொள்க.

பெப்ச் PEPS

செப்பிடு வித்தை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

லாம் வெடு வெடுன்னு சீறரு. பாலு அப்பான்னு கொஞ்சிண்டு போனா தூர விலக்கிப்பிடரு. வந்த புதுசிலே குழந்தையிடம் கொஞ்சி குலாவறதும் எங்கிட்டே அன்பாப்பேசறதும் அண்ணா அண்ணான்னு ஒங்களை எப்பவும் நினைக்கறதுமா யிருந்தா. இருந்திருந்தாப்பலே இப்ப எல்லாம் விபரீதமா யிருக்கு. விதியின் விளைவு எப்படியோ நீங்க இதுக்கா ரொம்ப விசனப் படவேண்டாம். இதைப் பத்தி அவருக்குக் காயிதமும் எழுதவேண்டாம். எல்லாம் முருகன் செயல்''

என் மனம் மிகவும் வருந்தியது. இன்றுதான் என் நண்பனின் வாழ்க்கையில் செப்பிடு வித்தைக்கு ஆரம்பம். நான் மேலாகப் பல காரணங்களைக் கூறி மறைமுகமாக எல்லோரிடமும் அன்புடன் இருக்கும்படி ஒரு கடிதம் வரைந்தேன் என் நண்பனுக்கு. வந்தது பேரிடி.

அண்ணா, சந்தேகம் வலுத்துப் போனதால் நான் வேலைக்காரியிடம் கவனிக்கச் சொன்னேன். பெண்புத்தி பேதமை தானே. அவரும் அவா ஆபீஸ் டைபிஸ்ட் ஒரு சட்டைக்காரியுமா ஜோகோத்துண்டு மாரிஸ் ஓட்டலுக்குள்ளே நொழஞ்சாளாம். போய் குடிக்க ஆரம்பிச்சுட்டா போலிருக்கு. தினம் ராத்தங்கரதில்லே தூக்கத்திலே லவ் டார்லிங் கின்னெல்லாம் பேத்தரு. நீங்க என் இப்ப ஒரு மாதிரியாயிருக்கேள் இன்னுகேட்டேன். அப்பதான் ஒரு லெட்டரைப்படிச்சுப்பாத்தூட்டுப் பித்துப். பிடிச்சவா போலே கசக்கிண்டிருந்தா. அதுதான் ஒங்கலெட்டர். என் லெட்டர் போட்டியள். எரியாபுண்ணிலே எண்ணெய்க்காச்சி ஊத்தாப் போலெ, "எண்டி அண்ணாக்கு லெட்டரோ" என்னு உதைச்சா. "கையை ஒடிச்சுப் பிடரேன் பாரு"ன்னு.

இந்த அமக்களத்திலே பாலு வேறே கத்த ஆரம்பிச்சுட்டான். அவர் கோபம் கங்கு கரையில்லை. அவனை முதுகில் பளீரொன்னு அடிச்சா. குழந்தை கதறித் துடிச்சுப்போச்சு பாவம். "ஒங்க ரெண்டு பேரையும் கழுத்தைத் திருகிக் கொண்ணுப்புட்டு சனி தொலைஞ்சு துண்ணிருக்கணும்'' என்னு இராஞ்சா. நிஜமாவே குடிச்சிருக்கா. வாயிலேந்து கெட்டநாத்தம். ஐயோ! இன்னும் என்னெல்லாம் வருமோ! எங்கள் இன்ப நாடகத்துக்கு முற்றுப் புள்ளிதான் போலும்''

இதைக் கண்டவுடன் என் மனம் பதைத்தது. விம்மினேன்? வியர்த்தேன்! என்பாவி கடிதம் எழுதினேனென்று தானே நொந்துகொண்டேன். பம்பாய்க்குப் போவோமென்றால் வியாபாரச்சிக்கல்களில் மாட்டிக் கொண்டிருக்கிறேன். மேலும் நண்பன் சுந்தரத்தின் மனோ நிலையில் எனது வரவு எவ்வித விபரீதமாக முடியுமோ. தெரியவில்லை. இறைவன் அருளால் அவன் மனம் மாறலாகாதா, எல்லாம் அவன் செயல் என பாரத்தை அவன் மேற் போட்டுவிட்டு மேல் விஷயங்களை எதிர் நோக்கியிருந்தேன்.

பத்து நாட்கள் கழிந்தது. மறுபடியும் ஒரு கவர் வந்தது உடைத்துப் பார்த்தேன். கண்டதென்ன? "அண்ணா என் வாழ்க்கைமலர் வெதும்பும் தருணம் துன்பக் கூட்டங்கள் கருமுகில் போலச் சூழ்ந்துவிட்டன. நான் ஒரு பெரிய அந்தகாரத்திடையே உலவும் உயிரற்ற சடலத்தின் நிலையிலுள்ளேன். என் நாதர்! என் தெய்வம், என் விவாகத்தை ரத்து செய்துவிட்டாராம். அதுபற்றி எனக்கு வருத்தமில்லை. ஆனால் அவர் மது, விலைமாது, என்னும் படுகுழிகளில் உழன்று இன்னலுறுவாரே என்றுதான் வருந்துகிறேன். விதி செய்யும் விளைவினுக்கென் செயலாம். நான் அவரிடம் சென்று தாள் வணங்கி மன்றாடினேன். உதைத்துத் தூத்திவிட்டார். என் இன்பவாழ்க்கை கனவாயது என்னபயன். கல்லெனிணங்கிவிடும். அவர் இரங்கார். சூதும் பொய்யு முருவெனக் கொண்ட தீயர் கையிலகப்பட்ட பொம்மையாய் விட்டார். என் தலையெழுத்து. சஞ்சலமடைந்து விட்டேன். நெடுநாள் உயிர்தரியேன்''...

இதற்குமேல் என்னால் படிக்க முடியவில்லை. என்னை இச் செய்தி ஒரு குலுக்குக் குலுக்கியது. ஜானகி அருமணி. ஒழுக்கத்தின் உயிர்நாடி. துணிவென்னும் தோடுடையள். அவள் குழலே சிந்தனையுருவம். இம்மாண்மை உலகத்துக்குக் காட்டிய உத்தமியின் கதியென்ன? சுந்தரத்தின் வாழ்க்கையில் ஏற்பட்ட செப்பிடு வித்தையே காரணம். என் உள்ளம் நெக்குருகிக் குழைந்தது.

இன்னும் தாமதிப்பின் ஏதிலான் அன்றோ. நான் உடன்புறப்பட்டு பம்பாய் சென்றேன். வீடு சென்றேன். பூட்டியிருந்தது. சுந்தரம் ஆஸ்பத்திரியில் மரணவஸ்தையிலிருப்பதாகக் கேள்விப்பட்டேன். உடன் பறந்து சென்றேன். குடல் ஈரல் முழுதும் மதுவரக்கன் தின்றுவிட்டான். ஒரு எலும்புக்கூடு. அவனை என் மார்பில் சாய்த்துக்கொண்டேன். நான் சென்ற இரு நிமிஷங்களில் "நண்பா......ராமு...... பாவி, நான்......மன்னிப்...... என்று குழறிக்கொண்டே தன் ஆவியைத் துறந்தான்.

எதிரில் பார்வையைக் கண்ணீர் மறைக்க இமைகளை நீக்கிப் பார்த்தேன். தங்கப் பதுமைபோன்ற தையல் என் சோதரி முகம். களையிழந்து கதறுகிறாள். அண்ணா எனப் பாய்ந்து என்னையும் என் நண்பன் தேகத்தையும் சேர்த்துக் கட்டிக்கொண்டாள். "ஓ! என் வாழ்வு காட்டுரோஜா...... பாலு உன் அடைக்கலம். நாதனோடு''......முற்றுப் புள்ளி. அவள் உண்ட விஷம் அவள் உயிரை உண்டுவிட்டது.

அந்தோ! என் நிலையாது; பேனாவும் நடுங்குகிறது! கண்மணி! இந்தப் பாவிக்கும் ஏதேனும் விஷமில்லையா? எனக் கதறி விட்டேன். கண்முன் அப்பா, அம்மா எனக் கதறும் பச்சைப் பாலகன். இரு தோள்களிலும் ஒப்பற்ற காதலர்பிணங்கள். பாலுவைத் தேற்றுவேனா! என் நண்பனின் புன்மையைக் கடிவேனோ; அருஞ் சோதரி! பெண்கள் திலகம் தியாகமென்ற அக்னியில் குதித்துப் புகழுடம்புடன் திகழ்ந்ததைக் குறித்தாற்றுவேனா. இரு ஆத்மாக்கள் விண்ணேகின.

அவை எனக்கு உலகத்தில் பணித்த பணி யாது? கள்ளாக்கனை, மதுவெனும் பூதத்தைக் காசினியினின்றும் துலைப்பது. சாண் வயிற்றிற்காக மானத்தை விற்கும் பல தூய குடும்பங்களின் அழிவுக்குக் காலன்கள் என்னும் வச்சச் சொற்களைக் கொண்டுள்ள நம் நாட்டு வழுக்கி விழுந்த சகோதரிகளைக் கைதூக்கி விட்டுப் பாமரித்தல்.

இதுவே என்பணி! தெய்வப்பணி! இன்றளவும் இயன்றளவு இருதுறையிலும் தொண்டாற்றி வருகிறேன். இது சத்தியம். அவர்களின் உயிர்களே இந்தத் தீர்மானத்துக்கும் இயக்கத்துக்கும் அங்குராற்பணம். தெய்வசந்நிதி முன் சத்தியம்.

"செப்பிடுவித்தையைப் போலவே—புவிச் செய்திகள் தோன்றிடும்'' என்னும் கூற்று என் நண்பனின் வாழ்க்கையில் எத்துணை உண்மை பாருங்கள்.

நரைமயிர்

அகற்றுங்கள்

உங்களது தலைமயிர் வெகுகாலமாகவோ, மிக அதிகமாகவோ நரைத்திருந்தால் விவலென் ஹேர் ஆயிலை உபயோகித்தால் நரை நீங்கித் தலைமயிர் கருகருவென்று பழையபடிப் பிரகாசிக்கும். இன்றே விவலென் எண்ணெயை உபயோகியுங்கள். அதிக நரையில்லாவிடில் சிறிய பாட்டில் ரூபா 1-12. நரை முற்றியிருந்தால் பெரிய பாட்டில் ரூ. 3. ஏககாலத்தில் 3 பாட்டில்கள் வாங்கினால் தபால் செலவு இனாம்.

சயண்டிபிக் பப்ளிஷிங்கம்பெனி)
(மெடிகல் டிபார்ட்மெண்டு, S. 15
புவானிப்பூர், — கல்கத்தா.

மதராஸ் ஸ்டாக்கிஸ்டு:—
ஜே. ஹஸாரிமால் & கம்பெனி,
260, ஜைனபஜார் ரோட்,
ஸப் ஸ்டாக்கிஸ்டு:—

தாதா & கம்பெனி, மருந்து வியாபாரிகள், 52, நைனியப்ப நாயக்கன் தெரு, பி. டி. மதராஸ்.

செகந்தராபாத் ஸ்டாக்கிஸ்டு:—
பரேக் பிரதர்ஸ், ஜம்மா மஸ்ஜித்

வெண் குஷ்டம்

பெருவியாதி

எவ்வளவு கடுமையானதாயினும், எவ்வளவு நாட்பட்டதாயினும் நாலே வாரத்தில் குணம். நிவர்த்திக்கு உத்தரவாதம்.

விவரங்களுக்கெழுதுக,

KAMALA WORKS (S. M.)
Panchoota—Bengal. India

மல்லிகாவின் பாக்யமே பாக்யம்!

போன வருடம் ஐயோ! அப்பா! என்று கஷ்டப்பட்டவள் இவ்வருடம் ஒரு குழந்தையை அன்புடன் அணைகிறாள்

"வேலன்ஸ் ஸ்திரீ ஸோதரி''

ஸ்திரீகளுக்கு மாதக்குளி காலத்தில் உண்டாகும் சூதக வாய்வு, சூதக பந்தம், சூதகக்கட்டினால் உண்டாகும் வயிற்று வலி, பேதி, பசியின்மை, வாந்தி, மயக்கம், தலைவலி, ஜ்வரம், உடல் ஸ்தூலித்தல் முதலிய எல்லா கர்ப்பாசய வியாதிகளையும் கண்டித்து மலட்டுப் பூச்சிகளைக்கொன்று, கருப்பைக்கு பலந்தந்து ரக்ஷித்து சந்தான பாக்யத்தையளிக்கும் உன்னத ஔஷதம். - பத்தியமில்லை, செட் விலை ரூபா 5.

வேலன்ஸ்மெடிகல் ஹால் 61, காரணீஸ்வரர் கோயில் தெரு மைலாப்பூர், சென்னை

இரக்ஷணிய சேனையின் சர்வதேசத் தலைவியான ஜெனரல் இவாஞ்சுலின் பூத் சென்னைக்கு விஜயம் செய்தபோது வரவேற்கப்பட்ட காட்சி.

பன்னா

(எஸ். சொர்ணபத்திரம்)

தூய்மையான அன்பொளி வீசும் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக ஓடி உதய சிங்கை நினைவிழக்கச் செய்தது எதிரி கையிற் சிக்கி யிறந்த கணவனை நினைத்தழுவாளா, தன் உயிரினுஞ் சிறந்த ஒரே மகன் உதய சிங்கின் எதிர்கால கதியை எண்ணி ஏங்குவாளா, பாவம்! இருந்தாலும் கர்ணாவதி சாமான்யமானவளல்ல. எல்லாம் அறிந்தவள். அழுவதால் எவ்வளவு தூரம் காரியசித்திக்குத் தடங்கல் நேரிடும என்று அவளுக்கு நன்றாய்த் தெரியும.

திடீரென அவள் முகத்தில் ஒரு புது ஜோதி பிறந்தது. தன் உலர்ந்து வெடித்த உதடுகளால் உதய சிங்கின் கன்னத்தில் முத்தமிட்டாள். பன்னாவை நிமிர்ந்து பார்த்தாள். பன்னா இப்பொழுது அழவில்லை. கம்பீரமாக நின்றாள். அவளைத் தன் சமீபத்தில் வரும்படி சமிக்ஞை செய்தாள். கர்ணாவதி தன் மடியின்மேல் படுத்திருந்த உதயசிங்கைத் தூக்கிப் பன்னாவின் கையில் கொடுத்தாள்.

"பன்னா! பத்து மாதம் சுமந்தவள் நான்; பத்து வருஷம் வளர்ந்தவள் நீ. இவன் உன் மகன், நீ இவன் தாய். இவன் உயிர், பட்டம், பெருமை எல்லாம் உன் கையில் இருக்கின்றன. இவனைப்போஷிப்பாயோ, தூஷிப்பாயோ, உன் பாரம்—உன் சித்தம். மீவார் தேசத்து சிம்மாசனம் காலியாகவே உதய சிங்கை எதிர் பார்க்கிறது என் சுமையை இறக்கி விட்டேன். இனி ஒரு கணமும் என் உயிர் இங்கு நிலைத்திராது. என் உயிர் அஸ்தமிக்கும் சமயம் நெருங்கிவிட்டது" என்று தங்குதடங்கலின்றி சொன்னாள்.

உடனே அருகில் ஜ்வாலை விட்டெரியும் அக்னி குண்டத்தைத் திரும்பிப் பார்த்தாள். கர்ணாவதி தீயில் குளிக்காத முன்பு அக்னியின் ஆவேசம் அடங்காது போலிருந்தது ஏக்கத்துடன் உதயசிங்கையும் பன்னாவையும் கடைசித் தடவையாக ஏற இறங்கப்பார்த்தாள். அவ்வாழ்ந்த பார்வையில் தெய்வீகம் பொருந்தியிருந்தது. அப்பார்வை தாயின் மாண்பை வெளிப்படுத்தியது அப் பார்வை உண்மைச் சிநேகத்தின் சக்தியை ருசுப்படுத்தியது கர்ணாவதியின் கண்களிலிருந்து விலைமதிக்க முடியாத வைரமணிபோன்ற இரண்டு நீர்த்துளிகள் கன்னத்தின் வழியே சிதறின.

"என்—உன் அருமை உதய சிங்கைக் கை-வி-டா—" என்று ஆவேசக் குரலில் கத்தினாள் அவள். பாவம், அடுத்தகணமே நெருப்பில்நீரானாள்

* * * *

'ஆ' வென்றலறிக் கண்களைப் பொத்தியபடி தொப்பென்று கீழே விழுந்த பன்னாவும், 'அம்மா' வென்றலறிய பூது ஸ்மரணையற்றுக்கிடந்த உதயசிங்கும் வெகுநேரம்வரை எழுந்திருக்கவேயில்லை.

"இன்றோடு ராணா சங்கா (உதயசிங்கின் மாண்டுபோன தகப்பன்) வம்சமே நாஸ்தியாகி விடும்போலிருக்கிறது. உதயசிங்கைக் கொலை செய்வதாக நிச்சயித்துவிட்டார்கள். நம் ராஜ்யத்திற்கே விநாசகாலம் கிட்டிவிட்டது" என்று தாழ்ந்த குரலில் சொல்லிக்கொண்டே பன்னாவின் அறைக்குள் ஓடிவந்தான் ஒரு சேவகன். இவனொருவனே உதயசிங்கின் க்ஷேமத்தில் கண்ணுங் கருத்துமா யிருப்பவன். மணல் மயமான ஸஹாரா பாலைவனத்தில்கூட ஒரு சில தென்னை மரங்கள் நிழல் தரவில்லையா?

பன்னாவுக்குத் தலை சுழல வாரம்பித்தது. துக்ககரமான எண்ணங்களும் பயங்கரமான அநுமானங்களும் பன்னாவின் உள்ளத்தைக் கலக்கின.

கால தாமதம் காரியசித்திக்கு இடைஞ்சலாக முடியும் என்றெண்ணி, "உதய சிங்கைக் காப்பாற்றியே தீரவேண்டும். ராணா சங்காவின் வம்சம் ஒருபொழுதும் நாஸ்தியாகாது. மீவார் தேசத்து சிம்மாசனம் அவனின்றி ஒருபோதும் சோபிக்காது" என்று திடச்சித்தத்துடன் சொன்னாள்.

"ஆனால் உதய சிங்கை எப்படி அம்மா காப்பாற்ற முடியும்? இராஜத் துரோகிகள் நிறைந்த ராஜ்ய மாச்சே இது. உதய சிங்குக்கு உதவி செய்யக் கூடியவர் ஒருவருமில்லையே" என்று சொல்லி விசனித்தான் அச்சேவகன்.

அதற்குப் பன்னா, "யாருடைய உதவியும் வேண்டாம். நீ மாத்திரம் உன் அருமை உதய சிங்கைக் காப்பாற்றிப் பாதுகாக்க ஒரு காரியம் செய்ய வேண்டும்" என்று கேட்டுக் கொண்டாள்.

அச்சேவகன், "நம் உதய சிங்குக்காக என் உயிரையும் தியாகம் செய்யத் தயாராயிருக்கிறேன். அம்மா, சீக்கிரம் சொல்லுங்கள், நான் என்ன காரியம் செய்ய வேண்டும்?" என்று துரிதமாகக் கேட்டான்.

"இரகசிய வழி மூலம் உதய சிங்கைக் கோட்டையடியில் கொண்டு வந்து கொடுக்கிறேன். அங்கு ஒரு கூடையைத் தயாராக வைத்திருந்து அதில் உதய சிங்கைப் படுக்க வைத்துத் தழைகளால் மூடி வெளியே கொண்டு போய்விடு. இரண்டு நாட்கள் சென்று நானும் உன்னுடன் வந்து விடுகிறேன்" என்று அச்சேவகன் தனக்கு உதவியாயிருக்கவேண்டிய வழியைச் சொன்னாள் பன்னா.

ஆனால் பன்னா சொல்படி நடப்பதில் ஒரு விபத்து நேரிடும் என்று அவனுக்குப்பட்டது. உடனே, "அம்மா, தாங்கள் சொல்படி செய்யச்சித்தமாயிருக்கிறேன். நாளைக்குத் தங்களறைக்கு வாவிருக்கும் கொலைப் பாதகனுக்கு என்ன சமாதானம்

செவிடு

"டெப்கில்லர்" செவிட்டுத் தன்மையை சாசுவதமாகப் போக்கிவிடும். இன்னும் காதில் ஏற்படும் இதர கோளாறுகளையும் அகற்றிவிடும். எவ்வளவு நாள்பட்ட செவிடாக விருந்தாலும் சரி, சிறிதும் சந்தேகமின்றி நிரந்தரமாக நிவர்த்திக்கப்படும்; செவிடர் செவ்வையாகச் செவியுறுகிறார். கால்செவிடு, அரைச்செவிடு அல்லது முழுச்செவிடு எதுவாகவிருந்தாலும் அக்கரையில்லை; நீண்டகால ஜலதோஷம், இருமல், ஜுரம், தொண்டைக் கோளாறு, மூக்குக் கோளாறு முதலிய எக்காரணங்களால் ஏற்பட்ட செவிடாயினும் சரி குணமாகிவிடும். சீழ்வடிதலும் நின்றுவிடும். ஆயிரக்கணக்கானவர்கள் குணம் பெற்றிருக்கின்றனர். விலை ரூ 5; தபால் செலவு 7-அணா

MAHAMBS TRADING COMPANY OF ASIA, Indian Depot, P O Box 2186 Bombay.

ஸ்டாக்கிஸ்ட்ஸ்:—அப்பா அண்டு கம்பெனி. 286, சைனா பஜார் ரோட், மதராஸ்.

சொல்வீர்கள்? அப்படுபாவி நாற்புறமும் ஆட்களை அனுப்பி என்னைப் பிடித்து வந்து, நம்மூவர் உயிருக்குமன்றோ உலை தேடிவிடுவான்" என்று கேட்டான் அச்சேசகவன்.

அதற்குப் பன்னுவிடமிருந்து "நான் சொல்வதைப்போல் செய். ஒரு கெடுதியும் வராது" என்ற பதில்தான் கிடைத்தது. கொலைப் பாதகனுக்கு என்ன சமாதானம் கூறுவதென்ற ஒரு பிரச்னைமாத்திரம் அவனை வாட்டிக்கொண்டேயிருந்தது.

ராணு சங்காவைக் கொன்ற பன்பீருக்கு இன்னும் மன நிம்மதி எற்படவில்லை. உதயசிங்குக்கு வயது வந்ததும் மறுபடி தனக்கு ஆபத்து நேரிடக்கூடுமென்றெண்ணி தன்னுடைய சகாக்களிடம் யோசனை கேட்டான். அக்கன்னெஞ்சர்கள் உதயசிங்கைக் கொன்றுவிடுவதென்று தீர்மானித்தார்கள். பன்பீரும் அதற்கிசைந்தான்.

பன்னுவுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. சீக்கிரத்தில் நேரவிருக்கும் சம்பவத்தை அறிந்திருந்ததால், அவளது நரம்புகள் கலையறியாத ஒருவன் மீட்டிய வீணைக் கம்பிகளைபோல் துடிதுடிக்க வாரம்பித்தன. அவளது மனம் சேவகனிடம்உள்ள உதயசிங்கின் முகலாவண்யத்திலேயே லயித்துப் போய்விட்டது.

திடீரென யாரோ கதவைத் திறக்கும் சப்தம் கேட்டது. பன்னு திரும்பிப்பார்த்தாள். உடனே அவள் முகம் சவம்போல் வெளுத்தது. அதரங்கள் சில்லிட்டு ஆடின. உடல் நடுங்கியது. வயிறு 'பகீர்' என்று எரிய வாரம்பித்தது.

"உதய சிங்கு எங்கே" என்று அதிகார தோரணையில் கேட்டுக் கொண்டே அறைக்ள் நுழைந்தான் பன்பீர்.

பேச்சு மூச்சின்றி குழந்தை படுத்திருக்கும் இடத்தைச் சுட்டிக் காட்டினாள் பன்னு.

பன்னு என்ன செய்வாள், பாவம்? கர்ணுவதியின் கடைசி வார்த்தைகள அவள் மனதை விட்டகலவேயில்லை. எப்படியாவது உதய சிங்கைக் காப்பாற்றியே தீருவது என்று உறுதி கொண்டிருந்தாள். அவள் அபரிமிதமான ராஜ விசுவாசங்கொண்டவள். தவிர ராஜபுத்திரவம்சத்திற் பிறந்தவளாயிற்றே! தன்னிடம் அடைக்கலம் புகுந்த குழந்தையைக் காப்பாற்ற தன் வயிற்றிற் பிறந்த குழந்தையைப் பறிகொடுக்கத்தயாராயிருந்ததில் வியப்பில்லையன்றோ?

ஆதலால் தான், பன்னு நவமாத பரிபூர்ண கர்ப்பவதியாயிருந்தபோது, இடுப்புவலி எற்பட்டபோதெல்லாம் இலகுவாய்ப் பிடித்துதவிய அவளது கைகளே, பிரசவ காலத்திற்குப் பிறகு அக்குழந்தையைத் தேய்த்துக் குளிப்பாட்டிப் பொட்டிட்ட அவளது கைகளே, ஆனந்தம் மிகுந்த பொழுது குழந்தையை வாரி அணைத்து முத்தமிட உதவிய அவளது கைகளே, பாலுஞ் சோறும் ஊட்டிப் போஷித்து வளர்த்த அவளது கைகளே இன்று, பெற்றவயிறு பற்றி எரிய, கத்திக்கிரையாக்க இசைந்து குழந்தையைச் சுட்டிக் காட்டின.

உடனே கொலைப்பாதகனை பன்பீர் குழந்தை அருகே சென்றான். குனிந்து அவன் முகத்தைப் பார்த்தான். அவனுக்கு அடக்க முடியாக சிரிப்பு வந்துவிட்டது; 'கொல்' லென்று சிரித்தான். உதயசிங்கின் ஆடையால் அலங்கரிக்கப் பெற்றிருந்த அக் குழந்தையை உதயசிங்கு என்றெண்ணினான். இனிமேல் தன்னை வெல்வாருமில்லை, கொல்வாருமில்லை என்ற கர்வம் அடைந்தான். சடக்கென்று தன் இடுப்பில் தொங்கிக் கொண்டிருந்த கத்தியை உருவினான் ஓங்கி மார்பின்மேல் ஒரு குத்து, எங்கும் ஒரே ரத்தச் சிதறல்கள்.

பாவனையிற் பித்தரைப்போலலைந்து, பரமசிவன் போலுருவம் படைத்து, அஷ்டாங்க யோக சித்தி பெற்ற ஒரு பரம யோகி யோகத்தில்தான் பூரண இன்பத்தைக் காண்பார். பெண்கள் அழகைக் கண்டு மனம் பித்தங்கொள்ளும் ஒரு சிலருக்குப் போகோப போகங்களிலேதான் வெகுபிரீதி. தயை தாட்சண்யமற்ற பன்பீருக்குத் தரையில் சவமாய் ரத்த வெள்ளத்தில் மிதக்கும் குழந்தையைக் கண்டதுந்தான் உற்சாகமேற்பட்டது. முகம் மலர்ந்தது கன்னெஞ்சர்களான கொலைப் பாதகர்களுக்குக் கொலையில் தான் இன்பம் போலும்!

பன்பீர் அறையைவிட்டுச் சென்றதும், பன்னு தன் குழந்தையருகே ஓடினாள்; வாரி எடுத்தாள்; எங்கும முத்தமிட்டாள்; ஓவென்றழுதாள். அரண்மனையிலிருந்த சகல ஸ்திரீகளும் அன்றோடு ராணு சங்காவின் வம்சம் நாஸ்தியாகிவிட்டதென்றழுது புலம்பினார்கள்.

பன்னு குழந்தைக்குச்செய்ய வேண்டிய கிரியைகளை எல்லாம் செய்து முடித்தாள். உடனே அவள் மனம் காரியத்தின்மேல் தனிக்கவனம் செலுத்தும்படி அவளைத் தூண்டிற்று. அடுத்த கணமே உதய சிங்கும் சேவகனும் உள்ள இடந்தேடிச் சென்றாள்.

முழு விபரமும் பன்னுவால் சொல்லக் கேட்டறிந்த அச்சேவகனின் கண்களிரண்டும் சுழலவாரம்பித்தன. புத்தி ஸ்வாதீனமிழந்தான். அவனது இரண்டு கால்களும் அவனைத் தாங்க மறுத்தன. உடனே தொப்பென்று கீழே விழுந்தான்.

சேவகன் மூர்ச்சை தெளிந்தெழுந்ததும் இருவருமாக கோமல்மர் என்னும் ராஜ்யத்தை நோக்கி நடந்தனர். வழியில் அவர்கள் வெயிலால்வதைந்து வாடினார்கள்; பனியாலும் பசியாலும் மெலிந்தார்கள். ஆனால் மனந்தளர்ந்தாரில்லை உதயசிங்கின் க்ஷேமாபிவிருத்தியில் கண்ணுங் கருத்துமாயிருந்தாகள். அவனுக்காக வாழ்நாளையும் அர்ப்பணம் செய்யக் கங்கணம் கட்டியிருக்கும் அவ்வுத்கிருஷ்டமான பரோபகார ஜீவனகளுக்கு வெயிலேது, பசியேது?

ஆசாஷா என்னும் ஜைனன் கோமல்மர் என்னும் நாட்டின் கவர்னர். அவனை எவ்வளவோ தாழ்ந்து உதயசிங்கைப் பாதுகாக்கும்படி வேண்டியும் பிரயோஜனப்படவில்லை. பன்னுவுக்குப் புக்கிடம் வேறில்லாததால் அவ்விடம் விட்டுப் பெயராமல் கவர்னரை மேலும் மேலும் கெஞ்சத் தொடங்கினாள். பன்னுவின் மனமுருக்கும் நிலைமையை உள்ளபடியுணர்ந்த கவர்னரின் தாயார் உதய சிங்கைப் பாதுகாத்து ரக்ஷிக்கும்படி தன்மகனை வற்புறுத்தினாள். கவர்னரும் மனமிசைந்து உதய சிங்கைத் தன் மைத்துனன் என்று எல்லாரிடம் சொல்லிக்கொண்டார். அதனால் இராஜாங்கத்தில் சந்தேகத்திற்கிடமில்லாதிருந்தது.

* * * *

பன்னு கண்ட பகற் கனவு ஓர் உண்மைச் சம்பவமாக மாறுங்காலமும் விரைவில் வந்தது உதயசிங்குக்கு யுக்த வயது வந்ததும் பல்லோர் முன்னிலையில், அவன் தேகத்திலுள்ள குறிகளைக் கொண்டு, ராணுசங்காவின் மகன் என்று ருசுபபடுத்தப்பட்டது. பன்பீரின் கொடுங்கோலைச் சகிக்க மாட்டாத பொது ஜனங்களும் இராஜாங்க அதிகாரிகளும் ஏகமனதாக உதயசிங்கையே சித்தூருக்கு (மீவார் தேசத்தின் தலைநகருக்கு) அரசனாக்கினார்கள். உதய சிங்கு ராஜ்யபாரம் வகித்ததையறிந்த குடி ஜனங்களுக்குள் ஆனந்த பாவசமும், ஆரவாரமும், குதூகலமும், கொக்கரிப்பும் மிகுந்திருக்க, பன்னுமாத்திரம் காகரவென்று கண்ணீர் விட்டாள். உதயசிங்குக்கு உண்மைத் தோழனாய் உதவ தன் மகனில்லையே என்ற விசனம், பாவம்!

சிறந்த கூந்தல் ஆகாரம்

உடலுக்கு எப்படி நல்ல உணவு அவசியமோ அதே மாதிரி கூந்தலுக்கும் சிறந்த ஆகாரம் அவசியமானது. எனவே உலகப்புகழ்பெற்ற காம்னியா ஆயில் (ரிஜிஸ்டர்ட்) உபயோகியுங்கள். கூந்தலின் ஆரோக்கிய வளர்ச்சிக்கு அத்யாவசியமான சத்துக்கள் பல. சேர்ந்தது. மூளைக்குக் குளிர்ச்சி ; துல்லிய மணம் நிறைந்தது.

விலை புட்டி 1-க்கு ரூ. 1.
,, 3 புட்டிகள் ரூ. 2-10.

வி. பி. சார்ஜ் தனி.

தபால் செலவுக்காக அரையணு ஸ்டாம்பு அனுப்புவோர்க்கு சாம்ப்ள் இலவசம்.

ப்ராசீன மலர்களின் சுவாசனையும், புத்தப் புதிய இனிமையும் வாழ்விற்கு மகிழ்ச்சியூட்டுபவை; இவ்வளவையும் கீழ்க்கண்டதன் வாசனையில் நன்கு அனுபவிக்கலாம்.

ஆட்டோ டில்பஹார்

(ரிஜிஸ்டர்ட்)

ஒரு சில துளிகள் பல நாட்களுக்கு அழியாத வாசனையூட்டும்; ஏனெனில் ஆட்டோ டில்பஹாரில் விரைவில் ஆவியாக மாறிவிடும் ஆல்கஹால் கிடையாது.

விலை ¼ அவுன்ஸ் ரூ. 1-4. 1 டிராம் 12 அணு

தபால் செலவு தனி.

சோல் ஏஜெண்டுகள்:—

The Anglo Indian Drug & Chemical Co
BOMBAY 2.

சேலத்தில் முதல் முதல் ஸ்தாபிக்கப்பட்ட நர்சரி தோட்டம்

3 வருஷத்தில் காய்க்கக்கூடிய ஒட்டுமாஞ்செடிகள், ஒட்டுப்பழ வர்க்கச்செடிகளும் இன்னும் இதர செடிகளும் கிடைக்கும். இங்கிலீஷ் அல்லது நாட்டுக் காய்கறி, இங்கிலீஷ் புஷ்ப விதைகள், 20 சாம்பல் பாக்கெட் விலை ரூ. 2-10. சாம்பல் பாக்கெட்விலை ரூ 1-4 கேட்லாக் இனாம்.

ச. கோ. இ. காதர்மீரா சாயபு,
ஹெட் நர்சரி தோட்டம், சேலம்.

இந்தியத் தேத்தண்ணீரால்

தேக திடத்தை விருத்தி செய்

சரீரம் ஆலயத்திற்கொப்பாக அடிக்கடி சொல்லப்படுகிறது. அதை நம்பி நாம் நம் சரீரத்தை சுத்தமாகவும் ஆரோக்கியமாகவும் திடமாயும் வைத்துக் கொள்ள முயலுகிறோம். களைத்த சரீரமோ அல்லது சுறுசுறுப்பில்லாத மனமோ இயற்கையான நிலைமையிலிருப்பதில்லை. அவைகளை சரியான நிலைமையில் வைத்துக்கொள்ள ஆரோக்கியமான பழக்கங்களைப் பின்பற்ற வேண்டும்.

நம்முடைய வீரியம் குறையாமல் ஒரே நிலைமையில் வைத்துக்கொண்டு வருவதற்கும் தேக திடத்தை விருத்தி செய்வதற்கும் தேத்தண்ணீரை வழக்கமாக அருந்துவதை விட சிலாக்கியமான வழி வேறொன்றுமில்லை.

இந்திய தேயிலை மிகவும் பரிசுத்தமானது. மனித சரீரத்திற்கு யாதொரு கெடுதலும் செய்யாதது.

தேத்தண்ணீர் செய்யும் முறை—சுத்தமான தண்ணீரை கொதிக்க வை. உலர்ந்த பாத்திரம் ஒன்று எடுத்து ஒவ்வொருவருக்கும் ஒரு டீ ஸ்பூன் வீதமும் அதிகமாக ஒரு ஸ்பூன் நல்ல இந்திய தேயிலையைப் போட்டு உடனே கொதிக்கும் ஜலத்தை விடு. ஐந்து நிமிஷம் கழித்து வடிக்கட்டி பாலையும் சர்க்கரையும் சேர்த்துக் கொள்ளவும்.

இந்தியாவின் சந்தோஷமும் பெருமையும் –

இந்திய தேயிலையே

IK 39